# நோயும் மருந்தும்



இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

specimen

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 11

# நோயும் மருந்தும்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு :

**சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு**

**இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை**

**சென்னை - 600 106**

**2008**

## பதிப்புத் தகவல்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | நோயும் மருந்தும்<br>(தமிழ் மருத்துவ நூல் வரிசை - 11)<br>ஓலைச்சுவடி தொகுப்பு நூல் |
| பதிப்பு | : | சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு<br>இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை<br>சென்னை - 106 |
| பதிப்புரிமை | : | தமிழ் நாட்டரசு |
| பொருள் | : | சித்த மருத்துவம் |
| பதிப்பாண்டு | : | முதற்பதிப்பு 2008 |
| பக்கங்கள் | : | xii + 92 = 104 |
| படிகள் | : | 1000 |
| தாள் அளவு | : | 1 × 8 டெம்மி |
| அச்சுப் புள்ளி | : | 11 புள்ளி |
| விலை | : | ரூ. 35.00 |
| கட்டமைப்பு | : | சாதாரண அட்டைக்கட்டு |

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : 24661807, 24987562

**இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை,**

**சென்னை - 600 106.**

**சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு**

## நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்

**முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன்,** பிஎச்.டி

சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர்

**மரு. பி.ஆர். சகுந்தலா,** எம்.டி. (சி)

உதவி பதிப்பாசியர்கள்

**திரு. த. அழகப்பராசு,** M.A., M.A., M.L.i.S., M.Phil., B.Ed.

**திருமதி செ.இரா. பிரசன்னா,** M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்

**திரு. வெ. சாரங்கபாணி**

**திருமதி த. லெட்சுமி**

**திருமதி நா. பாக்கியசுந்தரி,** B.A.

**ஜி.ஏ. ராஜ்குமார்,** இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையரகம், சென்னை - 600 106.

# வாழ்த்துரை

ஓலைச் சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பிக்கும் பணியை நம் இந்திய மருத்துவத்துறையின் சுவடி நகல் பிரிவு செய்து வருகிறது. அவ்வகையில் தமிழ் மருத்துவ வரிசையில் 11-ஆவது நூலாக வெளிவருகிறது **நோயும் மருந்தும்** எனும் இந்நூல்.

நோய்களையும் அதற்கான மருந்துகளையும் தருகின்ற இந்நூல் இரண்டு ஓலைச்சுவடிகளினின்றும் திரட்டப் பட்டுள்ளது. எளிமையான மருத்துவ முறைகளைக் கொண்ட இந்நூலை வெளியிடும் பணியை மேற்கொண்ட இணை இயக்குநர், சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு) ஆய்வு மருத்துவ அலுவலர், தமிழ்ப்புலவர்கள், நகலெடுப்போர், மருத்துவ நிலை திருத்தங்களை மேற்கொண்ட மரு. சி. இராமலட்சுமியம்மாள், மரு. கோ. கிருஷ்ணவேணி, ஆகியோர்க்கும், அச்சிட்ட யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வகையான நூற்கள் மென்மேலும் வரவேண்டும் என்பதே என் விருப்பமாகும்.

**சிறப்பு ஆணையர்**

# பதிப்புரை

ஓலைச்சுவடியினின்றும் முதலில் அச்சேறும் நூற்களில் இதுவும் ஒன்று. நமது சுவடி நகற்பிரிவிலுள்ள (*533, 162d*) இரண்டு சுவடிகளின் தொகுப்பு நூலிது. தமிழ் மருத்துவ நூல் வரிசையில் ''நோயும் மருந்தும்'' ஆறாவது நூலாக அமைகிறது.

பாடலும் உரையுமாகப் பல நூற்கள் வெளிவரும்போது இந்நூல் உரைநடையாகவே அமைக்கப்பட்டுள்ளது. இச்சுவடிகளில் காணப்பட்ட கருத்துகள் சேகரிக்கப்பட்டு எழுதப்பட்டனவாகத் தெரிகின்றன. ஆசிரியர் பாடம் பயிற்றுவிக்கும்போது மாணாக்கன் எடுத்துக்கொண்ட குறிப்பாக இருக்கலாம்; அல்லது தனக்கு வேண்டிய மருத்துவக் குறிப்புகளைப் பயன்பாட்டு நோக்கில் பயனாளி குறித்து வைத்ததாக இருக்கலாம்.

இவ்வாறு தொடர்பின்றி ஆங்காங்கே காணப்பட்ட கருத்து களை அவ்வாறே வெளியிடுவது பயனளிக்காது. எனவேதான் அவற்றை ஒரு நிரல்படுத்த முயன்றபோது தலைமுதல் தொடங்கி கீழ்நோக்கி கண், மூக்கு, வயிறு என அமைத்துள்ளோம்.

**உரைநடையினைப் பதிப்பித்தல்**

செய்யுட்பாக்களாலான இலக்கியங்களைப் பதிப்பிப்பதில் சில சிரமங்கள் என்றால், உரைநடையில் உள்ளவற்றைப் படியெடுத்துப் பதிப்பிப்பதில் வேறுசில சிரமங்கள் காணப்படும். சுவடியில் காணப்படும் எழுத்து என்ன எழுத்து என்ற ஐயம் வரும்போது - குறிலா, நெடிலா, துணைக்காலா என்ற மயக்கம் சுவடியைப் பதிப்பிக்கும்போது அடிக்கடி தலையைக் காட்டும்.

அவ்வாறான இடங்களில் செய்யுட்பாக்களெனில் அசை, சீர், தளை, அடி, தொடை போன்றவற்றைக் கொண்டு பாடலைச் சீர்செய்ய முடியும். ஆனால் உரைநடையெனில் அவ்வாறு நேர் செய்ய இயலாது. எனவே நேர்செய்ய இயன்றவற்றை மருத்துவர் களின் ஆலோசனைகளுடன் நேர்செய்துள்ளோம்.

**பொருளமைப்பு**

இரண்டு ஓலைச்சுவடியின் கருத்துகளை ஒன்றாக்கி அவற்றை வகைப்படுத்தினோம். தலை முதல் பாதம் வரை அமைத்துக் கொண்டோம். ஆனால் சில நோய்கள் நாம் சொன்ன பிரிவிற்கும் அடங்காமல் இருந்தன. அவற்றைத் தனிப்பிரிவாக பிறநோய்கள் எனத் தலைப்பிட்டு அமைத்தோம்.

சில நேரங்களில் குறிப்பிட்ட ஒரு மருந்து சில/பல நோய்களுக்குப் பயன்படும். அப்படி அமையும்போது ஒரு மருந்து இரண்டிற்கும் மேற்பட்ட இடங்களில் அமைக்க வேண்டியதாகிறது. அவ்வாறு அமைத்தால் வந்ததே திரும்பவும் வருவதுபோலத் தோன்றும் என்பதால் முதன்மையான இடத்தில் அம்மருந்து அமைக்கப்பட்டுள்ளது, அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட நோயின் தலைப்புகளைத் தலைப்பாகத் தந்து (பலநோய்க்கு ஒரு மருந்து) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## பதிப்பு அமைப்பு

சுவடியினின்று உருவாகும் இப்பதிப்பு உரைநடையில் அமைக்கப்பட்டாலும், அவற்றிற்குத் துணையாகப் பாடல்கள் கிடைக்கும்போது அவற்றை அடிக்குறிப்பில் சேர்த்து பதிப்பித் துள்ளோம்.

மருந்து முறைகளை முடிந்தவரை அக/புற மருந்தின் வாழ்நாள் அடிப்படையில் அமைத்துள்ளோம். ஒரு மருந்து முறையில் ஒன்றிற்கு மேற்பட்டவை வரும்போது கற்கம் - 1, கற்கம் - 2, கற்கம் - 3 என்பன போன்று அமைத்துள்ளோம்.

தோல் நோய்க்கான மருந்துகள் வருமிடங்களில் அதிகமான எண்ணிக்கையில் மருந்து சரக்குப் பொருட்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வாறு அமையும்போது மருந்து செய்முறையும் நீண்டு விடுகிறது.

சுவடியின் தலைப்புகளில் பயின்றுவந்த பேச்சு வழக்குச் சொற்களில் உள்ள பிழைகள் மட்டும் களையப்பட்டு பதிப்பிக்கப் பட்டுள்ளன. எழுத்து வழக்கிற்கு மாற்றும்போது அதில் சில சிக்கல்கள் தோன்றியதால் அவ்வாறானவற்றை மட்டும் பேச்சு வழக்காகவே கையாண்டுள்ளோம்.

சில மருந்துகள் இருவேறு இடங்களில் தனித் தலைப்பில் சொல்லப்பட்டிருந்தன. இரண்டையும் ஒன்றாக்கி ஓரிடத்திலேயே பதிப்பித்துள்ளோம். பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள செய்திகள் கற்போர்க்குப் பெரிதும் பயன்படும்.

மூல நூலிலிருந்து - ஓலைச் சுவடியிலிருந்து முதன்முதலில் அச்சேறுகின்ற நூல் என்பதால் பிழைகள் நேர்ந்திருக்கலாம். அவற்றை ஆன்றோர் பொருத்து, பிழைகளை எமக்கறிவித்தால் இனிவரும் பதிப்புகளில் அவற்றைச் சீர்செய்து கொள்ளலாம்.

# பொருளடக்கம்

பக்கம்

1. **தலைநோய்** 1-5

அரிதார பற்பம் - கபாலக்குத்துக்குத் தலைமுழுக் கெண்ணெய் - கபாலக் கரப்பானுக்கு எண்ணெய் - கபால வலிக்கு எண்ணெய் - கபால சன்னிக்குத்திரி (புகை) - மண்டைச் சூலைக்கு எண்ணெய் - கபால சூலைக்கு எண்ணெய் - தலைவலிக்கு நாசிகாபரணம் - தலைவலிக்கு எண்ணெய் - ஒற்றைத் தலைவலிக்கு நசியம் - ஒற்றைத் தலைவலிக்குப் புகை - ஒற்றைத் தலைவலிக்கு எண்ணெய் - முகத்தில் வரும் வங்குக்குப் பூச்சு

2. **கண்ணோய்கள்** 5-7

பொன்னாங்காணித் தைலம் - கண்ணில் நீர்வடிதலுக்குப் பூச்சு - கண்வலிக்குப் பூச்சு - நேத்திர வாய்வுக்கு எண்ணெய் - நேத்திர வாய்வுக்குக் களிம்பு - கண்வலிக்குக் கலிக்கம்

3. **காது நோய்கள்** 7-7

காது நோய்களுக்கு எண்ணெய் - காது மந்தத்திற்குச் சொட்டு மருந்து

4. **பீனசம்** 8-9

பீனசத்தின் குறிகுணம் - எண்ணெய் - வெட்டி வேர் எண்ணெய் - புகை - நாசிகாபரணம் - நசியம்

5. **வாய் நோய்கள்** 9-9

வாய் நீரூறலுக்குக் குடிநீர் - வாய்வலிக்குக் கொப்பளிக்கும் நீர்

6. **பல் நோய்கள்.** 10-12

பல்கடுப்புக்குச் சூரணம் - பல்கடுப்புக்கு மருந்து - பல் கடுப்புக்குப் பொடி - பல் சூலை - பல்லரணை - நாக்குப்புற்று - சிங்கநோய்க்கு எண்ணெய் - பல்வலிக்குக் கொப்பளிக்கும் நீர் - பல் வாதத்திற்குக் கொப்பளிக்கும் நீர் - பல் வாய்விற்கு மருந்து - பல் வலி - வாய்விற்கு வேது

7. **விக்கல், வாந்தி நோய்கள்** 12-14

விக்கல், வாந்திக்குச் சூரணம் - வாந்திக்கு நாரத்தங்காய் சர்பத் - கண்டமாலைக்கு நெய் - வாந்திக்குக் குடிநீர் - தாக வாந்திக்குக் குடிநீர்

**8. சுவாச, நெஞ்சக நோய்கள்** 14-19

மேல் சுவாசத்திற்குக் கற்கம் - மேல் சுவாசத்திற்குச் சூரணம் - நெஞ்சு வலிக்குக் குடிநீர் - இளைப்பு இருமலுக்குச் சாறு - இருமலுக்குக் குடிநீர் - கோழை இருமலுக்கு மருந்து - கபநோய் களுக்குச் சிருங்கி பற்பம் - காசமிருமலுக்கு அடை - எலும்புருக்கி, பிரமேகத்திற்கு இளகம் - மந்தார காசத்திற்கு இளகம் - காசத்திற்குத் தாளக பற்பம் - காசத்திற்குச் சங்கு பற்பம் - காசத்திற்கு அரிதாரப் பற்பம் - காசத்திற்கு மருந்து - சயத்திற்குத் தாளக பற்பம் - சயநோய்களுக்குத் தங்க பற்பம் - கபத்துக்குத் துருசு பற்பம்

**9. வயிற்று நோய்கள்** 20-29

வயிற்று வலிக்குக் கற்கம் - வயிற்று வலிக்குச் சூரணம் - வயிற்றுவலிக்குச் சங்கு சுண்ணம் - வயிற்றெரிவுக்குச் சூரணம் - வயிற்றுப் பொருமலுக்கு ஏலாதிச் சூரணம் - பசியெடுக்க சூரணம் - சகல வாய்வுக்கு அட்ட இளகம் - அண்டவாதம், வயிற்று வலிக்கு எண்ணெய் - வாய்வு பிடிப்புக்கு மாத்திரை - வயிற்றுக் கடுப்புக்குக் கருவேப்பிலை இளகம் - மகோதரத்திற்குச் செந்தூரம் - மகோதரத்திற்குச் சாரக்கட்டு - குன்மத்திற்குக் குடிநீர் - அட்ட குன்மத்துக்கும், தச வாய்வுக்கும் எண்ணெய் - குன்மத்துக்கு அரைப்பு மெழுகு - குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை - கழிச்சல் களுக்குக் கருவேப்பிலை இளகம் - குழந்தைகள் கழிச்சலுக்குக் குடிநீர் - கழிச்சலுக்குக் கற்கம் - கழிச்சலுக்குக் களி - இரத்தக் கழிச்சலுக்கு அன்னப்பொடி - கழிச்சலுக்குச் சூரணம் - இரத்தக் கடுப்புக்குச் சூரணம் - சலக்கழிச்சலுக்கு மருந்து - கழிச்சலுக்குச் சாறு - ஊறல் குடிநீர் - மலட்டுப்புழு விழுவதற்குச் சாறு - மலட்டுப் புழு விழுவதற்குக் கற்கம் - மலட்டுப்புழு விழுவதற்குச் சூரணம்

**10. சோகை, காமாலை நோய்கள்** 29-30

சோகைக்குக் குடிநீர் - காமாலைக்குக் கற்கம் - காமாலை சோகைக்குச் சூரணம் - மஞ்சள்காமாலைக்கு எண்ணெய்.

**11. கிரந்தி, சூலை, அரையாப்பு** 30-33

கிரந்திக்கு எண்ணெய் - கிரந்தி, சூலைக்குக் காந்த பற்பம் - கிரந்திக்கு மாத்திரை - கிரந்தி, சூலை, குட்டம், வெடி சூலைக்குப் புகை (திரி) - அரையாப்பு, கிரந்திப் புண்ணுக்கு மாத்திரை - அரையாப்புக் கட்டிக்குக் கட்டு - அரையாப்புக்குப் பற்று - அரையாப்புக் கட்டிக்குச் சீலை

**12. தாதுவிருத்தி** 33-35

இந்திரியம் கட்ட மருந்து - விந்து கட்டுக்குச் சூரணம் - தாதுவிருத்திக்குக் கற்கம் - தாதுவிருத்திக்குச் சூரணம் - தாது விருத்திக்குப் பிட்டு - தாது விருத்திக்கு மதன குடோரி இளகம் - தாது விருத்திக்குச் சிட்டுக் குருவி இளகம் - தாது விருத்திக்கு

இலேபன தம்பன இளகம் - தாது விருத்திக்கு அரைப்பு மெழுகு - தாது விருத்திக்கு முத்து பற்பம்

**13. மல, சிறுநீர் தொடர்பு நோய்கள்** 36-42

மலசலக்கட்டுக்குப் பற்பம் - நீரடைப்புக்குச் சாறு - நீர்க்கட்டுக்குக் கற்கம் - நீர்க்கட்டுக்குச் சூரணம் - நீர்ச்சுருக்குக்கு இலேகியம் - நீர்க்கட்டுக்குப் பற்பம் - நீரழிவுக்குக் கற்கம் - நீரழிவுக்கு வங்கச் செந்தூரம் - வெகு மூத்திரத்திற்கு மாத்திரை - சிறுநீர் அடிக்கடி கழிதலுக்குச் சூரணம் - கல்லெரிப்புக்கு மருந்து - வெள்ளைக்குக் குடிநீர் - வெள்ளைக்குக் கற்கம் - வெள்ளைக்கு உருண்டை - நாட்பட்ட வெள்ளைக்குக் கற்கம் - வெள்ளைக்குச் சூரணம் - வெள்ளைக்கு வெண்ணெய் - இரத்த வெள்ளைக்கு எண்ணெய் - வெட்டைக்குத் தைலம் - வெள்ளைக்கு மருந்து - சிலேத்தும வெள்ளைக்குப் பற்பம்

**14. மூல நோய்கள்** 42-46

மூலத்துக்குக் கற்கம் - மூலத்துக்குச் சூரணம் - மூல வாய்வுக்கு வெண்ணெய் - மூலத்துக்குப் பிட்டு - மூலத்திற்குப் பொன்னாங்காணி நெய் - மூலத்திற்குக் கருணைக்கிழங்கு மாத்திரை - உள்மூலம், அதிசாரக் கிராணிக்கு மாத்திரை - உள்மூலத்துக்கு மருந்து - உள்மூலத்திற்கு மருந்து புகை - புறமூலத்துக்கு மருந்து - உறுப்பு தள்ளினதுக்குக் கற்கம் - ஆசனப்பவுத்திரத்துக்கு உட்களி - பவுத்திரத்துக்கு எண்ணெய்

**15. சுரம், சன்னி நோய்கள்** 46-53

அனைத்துச் சுரத்திற்கும் மாத்திரை - சுரத்திற்குக் குடிநீர் - அனைத்துச் சுரத்திற்குக் கஸ்தூரி மாத்திரை - அனைத்துச் சுரத்திற்கும் இராமபாணம் - சுரங்களுக்கு அர்த்தநாரீசுரன் மாத்திரை - சுரங்களுக்கு இலிங்க செந்தூரம் - அத்திசுரத்திற்கும் பித்தத் திற்கும் மருந்து - குளிர்இல்லாத வறட்டுக் காய்ச்சலுக்குக் குடிநீர் - சீதசுரத்திற்குக் கற்கம் - நான்காமுறைக் காய்ச்சலுக்குச் சாறு - நான்காமுறைக் காய்ச்சலுக்குக் கற்கம் - நான்காம் முறைக் காய்ச்சலுக்கு மருந்து - பித்த சுரத்திற்குக் குடிநீர் - வாதபித்த சுரத்திற்குக் குடிநீர் - உள்சுரத்திற்கு எண்ணெய் - உள்காய்ச்சலுக்கு மருந்து - சன்னிக்குச் சுரசம் - சன்னிக்குப் பூபதிக் குளிகை - சன்னிக்கு ஆனந்த பயிரவ மாத்திரை - சுரம், சன்னிக்கு வயிரவ மாத்திரை - சுரம், சன்னிக்குத் தங்கரேக்கு மாத்திரை - சுரம், சன்னிக்கு கருவங்க பற்பம் - சன்னி வாதத்துக்கு ஒற்றடம் - சன்னி வாதத்துக்குப் பொட்டணம் - சன்னிக்குப் புகை

**16. மேகம், தோல் நோய்கள்** 53-62

மேகத்துக்குக் கற்கம் - சர்வாங்க மேகசூலை, வாதக் குடைச்சல் இவற்றிற்கு உட்களி - மேகம், சிரங்கு, தினவுக்கு நிலாவாரை நெய் - மேகத்துக்கு நெய் - மேகத்துக்கு எண்ணெய் - மேகம்,

கரப்பான், கண்நோய்களுக்கு எண்ணெய் - மேகத்துக்குச் சுடர்த் தைலம் - மேகத்துக்குக் குழம்பு - மஞ்சள் வெள்ளைக்கு (மேகம்) மருந்து - மேகத்துக்கு மருந்து (உரைமோர்) - மேக வெட்டை இருபத்தொன்றுக்கும் - கைகால் ஊறலுக்கும் எண்ணெய் - மேகத்துக்குத் தாமிர பற்பம் - அனைத்து மேகத்துக்கும் கல்யாண பூசணி இளகம் - புண்ணுக்குக் கட்டு - சிரங்குக்குப் பூச்சு - புண்ணுக்கு நசியம் - இரணத்திற்குக் களிம்பு - கொறுக்குப் புண்ணுக்குச் சீலை - இரணத்திற்கு மருந்து சீலை - நரம்புச் சிலந்திக்குச் சாறு - தோல் நோய்களுக்கு வல்லாதி இளகம் - தோல் நோய்களுக்குக் கால பயிரவ எண்ணெய்

17. பிறநோய்கள் 62-77

வாதங்களுக்கு நவச்சாரபற்பம் - செய்யான்கடி, எலிக்கடி, காட்டுப் பூனைக் கடிக்கு மருந்து - விசக்கடிக்கு அரிதார பற்பம் - விஷத்துக்கு நசியம் - பூப்படையாதவர்களுக்குச் சாறு - பித்தத்திற்கு இஞ்சி சர்பத் - பித்தத்திற்கு நாரத்தம் பழ சர்பத் - பித்தத்திற்குக் கீழாநெல்லி எண்ணெய் - பித்த சூட்டுக்கு எண்ணெய் - சூட்டுக்கு எண்ணெய் - வயிற்றில் இறந்த பிள்ளை வெளிவர கற்கம் - வயிற்றில் இறந்த குழந்தை வெளிவர எண்ணெய் - குளிக்கும் நீர் - குளிர்ச்சிக்கான எண்ணெய் - குளிர்ச்சி எண்ணெய் - கணைக்கு எண்ணெய் - குழந்தைகளுக்குக் கழிச்சல் ஆவதற்கு அரைப்பு மெழுகு - சுகபேதி மாத்திரை - இரவு கழிச்சல் ஆவதற்கு மாத்திரை - நரித்தலை வாதத்துக்குப் பொட்டணம் - வெப்ப நோய்களுக்கு ஏலாதிச் சூரணம் - வெப்ப நோய்களுக்குப் புளியாரை யெண்ணெய் - இரத்த பிரமியத்துக்கு மருந்து - பிரமேகம், சீழ்இரத்தம் விழ சாறு - பிடிப்புக்குக் கற்பூராதி எண்ணெய் - கை, கால் பிடிப்புக்கு இலிங்க பற்பம் - அனைத்துத் தோசங்களுக்கும் நசியம் - அனைத்து நோய்களுக்கு நிலவாகைக் கற்பம் - பல பிணி களுக்குக் கற்பூராதிச் சூரணம் - நோய்கள் பலவற்றிற்கு அக்கினி குமார செந்தூரம் - அனைத்து நோய்களுக்கும் இரச பற்பம் - அனைத்து நோய்களுக்கும் தங்க பற்பம் - உடல் பலத்திற்குப் பார்லிக்கஞ்சி - உடல் பலத்திற்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி - இரத்த விருத்திக்கு மாதுளம்பழச் சர்பத் - இரத்த விருத்திக்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி - உடல் பலத்துக்கு மாமிசத் தீநீர் - உடல் பலத்திற்குப் பாதாம் பருப்புப் பாயாசம் - இரத்த விருத்திக்குக் கோதுமைப் பாயாசம் - பால் பாயாசம் - முலைக்குத்துக்கு எண்ணெய் - பால் சுரக்க மருந்துகள் - சூதகவலிகளுக்கு விழுதி யெண்ணெய் - புழுவெட்டுக்குக் கலிக்கம் - விரைவாதத்துக்கு அரைப்பு மெழுகு

பின்னிணைப்பு

பொருளடக்கம் - அகர முதலி 78-88

நூல் விலைப்பட்டியல்

# நோயும் மருந்தும்

## 1. தலைநோய்

### 1. அரிதார பற்பம்

அரிதாரம் 80கி எடுத்து பொட்டணம் கட்டி, சுண்ணாம்புக் கல்லில் அவித்தெடுத்துக் கழுவி மறுபடி பொட்டணங்கட்டி பெரும் பயிற்றில் வேக வைத்து கழுவி உலர்த்திக் கொள்க. பிறகு அவரை யிலையிலும் காராமணியிலையிலும் வேக வைத்து அதன் மேலே அரிதாரம் வைத்து அதன் மேலே சாரணை வைக்க. இவ்வாறு ஐந்தடுக்காய் வைத்து 36 மணி நேரம் எரித்தெடுத்தால் அரிதாரம் சுத்தியாகும். அதனைப் பற்பமாகப் பொடிசெய்து வைத்துக் கொள்க. விளாம்பட்டை, மெருகங் கிழங்கை உலர்த்தித் தைலம் செய்து கொள்க. தைலம் மூன்று துளியும், 130 மி.கி. பற்பத்தையும் சேர்த்து ஒன்பது நாட்கள் சாப்பிட மண்டைச் சூலை, மண்டை வெடிப்பு, மண்டைப் பீனசம், இருமல், பீனசம், இரத்த மண்டலி, ஊமை வாதம் ஆகிய நோய்கள் தீரும்.

### 2. கபாலக்குத்துக்குத் தலைமுழுக்கெண்ணெய்

இஞ்சிச்சாறு, வேளைத் தழைச்சாறு, நொச்சிச்சாறு, ஆதண்டை யிலைச் சாறு, குப்பைமேனியிலைச் சாறு இவற்றை வகைக்கு 650 மி.லி. நல்லெண்ணெய், பசும்பால், வகைக்கு 1.3லி. எடுக்க. அனைத்துத் திரவங்களையும் ஒன்று சேர்க்க. கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், நல்ல மஞ்சள், தேவதாரம், விளாம்பிசின், சாம்பிராணி, நல்லகடுகு, உள்ளி இவற்றை வகைக்கு 4கி. எடுத்துப் பொடித்து மேற்கூறிய கலவையில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். நான்கு நாட்களுக்கொரு தரம் தலை முழுகி வர கபாலக்குத்து தீரும்.

### 3. கபாலக் கரப்பானுக்கு எண்ணெய்

நொச்சித்தழை, வேம்புத்தழை, பிண்ணாக்குப் பூண்டுத்தழை, அமுக்கிராத்தழை, கோழியவரையிலை இவற்றின் சாறுகளையும்

சாராயத்தையும் வகைக்குச் சம அளவெடுக்க. தேங்காயெண்ணெயைச் சம அளவெடுக்க. துத்தம், துருசு, ஏலரிசி, கார்போகரிசி, வெட்பாலரிசி, வாலுளுவையரிசி, கொத்துமல்லி, சீரகம், காசுக்கட்டி, அபினி, வெள்ளைக் குங்கிலிய மெழுகு, வேம்பாடஞ் சருகு இவற்றை வகைக்கு 1 கி. எடுத்து மேற்கூறிய கலவையில் போட்டுக் காய்ச்சிக் கொள்க. மெழுகுபதமானவுடன் வடித்திறக்கிக் கொள்க. அதனைத் தலைக்குத் தேய்த்து முழுகி வர கபாலக்கரப்பான் குணமாகும்.

### *4. கபால வலிக்கு எண்ணெய்

பச்சைமஞ்சள், ஆதண்டை, நொச்சியிலை இவற்றின் சாறுகள், ஆமணக்கெண்ணெய் வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்ளவும். அரத்தை, சதகுப்பை, இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட கலவையில் சேர்த்துக் காய்ச்சி தைல பக்குவத்தில் வடித்து வைக்க. தக்க நாளறிந்து தலை மூழ்கி வர கபாலவலி, ஒருத்தலை (ஒற்றை) வலி நீங்கும்.

### 5. கபால சன்னிக்குத் திரி (புகை)

சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், கத்தூரிமஞ்சள், சதகுப்பை, சூடன் ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்து நீர்ச்சுண்டிச்சாறு (சுண்டைக்கீரை) விட்டரைத்து மெல்லிய சீலையிலூட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க. அத்திரியினைக் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க தலைவலி, கண்குத்தல், நீர்ப்பீனசம், முகவாதம், கபாலசூலை, கபாலசன்னி ஆகியவை தீரும்.

---

*பச்சை மஞ்சள்சார் ஆதண்டைச் சார்ப ரித்த
நொச்சி இலைச்சார் கருவருவாங் கேளு
இச்சையா மணக்கெண்ணெய் வகையே நாழி
இதனுடனே கற்கவகை அரத்தைசத குப்பி
வைத்தவகை பலமொன்றே யரைத்துக் காய்ச்சி
வழுவாத பதம்வடித்துத் தலையில் மூழ்க
உச்சிதமாய்க் கபாலவலி ஒருத்தலைநோ யெல்லாம்
ஓடிப்போம் என்றுரைத்த தவமுனிவர் தாமே!

**6. மண்டைச் சூலைக்கு எண்ணெய் - 1**

கார்போகரிசி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் இவற்றை வகைக்கு 6 கி, நவச்சாரம் 12 கி, பால்சாம்பிராணி 18 கி, சீந்தில்கொடி 35கி, மிளகு, சன்னிக்கோவை இவற்றை வகைக்கு 70 கி. எடுத்து ஒன்றிரண்டாக இடித்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 1.3 லி. எடுத்து மேற்சொன்ன மருந்துப் பொடியைத் தூவி கடுகு பதமாகக் காய்ச்சிக் கொள்ளவும். அதனைத் தலைக்குத் தேய்த்து முழுகிவர மண்டைச் சூலை தீரும்.

**மண்டைச் சூலைக்கு எண்ணெய் - 2**

வில்வம், மிளகு, சிகப்புச் சித்திரமூலம், வெள்ளறுகு வகைக்கு 35 கி. இலவங்கம், சுக்கு, வகைக்கு 9 கி, சாம்பிராணி 18 கி, வெள்ளைப்பூண்டு 53 கி. எடுத்து தண்ணீர் விட்டரைத்து உருண்டை செய்துகொள்க. நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 2 லி. சட்டியிலூற்றி மேற்கூறிய உருண்டையைப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சுக. அப்பதத்தில் கழுவின சோற்றுக் கற்றாழைச் சோற்றைப் போட்டு எண்ணெய் பதத்தில் வடித்துக் கொள்ளவும். தலைக்குத் தேய்த்துக் கொள்ளவும். இரண்டாம் நாள் விளக்கெண்ணெய் பேதிக்காகக் குடிக்கவும். வாய்வு பண்டங்கள் நீக்கவும். கண்வலி, கண்சிகப்பு, நீர் வடிதல் முதலியன தீரும்.

**மண்டைச் சூலைக்கு எண்ணெய் - 3**

சிற்றரத்தை 35 கி, வெட்டி வேர் 2.5 கி எடுத்து குடிநீராக்கிக் கொள்க. மாதுளங்காய் சமூலம் இடித்த சாறு, நொச்சிச்சாறு வகைக்கு 500 மி.லி. விடத்தேர்ப்பட்டை 70 கி எடுத்துக் கொள்க. தேவையான அளவு பசுநெய்யில் அனைத்துச் சரக்குகளையும் போட்டுக் காய்ச்சி தலை முழுகி வர மண்டைச்சூலை தீரும்.

**7. கபாலசூலைக்கு எண்ணெய்**

கருஞ்செம்பைப்பூ (கருஞ்சிற்றகத்தி), ஆதண்டை வேர்ப்பட்டை, கொம்பரக்கு, மஞ்சள், வெள்ளைப்பூண்டு, மிளகு ஆகிய சரக்குகளை வகைக்கு 20 கி. எடுத்துப் பொடித்துக் கொள்க. 2 லி. நல்லெண்ணெயில் அப்பொடியைக் கலந்து தைல பதத்தில் காய்ச்சிப் பக்குவத்தில்

வடித்துக்கொள்க. தலையில் தேய்த்து 3 மணி நேரம் கழித்து சிகைக்காய் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். இவ்வாறு செய்ய பீனசம், மண்டைச்சூலை, தலைவலி, தலைச்சூடு ஆகிய நோய்கள் தீரும்.

**8. தலைவலிக்கு நாசிகாபரணம்**

சுண்டை வேர்ப்பட்டையைப் பொடித்து மூக்கில் நசியம் செய்ய தலைவலி தீரும்.

**9. தலைவலிக்கு எண்ணெய்**

35 கி. கொடிவேலி வேர்ப்பட்டையைக் கற்றாழைப்பால் விட்டரைத்து அதனுடன் 2.6 லி. நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. அதனைத் தேவையான அளவெடுத்து தலையில் தேய்த்துக் குளித்து வர தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்து தீரும்.

**10. ஒற்றைத் தலைவலிக்கு நசியம்**

சுக்கு 70 கி. எடுத்து இடித்து 700 மி.லி. தண்ணீர் சேர்த்து குறுக்கிக் காய்ச்சுக. அதனுடன் தேங்காய்ப்பால் 200 மி.லி, குங்குமப்பூ 4 கி. போட்டுக் காய்ச்சி மூக்கில் நசியமிட ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்து இவை தீரும்.

**11. ஒற்றைத் தலைவலிக்குப் புகை**

மஞ்சள், மிளகு இவற்றை எருக்கம்பாலில் அரைத்து நிழலிலுலர்த்திப் பொடித்துக் கொள்க. மெல்லிய துணியில் இப்பொடியை வைத்துத் திரித்துத் திரியாக்கிக் கொள்க. அதனை எரித்து, அதனால் வரும் புகையை நாசியில் இழுக்க ஒற்றைத் தலைவலி குணமாகும்.

**12. ஒற்றைத் தலைவலிக்கு எண்ணெய்**

மலைவேம்பு, செவ்வலரி, ஆதண்டை, கருநொச்சி ஆகிய வற்றின் சாறு வகைக்கு 1 லி, நல்லெண்ணெய் 400 கி. எடுத்து கலந்து கொள்க. அதில் கருஞ்சீரகம், வால்மிளகு, ஒருதலைப் பூண்டு இவற்றை வகைக்கு 35 கி. அரைத்துப்போட்டுக் காய்ச்சி

எண்ணெய் பதமானபின் இறுத்து தலைமுழுகி வர ஒற்றைத் தலைவலி தீரும்.

### 13. முகத்தில் வரும் வங்குக்குப் பூச்சு

அரிதாரம் 18 மி.கி. எடுத்து கோவைச் சாற்றிலிழைத்து வழித்தெடுத்துக் கொள்ளவும். காலை, மாலை பத்து நாட்கள் பூச வங்கு மறைந்துவிடும்.

## 2. கண்ணோய்கள்

### *1. பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணிச்சாறு 2.6 லி, கரிசாலை, நெல்லிக்காய் இவற்றின் சாறு வகைக்கு 1.3 லி, எள்ளெண்ணெய், பசும்பால் வகைக்கு 2.6 லி, எடுக்க. அதிமதுரம் 70 கி எடுத்து பாலிலரைத்துக்

---

*ஆமப்பா பொன்னாங்காணித் தைலம் கேளு
அப்பனே காணிச்சாறு படிஇ ரண்டு
நாமப்பா கரிசாலைச் சாறுபடி யொன்று
நலமான நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
தாமப்பா எள்ளெண்ணெய் படியி ரண்டு
தப்பாம லாவின்பால் படியி ரண்டு
வேமப்பா மதுரமது பலமி ரண்டு
விருதான முன்பாலா லரைத்துப் போடே

போட்டப்பா மெழுகுபதந் தனில்வ டித்து
புகழாக முழுகிவரத் தீரும் நோய்கள்
நீட்டப்பா நேத்திரநோய் தொண்ணூற் றாறும்
நிலைமைகெட்ட காசமெல்லாம் நீங்கிப் போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப் போகும்
வளமாக நேத்திரங்கள் ஒளியே மீறும்
நாட்டப்பா வெப்பநோ யெல்லாம் தீரும்
நலமான கீழ்காய்நெல்லித் தைலங் கேளே!

கொள்க. அனைத்துத் திரவங்களையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துப் பத்திரப்படுத்திக் கொள்க. அதனை நோய்க் கேற்றவாறு அளவறிந்து தலை முழுகி வர நேத்திரநோய்கள், காசம், பித்தம், வெப்பநோய் அனைத்தும் நீங்கும்.

### 2. கண்ணில் நீர்வடிதலுக்குப் பூச்சு

கருவேல் இலையுடன் காசுக்கட்டியையும் பொடி செய்து கொள்க. இப்பொடியையும் பொரித்த சீனக்காரத்தையும் கரண்டி யிலிட்டுக் காய்ச்சி ஆவாரக்குச்சியால் கலந்து கொள்க. இப்பூச்சினைக் கண்களைச் சுற்றி பூசவும். புளியிலையை வேகவைத்து கண்ணின் மேல்வைத்துக் கட்டவும். கண்ணில் நீர் வடிதல் நிற்கும்.

### 3. கண் வலிக்குப் பூச்சு

பிண்ணாக்குக் கீரையின் இலையுடன் பழம்புளியைச் சேர்த்து அரைத்துக் கொள்க. இப்பூச்சினைக் கண்களின்மேல் காலை, மாலை இரு வேளையும் பூச்சாகப் போடவும். புளிப்புச்சுவைப் பொருட்களையும் புகையையும் நீக்கி தினமும் தலை முழுகி வர கண்வலிகள் நீங்கும்.

### 4. நேத்திர வாய்வுக்கு எண்ணெய்

பிடரிகடுத்து, மூக்குத்தண்டு வலித்து இரண்டு கண்களிலும் தண்ணீராய் விழுந்து சிவந்திருக்கும்.

சங்கங்குப்பி, வெங்காயம், கையாந்தகரை இவற்றின் சாறு களையும் நல்லெண்ணெயையும் சேர்த்து எரித்து பொன்னாங் காணிச்சாறு சிறிதளவு விட்டு மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். தலையில் தேய்த்து முழுகவும். வெந்நீர்ச்சோறு சாப்பிட நேத்திர வாயுநீங்கும்.

### 5. நேத்திரவாய்வுக்குக் களிம்பு

இரும்புக் கரண்டியில் பசுவெண்ணெயைப்போட்டு நன்றாய்க் காய்ச்சிக் கொள்க. பிறகு படிகாரத்தைச் சேர்த்து அது நன்கு வெந்தபிறகு வழித்துக் கொள்க. செம்புக்காசு கொண்டு நேக

அரைத்து, சிமிளில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்க. எட்டு நாட்கள் இரண்டு நேரமும் கண்ணில் போட நேத்திரவாய்வு தீரும்.

### 6. கண்வலிக்குக் கலிக்கம்

மாதுளம் பழச்சாற்றையும் தேனையும் சமஅளவெடுத்து கலந்து கொள்க. அதில் பீதரோகணி, கிராம்பு இவை இரண்டையும் பொடித்துப் போட்டு எரித்துக்கொள்க. தேன் நுரைத்து வரும்போது இறக்கி பத்திரப்படுத்திக் கொள்ளவும். கண் வலிக்கும் போது கண்ணில் விட கண்வலி தீரும்.

# 3. காது நோய்கள்

### 1. காதுநோய்களுக்கு எண்ணெய்

கொள்ளுவேர் 875 கி. எடுத்திடித்து 2.6. லி. தண்ணீர் விட்டு முறைப்படி குடிநீர் செய்து 675 மி.லி.யாய்ச் சுண்டினவுடன் கருஞ்சீரகம், சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள், வெளிச்சிப்பிசின், கடல்நுரை, வலம்புரிக்காய், கோட்டம், தேவதாரம் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்துப் பொடித்துப் போடுக. இஞ்சி, மஞ்சள், ஆதண்டையிலை இவற்றின் சாறுகள் சம அளவு எடுத்து, அதனுடன் நல்லெண்ணெய் 1.3 லி. சேர்த்து, காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்க. இதனை ஓரிரு துளிகள் காதில் விட்டுவர காதிரைச்சல், கபாலக்குத்து, கபாலவாய்வு, காதுமந்தம் ஆகியவை நீங்கும்.

### 2. காது மந்தத்திற்குச் சொட்டு மருந்து

வெள்ளைப்பூண்டு, வடக்கே போகிற முருங்கை வேர், முத்தெருக்கஞ் செவி மூலம், திருகுகள்ளிப்பால், நண்டு இவற்றை அளவறிந்து நல்லெண்ணெயில் போட்டுக் கொதிக்க வைத்துக் கொள்க. ஆறிய பிறகு காதில் ஓரிரு துளிகள் விட காது மந்தம் தீரும்.

# 4. பீனசம்

### 1. பீனசத்தின் குறிகுணம்

தலைசொறியும் போது மூளை துவளல், மயிர் திரைந்து போதல், வலியுண்டாயிருத்தல், முகம், தலை நரம்பு தெரித்தல், உச்சியிடித்தல், நாவறளல், பல்கடித்தல், சுழி, பிடரி கடுத்தல், நாசியில் மோர் போலவும், திரி போலவும், பருத்திக் கொட்டை போலவும் விழுதல், தலை தெறித்தல், முகத்திலும் நாசியிலும் வலியுடன் இரத்தமாய் விழுதல், நெஞ்சுவறளல், உடல் சிறு கடுப்பாயிருத்தல், உடலெல்லாம் வெளுத்தல், போன்ற குறிகுணங் களுடையது பீனசம்.

### 2. எண்ணெய்

கருவேலம்பட்டை, கையாந்தகரை, கற்றாழைமடல் சேர்த்து துவைத்து 1.3 லி. சாறு பிழிந்து கொள்க. அதில் ஏலம், இலவங்கம், திப்பிலி, அதிமதுரம், செங்கழுநீர், கோட்டம், செண்பகப்பூ, சாதிக்காய், சிறுதேக்கு, அரத்தை, தான்றிக்காய், சாத்திரபேதி இவற்றை வகைக்கு 5 கி எடுத்தரைத்து சாற்றிலே கலந்து கொள்க. 1.3 லி. நெய்யையும் நல்லெண்ணெயையும் விட்டெரித்து பத்திரப் படுத்திக் கொள்ளவும். அதனை ஓரிருதுளிகள் மூக்கில் விட்டு தலையில் தேய்க்கவும். பீனசம் குணமாகும்.

### 3. வெட்டிவேர் எண்ணெய்

வெட்டிவேர் 350 கி எடுத்து முறைப்படி குடிநீராகச் செய்து கொள்க. அதிமதுரம் 525 கி எடுத்துப் பாலிலரைத்துக் குடிநீரில் சேர்த்துக் கொள்க. எள் எண்ணெய் 52 கி சேர்த்துக் காய்ச்சி வடித்து தலை முழுகி வர பீனசம், மண்டைச்சூலை, குட்டம், சொறி, புறநீர்க்கோவை, கண்புகைச்சல் ஆகியவை தீரும்.

### 4. புகை

வெள்ளைப்பாடாணம், கவுரிப்பாடாணம் இவையிரண்டையும் வேலிப்பருத்திச் சாற்றில் கலக்கி அரைத்து உருண்டையாகச்

செய்து துணியில் பொதிந்து கொள்க, புளியம்பட்டை தணலிலே ஒவ்வொரு உருண்டையாகப் போட்டுப் புகைபிடிக்க பீனசம் தீரும். கண், வாய், காது இவற்றைக் கட்டிப் போட்ட பிறகு புகைக்கவும். இவ்வாறு மூன்று நாள், ஆறுவேளை செய்ய பீனசம் குணமாகும்.

**5. நாசிகாபரணம்**

சுண்டைக்காய் மரப்பட்டையைத் தேவையான அளவெடுத்து பொடித்து வைத்துக் கொள்க. அளவறிந்து ஆக்கிராணிக்க பீனசம் குணமாகும்.

**6. நசியம்**

குங்குமப்பூ, கோரோசனை, முந்திரிப்பருப்பு இவற்றை நெய்யிலே போட்டுக் காய்ச்சி ஆறவைத்து மூக்கிலே நசியம் செய்ய பீனசம் தீரும்.

புளித்த மாதுளங்காய் ஒன்றிலுள்ள விதைகளைத் துணியில் போட்டுப் பிழிந்து கொள்ளவும். அச்சாற்றை ஓரிரு துளிகள் மூக்கில் விட பீனசம் சரியாகும்.

# 5. வாய்நோய்கள்

**1. வாய் நீரூறலுக்குக் குடிநீர்**

பேய்ப்புடல், சுக்கு இவை இரண்டையும் சம அளவெடுத்து இரவில் முறைப்படி குடிநீரிட்டுக் காய்ச்சி காலையில் கொடுக்க வாய்நீரூறல் தீரும்.

**2. வாய்வலிக்குக் கொப்பளிக்கும் நீர்**

கருவேலம்பட்டை, கொட்டைப்பாக்கு, காசுக்கட்டி, படிகாரம் இவற்றைச் சம அளவெடுத்துத் தண்ணீர் விட்டு ஊற வைத்து வாய் கொப்பளிக்க வாய்வலி அனைத்தும் தீரும்.

# 6. பல்நோய்கள்

### 1. பல்கடுப்புக்குச் சூரணம்

சிறுபுள்ளடியையும் கொட்டைக் கரந்தையையும் தனித்தனியே இடித்து முறைப்படி சூரணம் செய்து சமமாகக் கலந்து காலை, மாலை இரு நேரமும் உள்ளங்கையளவு சாப்பிடவும். பல் கடுப்பு தீரும்.

### 2. பல்கடுப்புக்கு மருந்து

கொன்றை வேர்ப்பட்டையை வாய் பேசாது சாப்பிடவும்.

மருதம் வேர்ப்பட்டையை வாய் பேசாமல் சாப்பிட தந்த கடுப்பு நிற்கும்.

### 3. பல் கடுப்புக்குப் பொடி

காட்டெருமுட்டையைச் சுட்டு எருக்கம்பால் வார்த்து குழைத்துப் பல்லடி மேல் தேய்க்கவும். வலி தீரும்.

கற்கடகசிங்கி, இந்துப்பு, மிளகு இவற்றைச் சமமாக எடுத்துப் பொடி செய்து பல்லுக்குள் கீழும் மேலும் தேய்க்கவும்.

### 4. பல்சூலை, பல்லரணை, நாக்குப்புற்று, சிங்கநோய்க்கு எண்ணெய்

வன்னிப்பட்டை, முருக்கம் வேர்ப்பட்டை, ஆவாரை வேர்ப்பட்டை, மதுக்காரம்பட்டை, வெள்வேலம்பட்டை, மருதம் பட்டை, கடுக்காய், களிப்பாக்கு, சுக்கு இவற்றை வகைக்கு 17.5 கி. எடுத்து அனைத்தையும் இடித்து 6.5 லி. தண்ணீர் விட்டு 675 மி.லி. யாய்க் குறுக்கிக் காய்ச்சிக் கொள்க. அதனுடன் எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய் இவை வகைக்கு 675 மி.லி, கோழி ரத்தம் 325 மி.லி. சேர்த்து முறுகும் பதத்தில் வடித்து அளவறிந்து கொப்பளிக்கவும். பல்சூலை, பல்லரணை, நாக்குப்புற்று, சிங்கநோய் ஆகியன நீங்கும்.

### *5. பல்வலிக்குக் கொப்பளிக்கும் நீர்

நாவல், கருங்காலி இவற்றின் பட்டைகளைத் தேவையான அளவெடுத்துத் தண்ணீர் விட்டு ஊற வைக்க. இரவில் அந்நீரைக் கொப்பளிக்கவும். இவ்வாறு ஐந்து நாட்கள் செய்ய பல்வலி நீங்கும்.

### †6. பல்வாதத்திற்குக் கொப்பளிக்கும் நீர்

வேலம்பட்டை, ஆவாரம்பட்டை இவற்றைத் தேவையான அளவெடுத்து இடித்துக் கொள்க. தண்ணீர் சேர்த்து ஊறவைக்க. ஒவ்வொரு நாளும் இவ்வாறு ஊற வைத்த தண்ணீரை எட்டு நாட்கள் கொப்பளிக்க பல்லசைந்து வலித்தலாகிய பல்வாதம் தீரும்.

### 7. பல் வாய்விற்கு மருந்து

நாயுருவி இலையையும் வேரையும் வாயிலிட்டு மென்று முழங்காலில் நல்லெண்ணெயைப் பூசி வெயிலிலிருக்க புழு வெளி வந்துவிடும்.

‡சுக்கு, பாக்கு இவற்றை வாயிலிட்டு மெல்ல வேண்டும். துவர்ப்பான அந்நீர் பல்வலி, பல்வாதம் இவற்றை நீக்கும்.

---

* *கண்டுமே நாவற்கங் காலிப் பட்டையும்*
*வேண்டும்நற் சலம்விட்டு ராவானபின்*
*கொண்டு நீர்தனைக் கொப்பளிக் கைந்துநாள்*
*முண்டுவாய் வாதமோடும் போயல்லவே.*

† *அல்ல வேலம்பட்டை ஆவாரம் பட்டையும்*
*செல்லவோர் செலம்சேர்த் திடித் தூறிடில்*
*நல்லவோ ரெட்டுநாட் கொப்பளித்திட*
*வெல்லவே தந்தவா தமும் தீருமே.*

‡ *தீருஞ் சுக்கது தேறிய பாக்குடன்*
*ஏரும் வாயினி லிட்டுமே மெல்லிடில்*
*மீறு தந்தம் மிகக்கடுப் பேறுநீர்*
*பாரும் கொப்பளிக் கப்படும் பஞ்சுமே!*

***8. பல்வலி, வாய்விற்கு வேது**

தழுதாழை, கொழுஞ்சி, நொச்சி ஆகிய மூலிகைகளின் இலைகளினால் குடிநீர் செய்து வேது பிடிக்க நலமாகும்.

நீரில் மிளகரணையின் வேரை நன்கு அரைத்து,பற்று போட பல்வலி குணமாகும்.

# 7. விக்கல், வாந்தி நோய்கள்

**1. விக்கல், வாந்திக்குச் சூரணம் - 1**

நெல்லி, சுக்கு, நெற்பொரி, திப்பிலி இவற்றை வகைக்குச் சமஅளவு எடுத்துப் பொடித்து சர்க்கரையைச் சேர்த்து அளவறிந்து கொடுக்க விக்கல், வாந்தி தீரும்.

**†விக்கல் வாந்திக்குச் சூரணம் - 2**

நெல்லி, சுக்கு, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவற்றைப் பொடித்து நாரத்தஞ் சாற்றில் சேர்த்துண்ண விக்கலும் வாந்தியும் தீரும்.

**விக்கல் வாந்திக்குச் சூரணம் - 3**

வில்வ இலை, நெற்பொரி, திப்பிலி இவற்றைப் பொடித்து சர்க்கரையைச்சேர்த்து அளவறிந்து சாப்பிட விக்கல் குணமாகும். வாந்திக்கும் தரலாம்.

---

* *அஞ்சு வாத மடங்கித் தழுதாழை*
*கொஞ்சி நொச்சி கொடித்திடில் வேதுதான்*
*மிஞ்சிநீரில் மிளகர ணையின் வேர்*
*பஞ்சுபோ லரைத்துப் பத்துமே லேத்திடே!*

† *நெல்லி சுக்குடன் நெற்பொரி சர்க்கரை*
*நல்ல திப்பிலி நாரத்தி லுண்பிராய்*
*கொல்ல வந்திடுஞ் சத்தியும் விக்கலும்*
*இல்லை இல்லையென் றெமனு மில்லையே*

**2. வாந்திக்கு நாரத்தங்காய் சர்பத்**

நாரத்தங்காய் தேவையான அளவெடுத்து அதற்கு இரண்டு மடங்கு சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி பதத்துடன் வடித்துக் கொள்க. 8-16 கி. எடுத்து சிறிது தண்ணீர் சேர்த்துக் கலந்துகொடுக்கவும். பித்தம், தாகம், சுரம், வாந்தி, அரோசகம் எனும் உணவில் வெறுப்பு இவை தீரும்.

**3. கண்டமாலைக்கு நெய்**

பழுப்பான எருக்கின் சூரணத்தையும் சிறுகுறிஞ்சா வேர்ச் சூரணத்தையும் சமனாய் எடுத்து அதில் இரண்டு சிரங்கையும் ஈர வெங்காயம் ஒரு சிரங்கையும் எடுத்து இலுப்பை நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்க. அதனை அளவறிந்து உள்ளுக்கும் கொடுத்து புண்ணிலும் போட கண்டமாலை குணமாகும்.

***4. வாந்திக்குக் குடிநீர்**

கொத்துமல்லி, நெற்பொரி, குருந்தம், தைவேளை, சுக்கு, முத்தக்காசு, திப்பிலி, புடல் இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்துப் பொடித்து சர்க்கரை தேவையான அளவு கலந்து அளவறிந்து கொடுக்க விக்கல் குணமாகும்.

---

* *கொத்த மல்லி நெற்பொரி*
*குருந்தொட்டி தைவேளை*
*ஒத்த சுக்கு முத்தமொடு*
*வோங்குந் திப்பிலி புடலுடன்*
*வத்தக் கண்டு சர்க்கரை*
*மணக்கக் கஷாய முண்பீராய்*
*சத்தி யென்றுந் தோன்றுமே*
*செகத்தி லுள்ள மாந்தரே.*

**5. தாக வாந்திக்குக் குடிநீர்**

நெற்பொரி, சுக்கு, குவளைவேர் இவற்றைச் சம அளவெடுத்துத் தேவையான அளவு தண்ணீர் விட்டு குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனை நோயாளியின் வன்மை, நோயின் தன்மையைப் பொறுத்துக் குடிக்க தாக வாந்தி நிற்கும்.

## 8. சுவாச, நெஞ்சக நோய்கள்

***1. மேல் சுவாசத்திற்குக் கற்கம்**

புதுச்சோறு, நெல்லிக்காய், மிளகு, திப்பிலி, கடுகு இவற்றை வகைக்குச் சமமாக எடுத்து பசுமோரில் அரைத்துக் கொள்க. அதனை மூன்று நாட்கள் காலை, மாலை கொடுக்க மேல் சுவாசம் நீங்கும். புளி, புகை நீக்கவும்.

**2. மேல் சுவாசத்திற்குச் சூரணம்**

முருங்கையிலைச்சாறு, பசுமோர் இவற்றை வகைக்கு 70 கி. எடுத்து ஒன்றுசேர்த்துக் கலந்து கொள்க. அதில் மிளகுப் பொடியை 9 கி. சேர்த்து நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து கொடுக்க மேல் சுவாசம் நலமாகும்.

**3. நெஞ்சு வலிக்குக் குடிநீர்**

சுக்கு, திப்பிலியை அரைத்துச் சட்டியிலிட்டு தண்ணீர் சேர்த்து முறைப்படி குடிநீராய்ச் செய்து கொள்க. பின்பு அதில் கடுகு, மிளகு,

---

* *தோர்த்திடுப் புதுச்சோர் நெல்லிக் காயோடு*
*சேர்த்திடு நல்மிளகோடு திப்பிலி*
*மார்த்திடு கடுகு வகைக்குச் சமன்*
*ஏர்த்திடுப் பசுமோரில் விட்டிடே*

*ஆட்டடா மூன்றுநா ளடுத்தே கொடு*
*நாட்டடா தவறாதென் குருமுறை*
*சூட்டடா மேல் சுவாசம் விட்டோடிடும்*
*போட்டடா புளி புகையும் தள்ளிடே!*

உப்பு இவை மூன்றையும் பொடித்துப் போட்டு அளவறிந்து கொடுக்க நெஞ்சுவலி தீரும்.

### 4. இளைப்பு இருமலுக்குச் சாறு

இஞ்சி, ஈரவெங்காயம், எலுமிச்சை இவற்றின் சாறுகளைச் சமனெடுத்து மூன்று நாட்கள் காலை, மாலை கொடுக்க இளைப் பிருமல் தீரும்.

### *5. இருமலுக்குக் குடிநீர்

இண்டு, தூதுவளை, இசங்கு, இவற்றின் இலை, திப்பிலி, சுக்கு இவற்றைச் சமனெடுத்து இடித்து, தேவையான அளவு நீர் விட்டு முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க இருமல் தீரும்.

### 6. கோழை இருமலுக்கு மருந்து

175 கி. தேனைக் காய்ச்சி சூடுடன் இருக்கும் போதே மிளகுத் தூள், பொரித்த வெங்காரம் வகைக்கு 12 கி. எடுத்து அதில் போட்டுக் கலக்கி வேளைக்கு 12 கி. அளவு நோயின் வன்மை, மென்மை, நோயாளியின் தன்மையறிந்து கொடுக்க நோய் குணமாகும்.

### 7. கபநோய்களுக்குச் சிருங்கி பற்பம்

குப்பை மேனியிலையை அரைத்து மான் கொம்புக்குக் கவசம் செய்து 10 வறட்டியில் புடம் போட பற்பமாகும். இதையும் பவள பற்பத்தையும் சமமாகச் சேர்த்து தினமும் 1 கி. அளவு தக்க அனுபானத்திலிட இருமல், சுவாசம் 5, காசம் 5, சயம் 4 முதலிய கபநோய்கள் 96 குணமாகும்.

---

* *இண்டிலை தூதளை இசங்கு திப்பிலி*
*கண்டறி சுக்குடன் கலந்த வெந்தநீர்*
*உண்டபின் னொருதர மிரும லூற்றிடில்*
*தெண்டமும் தருவன் யான்!*

***8. காசமிருமலுக்கு அடை**

கையாந்தகரை, நாயுருவி, கருவேல், சங்கு, தூதுவளை, வேலிப்பருத்தி வகைக்குச் சம அளவெடுத்து கிராம்பு ஏழு சேர்த்து நெய், எண்ணெய் சேர்த்து அரைத்து அடை சுட்டெடுத்துக் கொள்க. அதைக் காலை, மாலை சாப்பிட இருமல், காசம் குணமாகும்.

**†9. எலும்புருக்கி, பிரமேகத்திற்கு இளகம்**

தூதுவளையின் பூ, முருங்கைப்பூ இவற்றின் சாறு 1.3 லி, நெருஞ்சி, ஏலம், நிலப்பனைவேர், இவற்றை வகைக்கு 35 கி, அதிமதுரம், நன்னாரி இவற்றை வகைக்கு 70 கி. எடுத்து சதாவேரிக்

---

* *கையாந் தகரை நாயுருவி*
*கருவேல் சங்கு தூதுவளை*
*மெய்தான் சிவந்த பேருக்கு*
*மொட்டு வேலிப்பருத்தி யிவையேழும்*
*நெய்தான் தவிர யெண்ணெயிட்டு*
*னேக அரைத்து அடைசுட்டு*
*கைதா னெடுத்துத் தின்பீரால்*
*காச லிரும லகண்டிடுமே!*

† *தூது விளம்பூ முருங்கைப்பூ*
*சொல்லும் வகைக்கோர் நீர்நாழி*
*பாத நெருஞ்சி ஏலம்நிலப்*
*பனைவேர் வகைக்குப் பலமாகும்*
*மோது மதுரம் நன்னாரி*
*யொவ்வோ ரிரண்டு பலஞ்சேர்த்து*
*போதுஞ் சதாவேரிக் கிழங்கும்*
*புகழு மிரண்டு பொடிசெய்யே*

*செய்யே பசுவின் பால்பதக்கு*
*திறமாய்த் தாளி தனில்விட்டு*
*மையுஞ் சீனிச் சர்க்கரையும்*
*வாகாய்ப் பலநா ளதில்கூட்டித்*

கிழங்கையும் சேர்த்து சூரணம் செய்து கொள்க. 10.7 லி. பசும்பால், 140 கி. சர்க்கரை, 1.3 லி. நெய் ஆகியவற்றைச் சேர்த்துக் காய்ச்சி இளகி வரும் போது மேற்சொல்லப்பட்ட சூரணத்தைத் தூவி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க எலும்புருக்கி, பெரும்பாடு, பித்த பிரமேகம் நீங்கும். தாதுவும் விருத்தியாகும்.

### 10. மந்தார காசத்திற்கு இளகம்

தான்றி, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லி, ஏலம், ஓமம், வால்மிளகு, அதிமதுரம், இஞ்சி இவற்றை வகைக்கு 20 கி. எடுத்து முறைப்படி சூரணமாக்கிக் கொள்க. அதற்குச் சம அளவு சீனியைச் சேர்த்துக் கொள்ளவும். பின் பால் 1.3 லி, தேன் 675 மி.லி, சேர்த்து இலேகியமாய்க் கிண்டி அளவறிந்து உண்ண கையுளைச்சல், காந்தல், வீக்கம், ஈளை, மந்தார காசம் தீரும்.

### 11. காசத்திற்குத் தாளக பற்பம்

சுண்ணாம்புக்கல்லை ஒரு மண் பாத்திரத்தில் கொட்டி அதில் தாளகக் கட்டியை வைத்து அதன் மேல் சுண்ணாம்புக் கல்லைக் கொட்டி அதில் கள் ஊற்றினால் வேகும். அதை எடுத்துக் கழுவிக்

---

*(தொடர்ச்சி)*

*தொய்பு நறுநெய் நாழியதில்*
*சுண்டி யிளகி வரும்போது*
*கையா லெடுத்துப் பார்த்த பின்பு*
*கருதும் பொடியைத் தூவி விடே.*

*தூவி மெழுகு பதத்திறக்கித்*
*தோகை மருந்தின் வகைகேளாய்*
*மேவும் பெரும்பா டெலும்புருக்கி*
*மிகுந்த பித்த பிரமேகந்*
*தாது மிகவே வலுவாகும்*
*தவறு முப்பும் புளியாகா*
*மாவுஞ் சொறிந்த பொதிகைமுனி*
*மறையோ ருரைத்த வளமிதுவே!*

கொள்க. மறுபடியும் சுண்ணாம்புக்கல் கொட்டி தாளகக் கட்டியை அதன் நடுவில் வைத்து மேலே சுண்ணாம்பு கொட்டி கள் ஊற்றி அகல் கொண்டு மூடவும். மேற்குறிப்பிட்டவாறே ஏழு முறை செய்யவும். தாளகம் சுத்தியாகும். சுத்தி செய்த தாளகக் கட்டியை எடுத்து அப்பிரகத்தகட்டில் அல்லது மண் பாத்திரத்தில் வைத்து அடுப்பில் வைக்கவும். சிவகரந்தைச் சாறு 1.3 லி. கட்டியின் மேல் ஊற்றி சுருக்குக் கொடுக்க தாளகம் பற்பமாகும். 65 மி.கி. காலை, மாலை தேன் அல்லது பனைவெல்லத்தில் சாப்பிடவும், காசம், சுவாசம், இளைப்பு நோய் தீரும்.

### 12. காசத்திற்குச் சங்கு பற்பம்

சங்கை எடுத்துப் பசும்பாலில் மூன்று நாள் ஊறப்போட்டு இரவில் அடுப்பில் போட்டு வைத்து காலையில் கழுவி வேறு பால் விட்டு வைக்கவும். இவ்வாறு மூன்று நாள் செய்து பிறகு கழுவிக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வைத்துக் கொள்க. அதனைத் தேனில் அல்லது வெண்ணெயில் 260 மி.கி. அளவு கொடுக்க பெரும்பாடு, சுவாசகாசம், மந்தாரகாசம் இவை தீரும். இளவயதினர்க்கு இம்மருந்து நன்கு பயனளிக்கும்.

### 13. காசத்திற்கு அரிதார பற்பம்

அகத்திக்கீரையை விளாங்காய் அளவரைத்து அரிதாரத்துக்குக் கவசம் கட்டி பத்து வறட்டியில் புடம்போட பற்பமாகும். அளவறிந்து அனுபானமறிந்து கொடுக்க இளைப்பு, ஈளை, காசம், சயம் இவை தீரும்.

### 14. காசத்திற்கு மருந்து

மருக்காரைப் பழத்திலுள்ள விதைகளை நீக்கி தேவையான அளவு காடியில் பிசைந்து கொடுத்தால் இருமல், சுவாசகாசம் குணமாகும்.

### 15. சயத்திற்குத் தாளக பற்பம்

வெங்காரம், படிகாரம், வெடியுப்பு, சவுட்டுப்பு, நல்ல சுண்ணாம்பு இவை ஐந்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு தண்ணீர்

விட்டரைத்து குகை செய்து வைக்க. அதற்குள்ளே சுத்தி செய்த தாளகக் கட்டியை வைத்து சில்லை மேலே மூடி சுண்ணாம்புச் சீலை செய்து புடம் போடவும் பற்பமாகும். அதைத் தக்க அளவு தேனில் அல்லது வெண்ணெயில் கொடுக்க சயம், இருமல், காய்ச்சல் இவை தீரும். புளியை நீக்குக.

**16. சயநோய்களுக்குத் தங்க பற்பம்**

சுத்தி செய்யப்பட்ட தங்கத்தை மெல்லிய தகடாகச் செய்து அதற்குச் சம அளவு கெந்தகத்தை எடுத்துக் கொள்க. கரும்புச் சாறு விட்டு கந்தகத்தை அரைத்துத் தங்கத் தகட்டிற்குப் பூசி காய வைத்துக் கொள்க. இவ்வாறு ஏழு முறை செய்து ஓட்டில் வைத்துச் சீலை மண் செய்து 1000 வறட்டியில் புடம் போட பற்பமாகும். இதில் 390 மி.கி. அளவு தக்க அனுபானத்துடன் உட்கொண்டால் சயநோய்கள் அனைத்தும் தீரும்.

**17. கபத்துக்குத் துருசு பற்பம்**

பழம்பாசியிலை இரண்டை வைத்து அதன் மேல் துருசுக் கட்டியை வைத்து அதன் மேல் இரண்டிலை சுற்றி கோழி முட்டையளவு துணி சுற்றி புடம் வைக்க பற்பமாம். அதனை அளவறிந்து தேனில் கொடுக்க கபம் குணமாகும்.

**18. காசத்திற்குத் தாளக பற்பம்**

தாளகம், கற்பூரசிலாசத்து இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து முறைப்படி சூரணித்து கல்வத்திட்டு, தாய்ப்பால், பழச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு இவற்றில் ஏதேனுமொன்றில் அரைத்து வில்லை செய்து நிழலிலுலர்த்தி புடம் போட பற்பமாகும். இப்பற்பத்தை அளவறிந்து, அனுபானமறிந்து கொடுக்கவும். வாத உடலினர்க்குத் தேனில் கலந்து கொடுக்கவும்.

அளவு : 65 மி.கி, இருவேளை.

தேன் அல்லது பனை வெல்லத்தில் கொடுக்கலாம்.

**தீரும் நோய் :** க்ஷயம் (இளைப்பு நோய்) ஈளை, காசம், சுவாசம் முதலிய கபநோய்கள் தீரும்.

# 9. வயிற்று நோய்கள்

***1. வயிற்று வலிக்குக் கற்கம்**

முருங்கைத் துளிர் 17½ கி, வெள்ளைப் பூண்டு, கடுக்காய் வகைக்கு 35 கி, எடுத்துக்கொள்க. விளக்கெண்ணெயை இவ் வெடைக்குச் சமவெடை எடுத்து அரைத்துக் குழப்பிக் கொள்க. அதனை நோயாளியின் வன்மை, மென்மைக்குத் தக்கவாறு கொடுக்க வயிற்றுவலி தீரும்.

அளவு : 5 கி. காலை, மாலை மோரில் வெறும் வயிற்றில் கொடுக்கவும், பத்தியம், காரம், எண்ணெய் பலகாரம் நீக்கவும்.

**2. வயிற்றுவலிக்குச் சூரணம்**

சயிந்தலவணத்தை நன்கு வறுத்துச் சூரணித்துக் கொள்க. அதனை மூவிரலளவு வாயில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு குடிக்க வயிற்றுவலி உடனே குணமாகும்.

அளவு : 1 முதல் 2 கி. காலை, மாலை இருவேளை சாப்பிடவும்.

**3. வயிற்றுவலிக்குச் சங்கு சுண்ணம்**

சங்கினை மூன்று நாள் எலுமிச்சம்பழ ரசத்தில் ஊற வைத்துக் கொள்க. பின் அப்படியே 500 வறட்டியில் புடமிட சங்கு சுண்ணமாகும். அதனை எலுமிச்சம்பழம் ரசத்தில் கலந்து கொடுக்க வயிற்றுவலி குணமாகும்.

**4. வயிற்றெரிவுக்குச் சூரணம்**

150 கி. சீரகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து நிழலில் உலர்த்தி வெயிலில் ஒரு நாள் காய வைக்க.

---

* *தூர் முருங்கையின் துளிரி னரைப்பலம்*
*மோர் வெள்ளுள்ளிக் கடுக்கா யொருபலம்*
*நேரரைத் தாமணக் கெண்ணெய் சரியெடை*
*கோரரைத் துராக் குழப்பியுண் முத்திதே!*

பின் இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்து கொள்க. அதனுடன் தேவையான அளவு சர்க்கரை கலந்து மூவிரலளவு வெந்நீரில் காலை, மாலை கொடுக்க வயிறெரிவு தீரும்.

### 5. வயிற்றுப் பொருமலுக்கு ஏலாதிச் சூரணம்

ஏலம், சந்தனம், அதிமதுரம், நெல்லிவற்றல், வால்மிளகு இவற்றின் சூரணம் வகைக்கு 35 கி. எடுக்க. வெள்ளைச் சர்க்கரை 80 கி. எடுத்துக் கலந்து கொள்க. அக்கினிமந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, வெப்பக்கழிச்சல், இருமல் போன்ற நோய்களுக்கு 4 கி. சூரணத்தை வெந்நீரில் கலந்து மூன்று நாட்களுக்குக் கொடுக்க குணமாகும்.

### 6. பசியெடுக்க சூரணம்

ஓமம், குரோசாணி ஓமம், நாய்க்கடுகு, இவற்றை வகைக்கு 35 கி, எடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. 55 கி. பனை வெல்லத்தில் சூரணத்தைப் பிசைந்து புங்கங்கொட்டையளவு உட்கொள்ளவும். பசி நன்கு எடுக்கும்.

### *7. சகல வாய்வுக்கு அட்ட இளகம்

கடுகு, ஓமம், பெருங்காயம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துச் சூரணித்துக் கொள்க. தைவேளைச் சாறும் பசும்பாலும் சம அளவெடுத்துக் கலந்து சூரணத்தைப் போட்டுக் கிண்டி இலேகியபதத்தில் இறக்கிக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க வயிறூதல், பெருவயிறு,

---

* *பாடுஅஷ்ட லேகியத்தைச் சொல்லக் கேளு*
*பாங்கான கடுகோமம் காய மிந்து*
*தேடுமே திரிகடுகு சீரக மோடச்*
*சரக்கிடித்துத் தைவேளைச் சாறும் பாலும்*
*வாருமஷ்ட லேகியத்தைக் கொண்டால் கேளு*
*வயிறூதல் பெருவயிறு புளித்தேப் பங்கள்*
*ஆருமே திசைவாய்வு மூட்ட டைப்பன்*
*ஆனந்த வாய்வுகிரிச் சரங்கள் ஒடும்!*

புளித்தேப்பம், தசவாய்வு, மூட்டுவலி, ஆனந்தவாய்வு, கிரிச்சரங்கள் தீரும்.

### 8. அண்டவாதம், வயிற்று வலிக்கு எண்ணெய்

முடக்கொத்தான் தழை அரைத்தது தேங்காயளவு எடுத்துக் கொள்க. நல்லெண்ணெய் 5.2 லி. எடுத்துக் கலந்து கொள்க. வசம்பு, சுக்கு, மிளகு, உள்ளி, சங்கம் வேர்த்தோல் இவற்றை வகைக்கு 12 கி, பெருங்காயம், கழற்சிக்காய்ப் பருப்பு இவற்றை வகைக்கு 8 கி. எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து மேற்கண்ட கலவையில் கலந்து காய்ச்சி பொன்னிறமானவுடன் இறக்கிக் கொள்க. காலையில் எண்ணெயைச் சாப்பிடவும். மாலையில் கடுகு சாப்பிடவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

### 9. வாய்வு பிடிப்புக்கு மாத்திரை

பெருங்காயம், ஓமம் இவற்றை வகைக்கு 4 கி., மிளகு, சீரகம், இலவங்கம் இவற்றைச் சம அளவெடுக்க. அனைத்தையும் தண்ணீர் விட்டரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டை செய்து மூன்று அல்லது ஏழு நாட்களுக்கு அந்தி, சந்தி சாப்பிடவும். உப்பை வறுத்துக் கூட்டவும். புளியை நீக்கி நெய் சேர்த்துக் கொள்ளவும்.

### 10. வயிற்றுக் கடுப்புக்குக் கருவேப்பிலை இளகம்

சுக்கு, கருவேப்பிலை இவற்றை வகைக்கு 20 கி. எடுக்க. இந்துப்பு 9 கி. எடுத்து எருமை மோர் விட்டரைத்து குழம்பு பக்குவத்திலுள்ளதைக் கரண்டியிலூற்றி பசு வெண்ணெய் அதனுடன் போட்டுக் கிண்டிக் கொள்க. பக்குவத்தில் இறக்கி முள்ளிக் காயளவு காலை, மாலை சாப்பிட வயிற்றுக் கடுப்பு தீரும்.

### 11. மகோதரத்திற்குச் செந்தூரம்

மண்டூரத்தை எடுத்து கழுதையின் சிறுநீர் விட்டரைத்து ஆறு எருபுடம் போட செந்தூரமாகும். தலைச்சுருளி வேரைக் குடிநீராய்க் காய்ச்சி அதில் மேற்படி செந்தூரத்தை 1 கி. அளவு போட்டுக் கலந்து சாப்பிடவும். இவ்வாறு ஆறு நாட்கள் சாப்பிடவும். கைப்பு,

புளிப்பு நீக்கவும். பேராம்பல், நீராம்பல், மகோதரம், காமாலை, சோகை, பாண்டு போன்ற நோய்கள் இம்மருந்தால் தீரும்.

### 12. மகோதரத்திற்குச் சாரக்கட்டு

வீரம், வெங்காரம், மனோசிலை, பால்துத்தம் இவற்றை வகைக்கு 2 கி. எடுத்து உமிழ்நீர் விட்டரைத்துக் கொள்க. 35 கி. நவச்சாரத்திற்குக் கவசம் செய்து கொள்க. வெடியுப்பு 280 கி., சோற்றுப்பு 140 கி. எடுத்து நன்கு அரைத்து சட்டியில் பாதி அளவிற்குக் கொட்டி அதன் மேல் நவச்சாரக்கட்டியை வைத்து அதன்மேல் உப்பைக் கொட்டி மேல் சட்டியை மூடி அடுப்பேற்றி இரண்டு விறகு கொண்டு எரிக்கவும். புகை நீங்கிய பிறகு சட்டியை எடுத்து கட்டியை எடுத்துக் கொள்ளவும். அளவறிந்து தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்க நீர்க்கட்டு, நீராம்பல், மகோதரம் இவை தீரும்.

### 13. குன்மத்திற்குக் குடிநீர்

சுக்கு, தொட்டி (செந்தொட்டி, காத்தொட்டி) வெண்கொடி வேலி, விலாமிச்சு, சந்தனம், கூவிளை ஆகியவற்றைச் சமனெடுத்துத் தேவையான அளவு தண்ணீர் விட்டுப் பொங்க வைத்து நோயாளியின் வன்மை, மென்மை, நோயின் தன்மை அறிந்து அளிக்கவும்.

### 14. அட்ட குன்மத்துக்கும், தச வாய்வுக்கும் எண்ணெய்

சாதிக்காய், ஏலம், கருஞ்சீரகம், ஓமம், சீரகம், கிராம்பு, சுக்கு, மிளகு, வால்மிளகு, அதிமதுரம் இவற்றை வகைக்கு 8 கி. எடுத்து முறைப்படி சூரணம் செய்து 1.3 லி. ஏரண்டெண்ணெயில் போட்டு வெயிலில் வைத்து பதப்படுத்தி பத்திரப்படுத்தி வைக்க. காலை, மாலை உணவிற்குப் பிறகு குடிக்க அனைத்து வாய்வு, அனைத்து குன்மம், சூதக வாய்வு ஆகிய நோய்கள் தீரும்.

### 15. குன்மத்துக்கு அரைப்பு மெழுகு

நேர்வாளம் 40 கி. சவ்வீரம், சீனக்காரம், நவச்சாரம், கடுகுரோகணி, காடிக்காரம், பூநீறு, பெருங்காயம் இவற்றை வகைக்கு 4 கி. எடுக்க. இச்சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து

வெங்காயச் சாற்றையும் தேங்காய்ப் பாலையும் விட்டரைத்துப் பீங்கான் பரணியில் அடைத்துக் கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

### 16. குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை

சுக்கு, மிளகு, திப்பிலி, ஆமையோடு, ஓமம், கடுகுரோகணி, வாய்விளங்கம், பெருங்காயம், இந்துப்பு, நேர்வாளம் வகைக்கு *4* கி. எடுத்துக் கல்வத்திட்டு உத்தாமணி எனும் வேலிப்பருத்திச் சாறு விட்டு *130* மி.கி. அளவுள்ள மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்க.

அகத்திக்கீரையை வதக்கின சாறு அல்லது முருங்கை இலையை வதக்கின சாற்றில் ஒன்று அல்லது ஒன்றரை மாத்திரை, நோயாளியின் தன்மை, நோயின் வன்மை அறிந்து கொடுக்க அள்ளுமாந்தம், முக்குமாந்தம், சுரம் இவை தீரும். மலம் சுத்தி யாகும். புளி நீக்கவும்.

குறிப்பு :

ஆமையோட்டை உத்தாமணிச்சாற்றில் ஒரு நாள் ஊற வைத்துப் பிறகு மருந்துக்குச் சேர்த்துக் கொள்ளவும்.

### 17. கழிச்சல்களுக்குக் கருவேப்பிலை இளகம்

*70* கி. சுக்கு, கருவேப்பிலை இவையிரண்டையும் இடித்து *1.3* லி. இளநீர்த் தண்ணீரிலே போட்டு பாதியளவாய் வற்றக் காய்ச்சி வடிகட்டிக் கொள்க. சாதிக்காய், கிராம்பு, தாளிசபத்திரி, அதிவிடையம், காட்டத்திப்பூ, கருவேப்பிலை, இந்துப்பு, கசகசா இவற்றை வகைக்கு *4* கி. எடுத்து மேற்சொன்ன குடிநீர் விட்டரைத்து அவ்விழுதை அதிலேயே கலந்து கொதிக்க வைத்துக் கொள்க. பசுநெய்யை ஒரு கிண்ணம் விட்டு கிண்டி இலேகிய பதத்திலிறக்கிக் கொள்ளவும். கழற்சிக்காயளவு காலை, மாலை நாளறிந்து கொடுக்க வயிற்றுக் கடுப்பு, கிராணி, கழிச்சல், அதிசாரப் போக்கு இவை தீரும்.

**18. குழந்தைகள் கழிச்சலுக்குக் குடிநீர் - 1**

தாளிசபத்திரி, மிளகு இவற்றைச் சம அளவெடுத்து முறைப்படி குடிநீரிட்டுக் கொள்க. அதனை 15-30 மி.லி. அளவறிந்து குழந்தைகளுக்குக் கொடுக்க கழிச்சல் குணமாகும்.

***கழிச்சலுக்குக் குடிநீர் - 2**

பெருமரம், முத்தக்காசு, அதிவிடையம், காந்தம், வில்வம், பாதிரி, பங்கம்பாளை, நாபி இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து தேவையான அளவு தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதனை அளவறிந்து நோயாளிக்குக் கொடுக்க கழிச்சல் குணமாகும்.

**கழிச்சலுக்குக் குடிநீர் - 3**

மாம்பட்டை, மாங்கொழுந்து, நாவல்பட்டை, நாவல் கொழுந்து, ஆலம்விழுது ஆகிய மூலிகைப் பொருட்களைச் சம அளவெடுத்து இடித்துக் குடிநீர் செய்து மூன்று நாட்கள், ஆறு வேளை கொள்ள சீதக் கழிச்சல், இரத்தக் கழிச்சல் தீரும்.

**† 19. கழிச்சலுக்குக் கற்கம்**

கரிசலாங்கண்ணியின் பட்டை $17\frac{1}{2}$ கி. எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்துக் கொள்க. புளியைச் சிறிதளவு அதனுடன் சேர்த்துப் பிசைந்து உட்கொள்ள கழிச்சல் கட்டுப்படும்.

அளவு : 3 கி முதல் 6 கி வரை.

---

* *பெருமர முத்தக் காசு*
*பேரதி விடையங் காந்தம்*
*பருகிய வில்வ மோடு*
*பாதிரி பங்கம் பாளை*
*உரியுட னாபி ...........*
*யுரவே யெட்டொன் றாக்கி*
*கரிய மா லணையே கேளிர்*
*கட்டிடு மதிசா ரங்கள்!*

நுணாப்பட்டையையும் கருஞ்சீரகத்தையும் நன்கு வறுத்துப் பொடித்து மேற்சொன்ன மருந்தில் போட்டு மூன்று வேளை கொடுக்க கழிச்சல் கட்டும்.

### 20. கழிச்சலுக்குக் களி

பொன்முசுட்டைவேர், மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, தேசாவரம், ஓமம், வசம்பு, சித்திரமூலம், செவியம், இவற்றை வகைக்கு *24* கி எடுத்து இடித்துச் சட்டியில் போட்டு எரித்து பற்பமாகும் வரைக்கும் கிளறிக் கொள்ளவும். அதை உரலிலிட்டு தேன் ஊற்றி இடித்து களிப்போலே எடுத்து சீசாவில் அடைத்துக் கொள்ளவும். கழிச்சலுள்ளவர்களுக்கு எலுமிச்சங்காயளவு முதலிலும் ஐந்து மணி நேரம் கழித்து எலுமிச்சங்காயில் பாதியளவிலும் முக்கால் மணி நேரம் கழித்து மூன்றாவது முறையாக அவ்வளவிலும் பாதியளவு தரவும்.

### 21. இரத்தக் கழிச்சலுக்கு அன்னப்பொடி

வெடியுப்பும் சாதிக்காயும் சம அளவெடுத்துப் பொடி செய்து சாதத்தில் போட்டு சாப்பிடவும். இரத்தக் கழிச்சல் குணமாகும்.

### 22. கழிச்சலுக்குச் சூரணம் - 1

மிளகைப் புளித்த காடித் தண்ணீர்விட்டு அரைத்து வசம்பிற்குக் கவசமாகச் செய்து கொள்க. பின் அதனைச் சுட்டுச் சாம்பலாக்கி தண்ணீர் விட்டுக் கரைத்துக் கொடுக்க கழிச்சல் குணமாகும்.

---

(தொடர்ச்சி)

† *தள்ளடா கரிச்சான் பட்டையை யரைப்பலம்*
*விள்ளடா வின்பால் விட்டரைத்தே யரை*
*துள்ளடா புளியொடு ராவாய்ப் பிசைந்தே*
*கொள்ளடா பேதிகொட்டு நோய் தீருமே!*

***கழிச்சலுக்குச் சூரணம் - 2**

மாதுளை, பருத்திவிதை, கற்கடகசிங்கி, ஏலம், நெற்பொரி, அக்கிராகாரம், அதிவிடையம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துப் பொடித்து தேவையான அளவு சர்க்கரையைச் சேர்த்து அளவறிந்து கொடுக்க கழிச்சல், கிராணிமூலம் குணமாகும்.

**†கழிச்சலுக்குச் சூரணம் - 3**

ஆவரை, அத்தி, இத்தி, கடலழிஞ்சி, மருதம்பட்டை இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துப் பொடித்து தேனில் கலந்துண்ண கழிச்சல் தீரும்.

**23. இரத்தக் கடுப்புக்குச் சூரணம் - 1**

நெல்லிக்காய், கடுக்காய் வகைக்கு 70 கி., புளியங் கொட்டைத் தோல் 50 கி. எடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. அளவறிந்து மூன்று நாட்களுக்குத் தயிரில் கொடுக்கவும். இரத்தக்கடுப்பு தீரும்.

---

* *மாதுளை யோடு பருத்திவிரை*
*மாவுங்கற் கடக சிங்கி*
*போத யேல நெற்பொரி*
*பொருந்துஞ் சீனி சக்கரையும்*
*ஆத ரோணி முக்கையுடன்*
*அக்கு கார மதிவிடையம்*
*வேத முறையாய்ச் செய்வோர்க்கு*
*விடுமே கிராணி மூலமுமே.*

† *ஆவரை அத்தி இத்தி*
*அடுத்ததோர் கடலி ராஞ்சி*
*மேவிய மருதின் தோலும்*
*விரும்பிய மெய்ப் பொடியாய்ச் செய்து*
*பூவினில் மெல்லி யாரே*
*புதியதேன் தன்னி லுண்ண*
*காவிரி யாறும் வற்றி*
*கடல்களுஞ் சுவறுந் தானே!*

### இரத்தக் கடுப்புக்குச் சூரணம் - 2

நெல்லிக்காய், புளியங்கொட்டைத் தோல் இவற்றை வகைக்கு 8 கி., கடுக்காய் 70 கி. எடுத்து மூன்றையும் சூரணித்துத் தயிரில் கலந்து மூன்று நாட்களுக்குக் கொடுக்க இரத்தக்கடுப்பு தீரும்.

### 24. சலக்கழிச்சலுக்கு மருந்து

நிலப்பனங்கிழங்கை இரண்டு விளாங்காயளவாக அரைத்துக் கொள்க. 2 லி. வெள்ளாட்டுப் பாலைக் காயவைத்து ஆறிய பின் மேற்கூறிய கிழங்குப்பாலில் கலந்து கொள்க. அதில் தயிர் தோய்த்து பின் அதனின்று வெண்ணெயெடுத்து ஏழு நாட்கள் கொள்ளவும். பத்தியத்துக்குரிய கறி கூட்டவும். சலக்கழிச்சல் குணமாகும்.

### 25. கழிச்சலுக்குச் சாறு

முருங்கையிலைச் சாற்றையும் பசுவெண்ணெயையும் சேர்த்து கழிச்சல் அதிகமானவர்களுக்கு மாற்றாகக் கொடுக்கவும்.

### 26. ஊறல் குடிநீர்

நற்கோவைத் தண்டை நறுக்கி தண்ணீரில் ஊற வைத்துக் கொள்க. சிறிதுநேரம் சென்ற பிறகு பிசைந்து ஊறிய தண்ணீரைக் கொடுக்கவும்.

### 27. மலட்டுப்புழு விழுவதற்குச் சாறு

ஆடுதின்னாப்பாளை வேரைப் பசுவின் பாலில் அரைத்து மூன்று நாட்கள் கொடுக்கவும். மலட்டுப்புழு நீங்கி குழந்தை யுண்டாகும்.

### 28. மலட்டுப்புழு விழுவதற்குக் கற்கம்

விளாமரத்தின் புல்லுருவியைச் சோதி நட்சத்திரத்தில் எடுத்துப் பாலிலரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். மலட்டுப்புழு விழும். குழந்தையுண்டாம்.

பொன்னாங்காணி விதையை அரைத்துக் கடுக்காயளவு மூன்று நாட்கள் கொடுக்க மலட்டுப் புழு விழும்.

### 29. மலட்டுப்புழு விழுவதற்குச் சூரணம்

ஞாயிற்றுக்கிழமை சூரியனை வணங்கி அமுக்கிரா வேரைக் காய வைத்துப் பொடி செய்து பசு நெய்யில் மூன்று நாட்கள் கொடுக்க மலட்டுப்புழு விழும்.

## 10. சோகை காமாலை நோய்கள்

### 1. சோகைக்குக் குடிநீர் - 1

வெங்காரம், வெடியுப்பு வகைக்கு 35 கி. எடுத்து கரண்டியிலிட்டு உருக்கி மாத்திரை செய்து அதனையே முறைப்படி குடிநீராகச் செய்து அளவறிந்து கொடுக்க சோகை குணமாகும்.

### சோகை, காமாலை, இளைப்புக்குக் குடிநீர் - 2

கையாந்தகரை, செந்தட்டி, நீர்முள்ளி, விழுதிவேர், கோவைத் தண்டு, பூவரசம்பட்டை, சிறுபீளை, சம்புநாவல் துளிர், நெருஞ்சி வேர், சிறுகீரை, நிலவாகை, உசிலம்பட்டை வகைக்கு 210 கி., கடுக்காய், பீதரோகணி, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், திப்பிலி இவற்றைச் சமஅளவெடுத்துக் கொள்க. அனைத்துச் சரக்குகளையும் இடித்து 6 பங்கு செய்து அதில் ஒரு பங்கெடுத்து 5 லி. தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்க. இவ்வாறு 6 நாட்கள் கொள்ளவும். உப்பைத் தவிர்த்து மருந்தினை உண்டால் சோகை, காமாலை, வீக்கம், பாண்டு, மகோதரம், பொருமல், இளைப்பு, பீலிகை, ஆகிய நோய்கள் தீரும்.

### 2. காமாலைக்குக் கற்கம்

கீழாநெல்லிவேர், மிளகு, பூண்டு வகைக்கு 175 கி. எடுத்து பசுவின் கோமியத்தில் அரைத்து வைக்க. தேவையான அளவு

பசுகோமியத்தில் கலந்து மூன்று நாட்கள் கொடுக்க காமாலை தீரும். கடும்பத்தியம் காக்க.

**3. காமாலை, சோகைக்குச் சூரணம்**

பசுவின் கோமியத்தில், விதை நீக்கிப் பொடித்த ஐந்து கடுக்காயைப் பொடித்து கலந்து கொள்க. அதனை வடிகட்டி அளவறிந்து நோயாளிக்குக் கொடுக்கவும். 200 மி.லி. - 400 மி.லி. அளவு தண்ணீரைக் கொடுக்கவும்.

**4. மஞ்சள்காமாலைக்கு எண்ணெய்**

கழற்சி, அவுரி, கோழியவரை, ஆடுதின்னாப்பாளை, முடக்கொத்தான் இவற்றின் இலைகளை எடுத்துக் கொள்க. உள்ளி, வசம்பு, பெருங்காயம் இவற்றைப் பொடித்துக் கொள்க. மேற்சொன்னவற்றை விளக்கெண்ணெயில் போட்டெரித்து ஐந்து நாள் கொடுக்க மஞ்சள் காமாலை குணமாகும். சோகையும் தீரும்.

# 11. கிரந்தி, சூலை, அரையாப்பு

**1. கிரந்திக்கு எண்ணெய்**

கொட்டை முத்தெண்ணெய் காய்ச்சி வெந்து வரும்போது கொல்லங் கோவைக்கிழங்கு ஒரு தேங்காயளவும் அதே அளவு ஈரவெங்காயத்தையும் தோல் சீவி எண்ணெயில் போட்டு பொன்னிறமாகும்போது இறக்கிக் கொள்க. உணவு சாப்பிடுமுன் சிறுகரண்டியில் மூன்று கரண்டி எண்ணெய் கொடுக்கவும். மாலையில் கற்கத்தை எடுத்துச் சாப்பிடவும். உப்பு, புளி தவிர்க்கவும். ஏழாம் நாள் தலை முழுகவும். கிரந்தி அனைத்தும் ஆறும்.

**2. கிரந்தி, சூலைக்குக் காந்த பற்பம்**

காந்தம் 12 கி., இரசம், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிலிங்கம், ஓமம் இவற்றை வகைக்கு 8 கி. எடுத்து முறைப்படி சுத்தி செய்து சூரணம் செய்து அளவறிந்து தேனில் கொடுக்க

கிரந்தி, சூலை தீரும். பசும்பாலும் சோறும் சாப்பிடுக. இவ்வாறு பன்னிரெண்டு நாட்கள் சாப்பிடவும். நாற்பது நாட்களுக்குக் கரப்பானை அதிகப்படுத்தும் பொருட்களைத் தவிர்க்கவும்.

**3. கிரந்திக்கு மாத்திரை**

இரசகற்பூரம், இலவங்கம், மிளகு, வாய்விளங்கம் இவற்றை வகைக்கு *4* கி. எடுத்து செம்பருத்திச்சாறு விட்டரைத்து பதினான்கு மாத்திரைகளாகச் செய்து கொள்க. ஏழு நாட்களுக்கு இரு வேளை யாகச் சாப்பிடவும். சுட்ட உப்பு, நெய் சோறு பத்தியத்திற்குச் சேர்க்கவும்.

**4. கிரந்தி, சூலை, குட்டம், வெடி சூலைக்குப் புகை (திரி)**

சாதிலிங்கம் *2* கி. எடுத்து முறைப்படி பொடித்துக் கொள்க. அதனுடன் எருக்கம் சாம்பலை அதே அளவெடுத்து துணியில் போட்டு திரித்து வைக்க. நோயாளியைக் கட்டிலின் மேல் முக்காடு போட்டு படுக்க வைத்து திரியைக் கொளுத்தி அபான வழியாகப் புகை பிடிக்க கிரந்தி, சூலை, குட்டம், வெடிசூலை தீரும்.

**5. அரையாப்பு, கிரந்திப் புண்ணுக்கு மாத்திரை**

இலிங்கம், பூரம், மிளகாய்விதை இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று மணிநேரமரைத்து *14* மாத்திரை செய்து காலை, மாலை *7* நாட்களுக்குக் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்த்து பசும்பால் சேர்க்கவும். எட்டாம் நாள் உப்பை வறுத்துச் சேர்க்கவும். ஒன்பதாம் நாள் விளக்கெண்ணெய் கழிச்சல் ஆவதற்குக் கொடுக்கவும். பதினைந்தாம் நாள் ஓமம் தேய்த்து முழுகவும். அரையாப்பு, கிரந்தி தீரும்.

**6. அரையாப்புக் கட்டிக்குக் கட்டு**

மூக்கிரட்டை இலையைப் பிட்டவித்து, கட்டியின் மேல் வைத்து மூன்று நாள் கட்டவும். கட்டி கரையும்.

***7. அரையாப்புக்குப் பற்று-1**

நீர்மேல் நெருப்பின் இலையை அரைத்து அரையாப்புக் கட்டியின்மேல் பூசவேண்டும். இவ்வாறு ஆறுவேளை செய்ய அரையாப்பு குணமாகும்.

**†அரையாப்புக்குப் பற்று-2**

சங்கு, சங்கங்குப்பி, நொச்சி, வெள்ளறுகு, வன்னி, கிரந்தி நாயகம் போன்ற மருந்துச் சரக்குகளை அரைத்து மேற்பூச்சாகப் போட அரையாப்பு குணமாகும்.

**அரையாப்புக்குப் பற்று-3**

ஒரு பாக்களவு கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்து கோழி முட்டையின் வெண்கருவில் கலந்து குழப்பிக் கொண்டு அரையாப்பின் மேல் பூசவும். மிளகு, உப்பு, மீன், எண்ணெய் நெய்யும் ஆன பதார்த்தங்கள். கரப்பான் பண்டங்கள், புளி, புகை தவிர்த்தால் குணமாகும்.

**அரையாப்புக் கட்டிக்குப் பற்று-4**

நீர்மேல் நெருப்பின் இலையை அரைத்து அரையாப்புக் கட்டியின் மேல் நான்கு நாட்கள் போட கட்டி நீங்கும்.

**அரையாப்புக் கட்டிக்குப் பற்று-5**

கடுகுரோகணி, பெருங்காயம், இவற்றைக் குப்பைமேனிச் சாற்றிலரைத்து குதிக்காலில் தேய்க்கவும். கரைந்து போகும்.

---

* *திரு மின்னஞ் செப்பு ரேனுத்திரு*
*நீரு மேலு நெருப்பைப் பறித்தரை*
*ஆறுபோதரை யாப்பி லிருக்கிடில்*
*ஏறுங் கட்டி யிளகிவிட் டோடுமே!*

† *செப்பு மெண்ணெய் தெளிவுடன் மாந்தர்க்கு*
*ஒப்புஞ் சங்கோடு சங்கங் குப்பியுடன்*
*வெப்பு நொச்சி வெள்ளறுகுடன் வன்னியும்*
*கப்புங் கிரந்தியின் நாயகங் காப்புமே!*

### 8. அரையாப்புக் கட்டிக்குச் சீலை

ஆடுதின்னாப்பாளை, உள்ளி, வசம்பு இவற்றை நல்லெண்ணெயில் பொரித்து புங்கன்வேர்ப்பட்டைச் சாற்றில் குழப்பிக் கொள்க. மெல்லிய சீலையில் குழம்பைத் தோய்த்து நிழலிலுலர்த்திக் கொள்க. அதனை, அரையாப்பு புண்ணைக் கழுவி அதன்மேல் போட அரையாப்புக் கட்டி குணமாகும்.

## 12. தாது விருத்தி

### 1. இந்திரியம் கட்ட மருந்து

பச்சை நிலப்பனங்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஆனைநெருஞ்சிக்காய் வகைக்கு *12* கி. எடுத்து மைபோலரைத்து *400* மி.லி. பசும்பாலில் கலந்து காய்ச்சிக் கொள்க. இரவு உணவிற்குப்பின் அளவறிந்து தொடர்ந்து மூன்று நாட்கள் கொள்ளவும். இந்திரியம் கட்டும்.

### 2. விந்து கட்டுக்குச் சூரணம்

*18* கி. அமுக்கராவேர், இலவங்கம், அபின் வகைக்கு *4* கி., சாதிக்காய் *1* எடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. மூவிரலளவு காலை, மாலை, நான்கு நாட்கள் சாப்பிடவும். *200* மி.லி. பசுவின் பாலைக் காய்ச்சிக் குடிக்கவும். இச்சாபத்தியம் காக்க.

### 3. தாதுவிருத்திக்குக் கற்கம்

பரங்கிப்பட்டை, பூமிசர்க்கரைக்கிழங்கு, துத்தி வேர்ப்பட்டை, சந்தனம், தேற்றாங்கொட்டை, கிழக்கே ஓடிப் போன முருங்கை வேர்ப்பட்டை, பூனைக்காலி விதை இவற்றைச் சம அளவெடுத்துத் தேங்காய்ப்பால் விட்டு அரைத்துக் கொள்க. வெள்ளாட்டுப் பாலில் சீனிசர்க்கரை போட்டு கலந்து அதில் மருந்தையும் சேர்த்துக் கொள்க. அதனை மூன்று நாட்கள் காலை, மாலை உட்கொள்ளவும். ஐந்தாம் நாள் தலை முழுகி ஆறாம் நாள் உடலுறவு கொள்ளவும். பத்தியம் காக்க வேண்டும்.

### 4. தாதுவிருத்திக்குச் சூரணம்

பூனைக்காஞ்சொறிவிதை, நிலப்பனங்கிழங்கு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணமாக்கிக் கொள்க. அதனுடன் சீனிசர்க்கரையையும் சமஅளவு போட்டு பொடித்து நன்கு கலந்து சாப்பிடவும். தாது விருத்தியின் தன்மைக்கேற்ப நாட்களைக் கூட்டிக் கொள்ளவும்.

**அளவு :** 6 முதல் 12 கிராம் காலை, இரவு பசும்பாலில் ஆகாரத்திற்குப் பின் சாப்பிடவும்.

### 5. தாது விருத்திக்குப் பிட்டு

முடக்கற்றான் சாற்றில் பச்சரிசியை ஊறப்போட்டு நன்கு ஊறியபிறகு இடித்து மாவாக்கிக் கொள்க. முறைப்படி பிட்டவித்தெடுத்துக் கொண்டு நெய் சேர்த்து சாப்பிடவும். இவ்வாறு பன்னிரெண்டு நாட்கள் சாப்பிட நாற்பது வருடத்திற்குரிய தாது விருத்தியுண்டாகும்.

### 6. தாது விருத்திக்கு மதன குடோரி இளகம்

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கசகசா, தான்றிக்காய், அதிமதுரம், கோட்டம், வால்மிளகு, மிளகு, இலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், கற்கடகசிங்கி, கடுக்காய், கருவேலம்பிசின், கருவேலங்கொழுந்து, கருவேலம்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, கள்ளிமொட்டு, முருங்கைப்பூ, முருங்கைப்பிஞ்சு, ஆலம்பால், அத்திப்பால், கள்ளிப்பால் இவற்றை வகைக்கு 24 கி. எடுத்து முறைப்படி பொடித்து வைக்க. தேங்காய்பால், வெள்ளாட்டுப் பால், இளநீர் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து காய்ச்சி பிசின் வகைகள், சூரணம் இவற்றைப் போட்டு கிண்டி 675 மி.லி. தேன், 1.3 லி. நெய், இவற்றை விட்டு கிண்டி இலேகிய பதத்தில் இறக்கிக் கொள்ளவும். அதை அளவறிந்து கொடுக்க தாது விருத்தியாகும்.

### 7. தாது விருத்திக்குச் சிட்டுக்குருவி இளகம்

சிட்டுக்குருவி நூறு எடுத்து அவற்றின் குடல், தலை இவற்றை நீக்கி பசுவின் நெய்யில் வேக வைத்து இடித்துக்

கொள்க. அதில் சீனி 220 கி. பனைவெல்லம், பனங்கற்கண்டு, சீனிக் கற்கண்டு இவற்றை வகைக்கு 210 கி. எடுத்து மேற்சொன்ன மாமிசத்தில் போட்டு நன்றாய் இடித்துத் திரட்டி ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொள்க. அதனைக் கழற்சிக் காயளவு எடுத்து நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ள தாதுவிருத்தியாகும்.

### 8. தாதுவிருத்திக்கு இலேபனதம்பன இளகம்

சீரகம், மிளகு, இலவங்கம், இலவங்கப்பட்டை வகைக்கு 35 கி., சாதிக்காய், மதனகாமப்பூ 12 கி. சுக்கு, கசகசா வகைக்கு 140 கி. கஞ்சா 70 கி. தேங்காய் 65 கி. பாதாம்பருப்பு 250 கி., அனைத்துச் சரக்குகளையும் முறைப்படி சூரணம் செய்து கொள்க. ஊர் சிட்டுக் குருவி 10 ஐச் சேர்க்க. பனைவெல்லம் 500 கி. சேர்த்து இலேகியமாகக் கிண்டிக் கொள்க. இறக்குந் தருவாயில் 250 கி. நெய்யைச் சேர்த்து பதத்துடன் இறக்கி பத்திரப்படுத்துக. அளவறிந்து கொடுக்க தாது விருத்தியாகும்.

### 9. தாதுவிருத்திக்கு அரைப்பு மெழுகு

அபின், அக்கராகாரம், இலவங்கம், சாதிக்காய், பால் சாம்பிராணி இவற்றை வகைக்கு 12 கி. எடுத்துத் தேவையான அளவு தேன் விட்டு மூன்று நாள் அரைக்கவும். பின் அதனைச் சுண்டைக்காயளவு உட்கொள்ளவும். பசும்பால் சேர்த்துக் கொள்ளவும். தாது விருத்தியாகும்.

### 10. தாதுவிருத்திக்கு முத்து பற்பம்

கெட்டி முத்து 35 கி. எடுத்துப் பீங்கான் கோப்பையில் தேன் விட்டு மூன்று நாள் ஊறவைத்துக் கழுவி, சங்கம் பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து, எடுத்துக்கொள்க. அதனை கண்டங்கத்திரி பழத்தின் சாற்றால் மெழுகு பதமாகுமளவுக்கு அரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைக்க. காய்ந்த பிறகு மேலோடுமூடி நான்கு அல்லது ஐந்து சீலை செய்து உலர்ந்தபின்பு முப்பது எருவில் புடம் போட்டெடுத்துக் கொள்ள பற்பமாகும். இதனுடன் தங்க பற்பத்தையும் சரியெடை சேர்த்து நெய், வெண்ணெய், பால் அல்லது தகுந்த இலேகியங்களில் உட்கொள்ள தாது விருத்தி அதிகமுண்டாகும்.

# 13. மல, சிறுநீர் தொடர்பு நோய்கள்

***1. மலசலக்கட்டுக்குப் பற்பம்**

வெங்காரம், சவுக்காரம், சீனக்காரம், இந்துப்பு இவற்றைச் சமஅளவெடுத்து இளவறுவலாக வறுத்து இளநீரில் கலந்து கொடுக்க மலசலக்கட்டு நீங்கி சுகமாகும்.

**2. நீரடைப்புக்குச் சாறு**

வால்மிளகு 6 கி. எடுத்து இடித்து சீலையில் வடித்து 350 மி.லி. தண்ணீரில் கலந்து 30 மி.லி. இருவேளையாக அல்லது நான்கு வேளையாகக் கொடுக்க நீரடைப்பு குணமாகும்.

**3. நீர்க்கட்டுக்குக் கற்கம்**

முடக்கற்றானிலை 35 கி., வெள்ளைப்பூண்டு $17\frac{1}{2}$ கி. அளவெடுத்து அரைத்து பால் அல்லது வெந்நீரில் உட்கொள்ள சிறுநீர் இறங்கும்.

**அளவு :** 6 கி. முதல் 12 கி. வரைக் கொடுக்கவும்.

**4. நீர்க்கட்டுக்குச் சூரணம்-1**

சாதிக்காயில் நான்கில் ஒரு பங்கு, சாதிபத்திரி, இலவங்கம், ஏலரிசி வகைக்கு 3 கி. எடுத்துச் சூரணித்துக் கொண்டு அவரை இலைச்சாற்றில் அளவறிந்து கொடுக்க நீர்க்கட்டு நீங்கி சிறுநீர் கழியும்.

---

* *மங்காத குழன்மடவீர் சொல்லக் கேளீர்*
*வாயுவினால் சிற்றின்ப மதிகமானால்*
*தங்கி நின்ற விரைவாய்வுங் கட்டிக் கொள்ளும்*
*தாரணியில் மானிடர்கள் சனிக்க மாட்டார்*
*வெங்காரஞ் சவுக்காரஞ் சீனக் காரம்*
*வெண்மதியா மிந்துப்பு வெதுப்பிக் கொண்டு*
*சிங்கார விளநீரில் கொள்வீ ராகில்*
*சிக்காது மலசலங்கள் திண்ணந் தானே!*

### நீர்க்கட்டுக்குச் சூரணம்-2

சாதிக்காயில் நான்கில் ஒரு பங்கு, சாதிபத்திரி, இலவங்கம், ஏலரிசி வகைக்கு 3 கி. எடுத்துச் சூரணித்துக் கொண்டு அவரை இலைச்சாற்றில் அளவறிந்து கொடுக்க நீர்க்கட்டு நீங்கி சிறுநீர் கழியும்.

### 5. நீர்ச்சுருக்குக்கு இலேகியம்

கசகசா 35 கி., வால்மிளகு 9 கி., தேற்றாங்கொட்டை 9 கி., சீனி 140 கி. எடுத்து சூரணித்துக் கொள்க. 300 மி.லி. பாலில் அவித்து தேவையான அளவு நெய்விட்டு கிளறிக் கொள்க. 10 நாட்கள் காலை, மாலை அளவறிந்து உட்கொள்ள நீரெரிச்சல், நீர்ச்சுருக்கு, நீரருகல் குணமாகும்.

### 6. நீர்க்கட்டுக்குப் பற்பம்-1

வெடியுப்பைக் கரண்டியில் காயவைத்து எடுத்து வெண்ணெயில் கலந்து கொடுக்க நீர்க்கட்டு நீங்கும்.

### நீர்க்கட்டுக்குப் பற்பம்-2

முள்ளங்கிக் கிழங்கு சாற்றில் பொரித்த வெண்காரத்தைக் கலந்து கொடுக்க நீர் இறங்கும்.

### நீர்க்கட்டுக்குப் பற்பம்-3

35 கி. வெடியுப்பைத் தலையோட்டில் வைத்து மூடி பற்பமாகச் செய்து கொள்க. அதில் 180 மி.கி. எடுத்து வாழைக்கிழங்குச் சாற்றில் அல்லது முள்ளங்கிச்சாற்றில் கலந்து கொடுக்க சிறுநீர் இறங்கும்.

### *7. நீரிழிவுக்குக் கற்கம்

325 மி.லி. பசும்பாலில் 35 கி. சத்திச்சாரணை வேரை அரைத்து மூன்று நாள் ஆறுவேளை ச்சாப்பிட நீரிழிவு குறையும்.

---

* பார்த்திடாவி நற்பாலுழக் காமதில்
சார்த்திடாய் சத்திச் சாரணைவேர்பலம்

### 8. நீரிழிவுக்கு வங்கச் செந்தூரம்

புதுச்சட்டியை அடுப்பில் வைத்து 100 கி. ஈயம் விட்டு அமுக்கரா வேர்ப்பட்டையைப் பொடித்து அதில் தூவிக்கொண்டே வறுக்க செந்தூரமாகும். இதனுடன் கம்புப்பொரி, சோளப்பொரி, திணைப் பொரி, காந்த செந்தூரம், கஞ்சா விதை, அபின், காவிக்கல், ஆவாரம் விதை, அரசுவிதை இவற்றையும் சேர்த்து சமமாக எடுத்து தேனில் கொடுக்க முப்பத்திரண்டு வகை நீரிழிவு நோயும் தீரும்.

### 9. வெகு மூத்திரத்திற்கு மாத்திரை-1

நீர்ப்பூலாங்கொழுந்து, ஆவிரை விதை, மஞ்சள் இவற்றை வகைக்கு 40 கி. எடுத்து அத்திப்பட்டைக் குடிநீரில் அரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. ஏழு நாட்களுக்குக் காலை, மாலை சாப்பிடவும். பகலில் மோர் சாதமும் இரவில் நெய்ச்சோறும் சாப்பிடவும்.

### வெகு மூத்திரத்திற்கு மாத்திரை-2

ஒரு பானையில் 1.3 லி. தண்ணீர் விட்டு வேடுகட்டிக் கொள்க. அதில் ஒரு பிடி ஆவாரங்கொழுந்தையும் இலையையும் போட்டவித்துக் கொள்க. அதில் கருவேலம் பிசின், வெள்வேலம் பிசின், விளாம்பிசின் மூன்றும் சம அளவெடுக்க. காந்தக்கல் மூன்று பங்கு, தேற்றாங்கொட்டை பாக்கு போல சீவியது மூன்று பங்கு ஆகியவை சேர்த்து அவித்து அதனை எடுத்தரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரைகளாகச் செய்து உலர்த்திக் கொள்க. அதில் ஒரு மாத்திரை எடுத்து எருமை மோரில் உரைத்து கொடுக்கவும். இவ்வாறு பதினைந்து நாட்கள் கொடுக்க குணமாகும்.

### 10. சிறுநீர் அடிக்கடி கழிதலுக்குச் சூரணம்

வெட்டிவேர், அதிவிடையம் வகைக்கு 35 கி., இந்துப்பு, பரங்கிப்பட்டை வகைக்கு 18 கி., பனைவேர் 20 கி., பற்பாடகம்

---

(தொடர்ச்சி)

*சேர்த்திடாய் அரைத் திவ்வித மூன்றுநாள்*
*ஏர்த்தி டார்த்த நீரிழிவு வோடுமே!*

15 கி., கொத்துமல்லி 9 கி. அளவெடுத்து அனைத்துச் சரக்கு களையும் சுத்தி செய்து முறைப்படி சூரணம் செய்து தேவையான அளவு சர்க்கரை சேர்த்துக் கொள்க. 2 கி. - 3 கி. அளவு காலை, மாலை சாப்பிட அடிக்கடி சிறுநீர் இறங்குவது குறையும்.

### 11. கல் விழ மருந்து

பச்சைப் பனை ஓலையைத் துவைத்தெடுத்து சாறெடுத்து அத்துடன் சிறிதளவு தேன்வார்த்துப் பிசைந்து சாப்பிட கொடுக்க வேண்டும். பசும்பாலையும், சிறுபயிரையும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க கல் விழும்.

### 12. வெள்ளைக்குக் குடிநீர்

கீழாநெல்லி, சிறுஅம்மான்பச்சரிசி, சிறுகீரை, முள்ளங்கி இவற்றைச் சமஅளவெடுத்து முறைப்படி குடிநீர் செய்து மூன்று வேளை கொடுக்க வெள்ளை குணமாகும்.

### 13. வெள்ளைக்குக் கற்கம்

கீழாநெல்லித்தழை 140 கி., வெள்ளைக் குங்கிலியம் 70 கி. எடுத்து சேர்த்தரைத்து ஏழுநாட்கள் உள்ளுக்குக் கொடுக்க வெள்ளை குணமாகும். உப்பு, புளி நீக்கவும்.

### 14. வெள்ளைக்கு உருண்டை

வெடியுப்பு 4 கி., கற்பூரம் 3 கி. எடுத்து சேர்த்தரைத்து ஆறு உருண்டைகளாகச் செய்து கொள்க. மூன்று நாட்கள் காலை, மாலை கொடுக்க வெள்ளை குணமாகும்.

### 15. நாட்பட்ட வெள்ளைக்குக் கற்கம்

சிறுகள்ளிக் கொழுந்து கிள்ளியது, மிளகு இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து இரண்டையும் சேர்த்தரைத்து வெள்ளாட்டுப்பால் 150 மி.லி.யில் கலந்து காலையில் மட்டும் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். நாட்பட்ட வெள்ளை, வெள்ளைச் சுருக்கு குணமாகும்.

### 16. வெள்ளைக்குச் சூரணம்-1

சீரகம் 8 கி., அதிமதுரம் 4 கி., வெட்பாலையரிசி 70 கி., சந்தனக் கட்டை 9 கி., எடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. அதனுடன் 70 கி. கற்கண்டைப் பொடித்து கலந்து ஏழு நாட்களுக்குக் கொடுக்கவும். புளி தவிர்க்க.

### வெள்ளைக்குச் சூரணம்-2

முடக்கொத்தான், மிளகு, வெள்ளரிவிதை, சம்புநாவல் விதை ஆகியவற்றைச் சமபங்கெடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. நோயின் வன்மை மென்மை நோயாளியின் தன்மை அறிந்து மூன்று நாட்கள் பாலில் கொடுக்க வெள்ளை குணமாகும்.

### வெள்ளைக்குச் சூரணம்-3

நன்னாரிவேர், தேற்றாங்கொட்டை இவற்றைச் சமஅளவு எடுத்து சூரணித்துக் கொள்க. எலுமிச்சம்பழம் நான்கினைச்சாறு பிழிந்து கொள்க. இளநீர், வெண்ணெயைச் சாற்றுடன் கலந்து மேற்குறிப்பிட்ட சூரணத்தைத் தூவி கலந்து மூன்று நாட்கள் கொடுக்க வெள்ளை குணமாகும்.

### வெள்ளைக்குச் சூரணம்-4

சந்தனம், அகிற்கட்டை, ஏலம், இலவங்கப்பட்டை, கிராம்பு, சோம்பு, கருஞ்சீரகம், அதிமதுரம், வெட்பாலை, தேற்றான், அறுகம்வேர், சிற்றாமுட்டி, கார்போகவித்து வகைக்கு 18 கி. எடுத்து வெயிலில் உலர்த்தி முறைப்படி சூரணம் செய்து கொள்க. அதற்குச் சமன் கற்கண்டைக் கூட்டி பசுவெண்ணெயில் 48 நாட்கள் கொள்ள வெள்ளை, நீரெரிப்பு தீரும்.

### 17. வெள்ளைக்கு வெண்ணெய்

பச்சைவெட்டுக் குங்கிலியம் 35 கி. எடுத்து பொடி செய்து இரண்டு முறை வடிகட்டிக் கொள்க. விளாங்காயளவு வெண்ணெயில் பொடியைப் போட்டுப் பிசைந்து கொள்க. அகலமான சட்டி ஒன்றில் தண்ணீர் ஊற்றி ஏழு முறை பிசைந்து நன்றாய்க் கழுவிக் கொள்க. பூவன் பழத்தில் அந்த வெண்ணெயை நெல்லிக் காயளவு

வைத்து பன்னிரெண்டு நாட்கள் சாப்பிடவும். புளி, புகை ஆகாது. வெள்ளைப்படுதல், வெட்டை நோய், மூத்திரக்கிரீச்சரம் ஆகிய நோய்கள் தீரும்.

### 18. இரத்தவெள்ளைக்கு எண்ணெய்

பொடுதலைச்சாறு 40 மி.லி., நல்லெண்ணெய் 20 மி.லி எடுத்து, கலந்து சூரியபுடம் (வெயிலில்) வைத்து பத்திரப்படுத்தி கொள்ளவும். மூன்று நாள் காலை, மாலை உட்கொள்ளவும். கடும்பத்தியம் மேற்கொள்ளவும். மறுபத்தியத்தில் உப்பை வறுத்துக் கூட்டவும்.

### 19. *வெட்டைக்குத் தைலம்

விலாமிச்சம், கோட்டம், மிளகு வகைக்கு 35 கி. வாய்விடங்கம், வால்மிளகு 9 கி., சடாமாஞ்சில், அதிமதுரம், கஸ்தூரி மஞ்சள்

---

* *பேணப்பா தயிலவகை சொல்லக் கேளு*
*பேரான மிளகு பலம் வாய்விடங்கம் பலங்கால்தான்*
.........................................................
*துகைசேர்ந்த கோஷ்டமொரு பலவீத மாகும்*
*நாணப்பா சடாமாஞ்சி அதிமதுர முடனே*
*நலமிகுந்த கஸ்தூரி மஞ்சள்வகை மூன்றும்*
*காணப்பா விராகனது மூன்றாம் பின்னும்*
*கருதரிய விலாமிச்சம் பலந்தா னொன்றே.*

*ஒன்றான பருங்கோரைக் கிழங்குதனைக் கூட்டி*
*உய்ந்துநின்ற விராகனுமோ னால தாகும்*
*நன்றாக இதுவெல்லாம் ஆவின்பால் விட்டு*
*நயமாக அரைத்தபின்பு மருத்தைக் கேளு*
*சென்றாடு மொசுமொசுக்கை பொன்னாங் காணி*
*சிறந்ததொரு கரிசாலை வகைக்குக் கால்படிசார்*
*குன்றாத காத்தொட்டிச் சார்வார்த் தப்பா*
*குறைவில்லாப் பால்விட்டு சாறுபிழிந்து கொள்ளே!*

*கொள்ளடா பசலைச்சார் கால்படிதான்*
*கூறுகெட்ட மானிடர் பசளைதனை யறியார்*
*விள்ளடா காராட்டுப் பால் கறந்து காச்சி*
*வேறான உரையூத்திக் கடைந்த மோரில்*

இவற்றை வகைக்கு 12 கி., கோரைக்கிழங்கு 16 கி. எடுத்துப் பசும்பால் விட்டு நன்கரைத்துக் கொள்க. பிறகு முசுமுசுக்கை, பொன்னாங்காணி, கரிசாலை, காத்தொட்டி இவற்றின் சாற்றினை வகைக்கு 325 மி.லி. எடுத்து மேற்கூறப்பட்ட அரைத்த கற்கத்தில் விட்டு சாறு பிழிந்து கொள்க. பசலைச்சாறு 325 மி.லியை உடன் சேர்க்க. காராட்டுப் பாலைக் காய்ச்சி பிரையூற்றி மோராக்கிக் கொள்க. 325 மி.லி. புளியிலைச் சாறு, 2.6 லி. நல்லெண்ணெயைக் கலவையில் கலந்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க. அதனை நாற்பது நாட்களுக்கும் தலையில் தேய்த்துக் குளிக்க குட்டம் 18, வெட்டை 88, சத்தி குன்மம், அத்தி சுரம், கபாலச்சூடு, உட்சுரம், மண்டைப் பீனசம், உடல் வறட்சி இவையனைத்தும் தீரும்.

### 20. வெள்ளைக்கு மருந்து

வெண்ணெய், ஏலரிசி இவற்றைத் தேவையான அளவெடுத்து வெந்நீரில் போட்டுக் கொடுக்க வெள்ளை குணமாகும்.

### 21. *சிலேத்தும வெள்ளைக்குப் பற்பம்

வெண்காரத்தை 5 கி. எடுத்துப் பொரித்து பொடித்துக் கொள்க. அதனை ஏழு பங்குகளாக்கி ஏழு நேரம், உண்ண சிலேத்தும வெள்ளை குணமாகும்.

## 15. மூல நோய்கள்

### 1. மூலத்துக்குக் கற்கம்

பிரண்டைக் கொழுந்தைக் கரணைகளாக நறுக்கி வெள்ளாட்டு மோரில் ஊற வைத்துப் பசுவின் மோரில் அரைத்துக் கலக்கி மூன்று நாள் தொடர்ந்து கொடுக்க மூலம் குணமாகும்.

---

* *மேகமாய் வெண்காரம் கழஞ்சிடை*
*ஏகமாய்ப் பொரித்தே பொடித்தேயுடன்*
*பாகமாய் ஏழுபோது பகர்ந் துண்ண*
*வேகமாஞ் சேத்தும வெள்ளையும் நீங்குமே!*

**2. மூலத்துக்குச் சூரணம்**

காட்டுக்கரணை, கறிவேம்பு, பிரண்டை, புளிநடலை, மெருகு, கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, நிலவாகை இவற்றைச் சமஅளவு எடுத்துப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்க மூலம் குணமாகும்.

**3. மூலவாய்வுக்கு வெண்ணெய்**

பச்சரிசியைக் களைந்து நான்கு முறை கழுவிய தண்ணீர் 325 மி.லி, பாத்திரத்தில் விட்டுக் கொள்க. சீரகத்தை 150 கி. எடுத்து காய வைத்த சட்டியில் போட்டு கருக்கிக் கொள்க. கருகி வரும்போது எலுமிச்சங்காயளவு பசு வெண்ணெயைப் போட்டு உருகின பிறகு கள்ளினை விட்டுப் பாதியாய் வற்ற வைத்துக் கொள்க. அதை எடுத்துச் சாப்பிட்டால் மூலவாய்வு நீங்கும். இவ்வாறு மூன்று நாட்கள் கொடுக்க தீரும்.

**4. மூலத்துக்குப் பிட்டு**

பெருமரத்துப்பட்டையை நாலு பிடி எடுத்து இடித்து பிட்டவித்துக் கொள்க. அதனுடன் 100 மி.லி. நல்லெண்ணெய் விட்டுக் கலந்து மூன்று நாள் கொடுக்கவும். முருங்கைக்காய், முருங்கையிலை, கோழிக்கறியை உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

**5. *மூலத்திற்குப் பொன்னாங்காணி நெய்**

பொன்னாங்காணி, பொற்றலைக்கையாந்தகரைச் சாறு, பசும்பால், பசுநெய் இவற்றை வகைக்கு 1.3 லி, எலுமிச்சம் பழச்சாறு 750 மி.லி. எடுக்க. அதிமதுரம் 70 கி. எடுத்து, பசும்பால்

---

* *கொள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு*
*குறிப்பான காணிச்சாறு படி தா னொன்று*
*நல்லவே பொற்கையான் சாறுபடி யொன்று*
*நலமான பழச்சாறு அரைதான் விட்டு*
*விள்ளவே யாவின் னெய் படிதா னொன்று*
*தெள்ளவே மதுரமது பலந்தான் ரெண்டு*
*தெளிவான ஆவின்பால் விட்டிட் டாட்டே!*

விட்டாட்டிக் கொள்க. அதனை மேற்சொன்ன கலவையில் கலந்து காய்ச்சி மெழுகுபதமான பின்பு, சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, கற்கண்டு இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்துப்போட்டு நெய்பதமானவுடன் கிண்டி இறக்கிக் கொள்க. காலை, மாலை இருநேரமும் நோயின் அளவறிந்து கொள்ள மூலம் தீரும்.

### 6. மூலத்திற்குக் கருணைக்கிழங்கு மாத்திரை

கருணைக்கிழங்குப் பொடி 420 கி., சுக்கு, திப்பிலி, மிளகு, தான்றிக்காய், நெல்லி வற்றல் இவற்றின் பொடி வகைக்கு 35 கி. எடுக்க. நல்ல வெல்லம் 780 கி. எடுத்து பாகு கிளறி அதில் மேற்சொன்ன சூரணங்களைத் தூவி இலேகியம் போல் கிண்டி 4 கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைக்க. மூலநோய் உள்ளவர்கள் ஒரு மாத்திரையைப் பொடித்து 70 கி. தயிரில் கலந்து காலை, மாலை இருவேளையும் உட்கொள்ள நோய் குணமாகும். புளி, மிளகாய், வாய்வினை அதிகப்படுத்தும் காய்கறிகளைத் தவிர்க்க.

### 7. உள்மூலம், அதிசாரக்கிராணிக்கு மாத்திரை

சாதிலிங்கம், காரமெனும் சீனக்காரம், காந்தம், ஓமம், குரோசாணி, அபின், கசகசா, நெற்பொரி, அதிவிடையம், ஏலம், மாசிக்காய், தான்றிக்காய், கிராம்பு, கோரைக்கிழங்கு, மாங்கொட்டை, மாதுளங்கொடி இவையனைத்தையும் வகைக்குச் சமஅளவெடுத்து கோரக்கர் மூலிச் சாற்றில் அரைத்து நிழலுலர்த்தி உருண்டை

---

(தொடர்ச்சி)

*ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்து விட்டு*
*அடுப்பேற்றி மெழுகுபத மான வாரே*
*நீட்டியே சாதிக்காய் சாதி பத்திரி*
*நினைவாகக் கோரோசனையுங் கற்கண் டப்பா*
*நாட்டியே களஞ்சிநிறை பொடித்துப் போட்டு*
*நலமாகக் கிண்டிவைத்துக் கரண்டி விதம்*
*மூட்டியே இருநேரங் கொண்டா யானால்*
*முக்கியமாய்த் தீருமடா மூலந் தானே!*

செய்து கொள்க. அதைத் தயிரில் கலந்து கொடுக்க உள்மூலம், அதிசாரக் கிராணி தீரும்.

**8. உள்மூலத்துக்கு மருந்து**

தொட்டாற்சிணுங்கி சமூலத்தையும், பருத்தி விதையையும், பச்சரிசியையும் கிழிகட்டி சாப்பிடவும்.

**9. உள்மூலத்திற்கு மருந்து புகை**

மடல்துத்தம், கவுரி வகைக்கு 9 கி. எடுத்து தேவையான அளவு பசுநெய் விட்டு அரைத்து 200 மி.லி. நெய்யில் கலந்து சூரிய புடத்தில் நான்கு நாள் வைக்க. பின் ஐந்தாம் நாள் எடுத்து உள் மூலத்தில் தடவவும். புளியஞ்சிராயில் நெருப்புண்டாக்கி சாணத்தைக் கொட்டி அதன்மேல் பக்குவமாக உட்கார்ந்திருக்க உள்மூலம் காய்ந்து வேர் செத்துப்போம். இதற்குப் பத்தியம் அரைகீரை, புகையிலை, கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். அரை உப்பு கூட்டவும்.

**10. புறமூலத்துக்கு மருந்து**

புறசுருங்கி (நிண்டால் சுருங்கி) சமூலத்தையும் பருத்தி விதை சமூலத்தையும் பச்சரிசியையும் கிழிகட்டி எடுத்து ஆறு நேரம் கொடுக்க புறமூலம் குணமாகும்.

**11. உறுப்பு தள்ளினதுக்குக் கற்கம்**

வேம்பின் பஞ்சாங்கம் வகைக்கு 35 கி. எடுத்து துவைத்து 3.9 லி. தண்ணீர் விட்டு 1.3 லி-யாக வற்றும்படி காய்ச்சிக் கொள்க. அந்த கற்கத்தைச் சிறிதளவு எடுத்து குடிநீர் விட்டரைத்து அக்குடிநீரிலேயே கலக்கி எருமை மோர் விட்டுக் கொடுக்கவும். இவ்வாறு காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க உறுப்பு தள்ளினது குணமாகும்.

**12. ஆசனப்பவுத்திரத்துக்கு உட்களி**

செம்பிரண்டைக் கிழங்கு, புளியம்பிரண்டைக் கிழங்கு, நல்ல பிரண்டைக் கிழங்கு இவற்றைச் சமமாக எடுத்து முறைப்படி சூரணம் செய்து எடுத்துக் கொள்க. கருங்குருவையரிசி அல்லது

கம்பரிசியைக் கூடப்போட்டு இடித்துக் கொள்க. தேவையான அளவு தண்ணீர் வைத்து வெல்லம் அல்லது சர்க்கரையைக் கரைத்து அதில் மேற்கூறிய மாவைப் போட்டு கிளறி பதமானவுடன் நெய்விட்டு கிளறி இறக்கிக் கொள்க. இம்மருந்தை ஈரம் இருக்கும் போதே வெந்நீர் வார்த்து சாப்பிடவும். மூன்று நாட்கள் உட்கொள்ளவும். பத்தியமாக இருக்க ஆசன பவுத்திரம் குணமாகும்.

### 13. பவுத்திரத்துக்கு எண்ணெய்

சித்திரமூலம் வேர்த்தோல், நஞ்சுண்டான்பட்டை, சிறுகளா வேர்ப்பட்டை இவற்றை வகைக்கு 28 கி., சுக்கு, வசம்பு, மிளகு, உள்ளி இவற்றை வகைக்கு 4 கி. எடுத்தரைத்து 5.2 லி. நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி பொன்னிறமாகும்போது இறக்கி வைக்க, காலையில் எண்ணெயும் மாலையில் கற்கத்தையும் சாப்பிடவும். மூன்று நாட்கள் சாப்பிட்டு மூன்று நாட்கள் மறுபத்தியம். ஏழாம் நாள் தலை முழுகவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## 15. சுரம், சன்னி நோய்கள்

### 1. அனைத்துச் சுரத்திற்கும் மாத்திரை

வெள்ளைப்பாசாணம் 4 கி., சிறுகீரை வேர், துருசு வகைக்கு 8 கி. எடுத்து முறைப்படி சுத்தி செய்து மிதிபாகல் சாற்றில் மூன்று மணி நேரமரைத்து 32 மி.கி. அளவு மாத்திரை செய்து பத்திரப் படுத்திக் கொள்க. அதனைச் சீந்தில் தண்டு, பற்பாடகம், சுக்கு சேர்த்து காய்ச்சிய குடிநீரில் (600 மி.லி.யை 75 மி.லியாக காய்ச்சியது) ஒரு மாத்திரையை இழைத்துக் கொடுக்க அனைத்து சுரமும் தீரும்.

### 2. சுரத்திற்குக் குடிநீர்

வேப்பம்பட்டைத்தூள், மிளகரணைப்பட்டைத்தூள் வகைக்கு 140 கி. எடுக்க. சங்கம்பட்டைத்தூள், கண்டங்கத்திரி, சித்திரமூலம், நொச்சி, வில்வம் இவற்றின் வேர்களை வகைக்கு 35 கி. எடுக்க.

அனைத்து சரக்குகளையும் சுத்தி செய்து தேவையான அளவு தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாக வற்றக் காய்ச்சிக் கொள்க. அதனை காலை, மாலை 30 மி.லி. அளவு சுரத்தின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மைக்கேற்றவாறு கொடுக்க சுரம் தீரும்.

### 3. அனைத்துச் சுரத்திற்குக் கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை இவற்றை 130 மி.கி. எடுத்து தாய்ப்பாலிலரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. பித்த சுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலும் வாத சுரத்திற்குத் தேனிலும் திரிகடுகுக் குடிநீரிலும் மாந்தசுரம், பொருமல் இவற்றிற்கு 2-4 வேளைக் கொடுக்க குணமாகும்.

### 4. அனைத்துச் சுரத்திற்கும் இராமபாணம்

சாதிலிங்கம், மனோசிலை, கடுகுரோகணி, நேர்வாளம் இவற்றை வகைக்குச் சமனெடுத்து முறைப்படி தனித்தனியே சுத்தி செய்து கொள்க. தாய்ப்பால் விட்டரைத்து கடுகளவு மாத்திரை செய்துகொள்க. அதனை அளவறிந்து தாப சுரத்திற்கு வெந்நீர், இளநீரிலும் குளிர் சுரத்திற்கு நொச்சி சாற்றிலும் மற்ற சுரங்களுக்கு சுக்கு, இஞ்சிச் சாற்றிலும் உரைத்துக் கொடுக்க அனைத்துச் சுரங்களும் குணமாகும்.

### 5. *சுரங்களுக்கு அர்த்தநாரீசுரன் மாத்திரை

கோரோசனை, மனோசிலை, கவுரி, நாவி இவற்றை வகைக்கு 5 கி., சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்

---

* *கோரோசினை மனோசிலை கெவுரி னாவி*
*குறையாம லோரொன்று களஞ்சி னோடு*
*நேரான திரிகடுகு திரிபலைய தானும்*
*நிறையோ ரொன் றிருகளஞ்சாகச் சுத்தி செய்து*
*சீராக ஒர்பொழுது யிஞ்சிச் சாத்தி லரைத்து*
*..........................................*
*தோறாத வாதுக்குகச் சுரங்கள் தீர்க்க*
*தொகுத்தமுனி அர்த்தனா ரீசன் தானே!*

இவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. அனைத்தையும் முறைப்படி சுத்தி செய்து இஞ்சிச் சாற்றிலரைத்து மிளகளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலரத்திக் கொள்க. 50 கி. சர்க்கரையையும் 200 மி.லி. தாய்ப்பாலையும் சேர்த்து அதில் பாதி மாத்திரையை இழைத்துக் கொடுக்க காசம், கொதிப்பு, தாகம் இவை மூன்று நாட்களில் தீரும்.

**6. சுரங்களுக்கு இலிங்க செந்தூரம்**

இலிங்கத்தைத் தாய்ப்பாலில் மூன்று நாள் ஊறவைத்து பின் அதற்குத் தும்பைச் சாற்றினால் 12 மணி நேரம் சுருக்குக் கொடுத்து எடுத்துக்கொள்க. கலயத்தில் 320 கி. உப்பைப் போட்டு அதன் மத்தியில் மேற்சொன்ன இலிங்கக் கட்டியை வைத்துச் சில்லினால் மூடி சீலை மண் செய்து பத்து எருவில் புடம் போட செந்தூரமாகும். அதையெடுத்துப் பொடித்து, தேனில் நெய்யில் ஏதேனுமொரு குடிநீரில் அளவறிந்து கலந்து கொடுக்கவும்.

---

*(தொடர்ச்சி)*

*அத்தனா ரீசன் சொன்ன*
*ஆனதோர் குளிகை தன்னை*
*சித்த மாஞ் சீனி பத்து*
*பணவிடை நிறுத்துக் கொண்டு*
*சுத்தமா முலைப்பா லாழாக்கு*
*தோய்த்திடும் பிழிந்து கொண்டு*
*இத்துடன் குளிகை பாதி*
*யிடச்சுரம் பாக மாமே!*

*யேகுமிப் பாதி வுண்டை*
*இப்படி மஞ்ச னாளி*
*போகு மிப் பாகங் காசம்*
*திகழ் பெற உலகோர்க் கெல்லாந்*
*தாகமும் கொதிப்புந் தீந்து*
*சாந்தமா மூன்றா னாளில்*
*வாகுடன் கொடுத்துப் பார்த்தால்*
*வயித்திய வரிசை தானே!*

65 மி.கி. தேனில் கொடுக்க குளிர்சுரம், வாதப் பிணிகள், மேக நோய்கள் முதலியன தீரும்.

### 7. அத்திசுரத்திற்கும் பித்தத்திற்கும் மருந்து

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சாதிபத்திரி, தாளிச பத்திரி, திப்பிலிமூலம் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்துத் துணியில் சுற்றி துணிமேல் முசுமுசுக்கை சுற்றி மறுபடியும் மேலே துணி சுற்றி அதன்மேல் சாணி சுற்றி ஏழு எருவடுக்கிப் புடம் போடுக. சாணி கருகுகிற பக்குவத்தில் தீயைப் பிரித்து அந்த மருந்தை எடுத்து முசுமுசுக்கைச் சாறு பிழிந்து அரைத்துக் கொடுக்க அத்தி சுரம், உள்காந்தம், பித்தம் தீரும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

### 8. குளிர்இல்லாத வறட்டுக் காய்ச்சலுக்குக் குடிநீர்

சோம்பு, அதிமதுரம், திராட்சைப்பழம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து இலேசாக இடித்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி பின் சுண்டக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். அளவறிந்து கொடுக்க காய்ச்சல் குணமாகும்.

### 9. சீதசுரத்திற்குக் கற்கம்

பேய்ப்புடல், மிளகு வகைக்கு 35 கி. எடுத்து பொன் வறுவலாய் வறுத்து வெந்நீரில் அரைத்து அளவறிந்து நோயின் வன்மை, மென்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்க சீதசுரம் தீரும்.

### 10. நான்காம் முறைக் காய்ச்சலுக்குச் சாறு

கழற்சியிலை, வெள்ளைப்பூண்டு, மிளகு இம்மூன்றையும் இடித்துச் சாறு பிழிந்து எடுத்துக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க நான்காம் முறைக் காய்ச்சல் குணமாகும்.

### 11. நான்காம் முறைக் காய்ச்சலுக்குக் கற்கம்

எருக்கம் பூ, வெங்காயம் வகைக்கு 280 கி. எடுத்துக் கொள்க. மிளகு 140 கி., பெருங்காயம் 5 கி., எடுத்து 12 கி. பாகலிலைச்

சாறு விட்டரைத்து கடலையளவு எடுத்து வெற்றிலையில் வைத்து சாப்பிடவும்.

### 12. நான்காம் முறைக் காய்ச்சலுக்கு மருந்து

உப்பு, வெள்ளுள்ளி, மிளகு, எருக்குமொட்டு, கள்ளிக் கொழுந்து ஆகிய இவ்வைந்தையும் வெற்றிலைக்குள்ளே வைத்து நோயாளியைச் சுற்றி வந்து கொடுக்க நான்காமுறைக் காய்ச்சல் குணமாகும்.

### 13. பித்த சுரத்திற்குக் குடிநீர்

முசுமுசுக்கை, பற்பாடகம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், வாய்விளங்கம், சீரகம், சீந்தில்கொடி, நரிப்பயற்றம்வேர் இவற்றைச் சமஅளவெடுத்து முறைப்படி குடிநீரிட்டு அளவறிந்து கொடுக்க பித்த சுரம் தீரும்.

### 14. வாதபித்த சுரத்திற்குக் குடிநீர்

கருஞ்சீரகம், கொத்துமல்லி, திப்பிலி, திப்பிலிமூலம், சுக்கு, மிளகு, சந்தனக்கட்டை, விலாமிச்சம் வேர் இவற்றை வகைக்கு 4 கி. சேர்த்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொள்க. அதனை அளவறிந்து குடிக்க வாதபித்த சுரம் தீரும்.

### 15. உள்சுரத்திற்கு எண்ணெய்

சீரகம், சாதிக்காய், ஏலம், கிராம்பு, கெருட பச்சை இவற்றை வகைக்கு 8 கி. தகரை, சிறுகீரை, பழம்பாசி, கொடுப்பை, அகத்தி இவற்றின் சாறு வகைக்கு 675 மி.லி. பசும்பால், விளக்கெண்ணெய் வகைக்கு 1.3 லி. எடுக்க. சாறுகளையும் எண்ணெயையும் சேர்த்து மருந்து சரக்கின் பொடியைத் தூவிக் காய்ச்சிக் கொள்க. மெழுகு பதமானவுடன் வடித்திறக்கி 16 மி.லி. காலை, மாலை கொடுக்க உஷ்ணவாயு, கிரந்தி, உள்சுரம், கெந்ததாளி தீரும்.

### 16. உள்காய்ச்சலுக்கு மருந்து

சீரகம், சீனிசர்க்கரை வகைக்கு 175 கி. எடுக்க. சீரகத்தைப் பக்குவத்துடன் வறுத்து சீலையில் வடிகட்டி சர்க்கரை கலந்து

கொள்க. அதில் ஐந்து எலுமிச்சம் பழச்சாற்றினைப் பிழிந்து வைக்க. மூவிரலளவு சாப்பிட உள்காய்ச்சல், காசம், இரத்தகாசம் இவை தீரும்.

### 17. *சன்னிக்குச் சுரசம்

நொச்சி, முருங்கை, மாவிலிங்கம் இவற்றின் பட்டைகளை வெந்நீர் விட்டாட்டிச் சாறு பிழிந்தெடுத்துச் சுரசமாக்கிக் கொள்க. அதனை நோயின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மை அறிந்து கொடுக்க சன்னி நீங்கும்.

### 18. சன்னிக்குப் பூபதிக் குளிகை

நாபி, சுக்கு, சூதம், திப்பிலி, அரிதாரம், மிளகு, கெந்தகம், பெருங்காயம் ஆகியவற்றைச் சமஎடை எடுத்துத் தேவையான அளவு சித்திர மூலக் குடிநீரில் ஏழு நாள் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து தேன் அல்லது இஞ்சிச் சாற்றில் உரைத்து அளவறிந்து கொடுக்க சன்னி, வாய்வு, குன்மம், நாவறட்சி, சயகாசம், மேகம் இவை தீரும்.

### 19. சன்னிக்கு ஆனந்தபயிரவ மாத்திரை

நாவிக்கிழங்கு, சூதம், மனோசிலை, கெந்தகம், சாதிலிங்கம், வெங்காரம் இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு 6 மணி நேரமரைத்து 32 மி.கி. அளவுள்ள மாத்திரை செய்து சன்னிக்குத் தாய்ப்பாலிலும் குளிர் சுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலும் நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்க தீரும்.

---

* *மூட்டு நொச்சிப்பட்டை முருங்கைப்பட்டை*
*காட்டு மாவிலிங்கப்பட்டை வென்னியில்*
*ஆட்டுச் சாறு பிழிந்து ஆறு சுரசத்தில்*
*கூட்டு தென்னிக் குதித்தெழுங் கண்டிடே!*

### 20. சுரம், சன்னிக்கு வயிரவ மாத்திரை

சாதிலிங்கம், வெங்காரம், வசநாபி இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து கடுகளவு மாத்திரை செய்து கொள்க. அதனை அளவறிந்து தேனில் அல்லது இஞ்சியில் இழைத்துக் கொடுக்க சுரம், சன்னி தீரும்.

### 21. சுரம், சன்னிக்குத் தங்கரேக்கு மாத்திரை

தங்கரேக்கு, கஸ்தூரி, மயில் ரோசனம் வகைக்கு 1 கி., பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ வகைக்கு 5 கி., கோரோசனை 1½ கி., படிகாரச் சுண்ணம் ½ கி. எடுத்து இவையனைத்தையும் ஈசுரமூலி சாற்றினால் அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இரவு உணவில் புளியைத் தவிர்க்கவும். பசும்பால் விட்டு சாப்பிட்ட பிறகு ஒரு மாத்திரையைப் பொடித்து தேவையான அளவு சர்க்கரை கலந்து சாப்பிட சீதளம், சுரம், சன்னி இவை நீங்கும்.

### 22. சுரம், சன்னிக்கு கருவங்க பற்பம்

கருவங்கம் 20 கி. எடுத்துக் கொள்க. 140 கி. ஆவாரை வேர்ப்பட்டையை இடித்து வங்கத்திற்குக் கவசம் செய்து கோணியைப் போட்டு சுற்றி தேய்த்து ஒரு சீலை மண் செய்து கொள்க. ஒரு முழக்குழி வெட்டி குழியடியில் நூறு எரு போட்டு மேலேயும் நூறு எருப்போட்டு தீயெரித்துப் புடம் போட பற்பமாகும். இதைப் பக்குவத்துடன் எடுத்து பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். சுரம், சன்னி தீரும்.

### 23. சன்னி வாதத்துக்கு ஒற்றடம்

சாணம், இலுப்பைப் பிண்ணாக்கு, மஞ்சள், எருக்கம்பூ இவற்றைச் சமமாய் எடுத்து வறுத்து துணியில் முடிந்து இளஞ் சூட்டுடன் நோயுள்ள இடங்களில் ஒற்றடம் செய்ய சன்னி வாதம் தீரும்.

### 24. சன்னி வாதத்துக்குப் பொட்டணம்

கொப்பரைத் தேங்காய் 5, வெள்ளைப்பூண்டு 70 கி., வேப்பமுத்து 1 லி. எடுத்து ஒன்றாய் இடித்துப் பொட்டணம் கட்டி வைக்க. வேப்பெண்ணெயைத் தேவையான அளவெடுத்து கொதிக்க வைத்து மேற்கூறிய பொட்டணத்தை நனைத்து இளஞ் சூட்டுடன் உடல் முழுவதும் ஒற்றடம் செய்ய சன்னிவாதம் குணமாகும்.

### 25. சன்னிக்குப் புகை

அரிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார்கோலரிசி, சாம்பிராணி வகைக்கு 4 கி. எடுத்து குப்பைமேனிச் சாற்றால் அரைத்துத் துணியில் நனைத்துத் திரித்துக் கொள்க. வேப்பெண்ணெயில் துவைத்துத் தீயிற் கொளுத்தி நாசியிற் புகை பிடிக்க சன்னி தீரும்.

## 16. மேகம், தோல் நோய்கள்

### 1. *மேகத்துக்குக் கற்கம்

மாவிலிங்கப்பட்டையை 35 கி. எடுத்து மோரில் நன்கு அரைத்து காலை, மாலை வேளைக்கு 3 கி. - 6 கி. அளவு ஐந்து நாட்கள் கொடுக்க மேகம் குணமாகும். மோர் சாதம் உணவில் சேர்க்கவும்.

### 2. சர்வாங்க மேகசூலை, வாதக்குடைச்சல் இவற்றிற்கு உட்களி

கரிப்பாலைக் கொடி, வெள்ளைக்கத்தைக் கொடி, கொடிவேலி வேர்ப்பட்டை, கழற்சி வேர், நாயுருவி வேர், வாதமடக்கி வேர்,

---

* *தள்ளு மாவிலிங்கப் பட்டையும் தன்னிடை*
*விள்ளுமிர் பலமே யரை மோருடன்*
*கொள்ளுமைந்து தினம் மோரன்னம் கொள்ள*
*துள்ளுமேக மெடுபட்டு ஒடுமே!*

புங்கம்வேர் இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்து, கம்பரிசியில் போட்டு இடித்து மூன்று பங்குகளாக்கிக் கொள்க. அதனுடன் கருப்பட்டியைப் பாகு காய்ச்சி ஊற்றி, நெய்யையும் கலந்து மூன்று நாட்களுக்குக் காலையில் மட்டும் கொடுக்கவும். குருவை நெல்லரிசிக் கஞ்சியை உப்பில்லாமல் சாப்பிடவும். மறுபத்தியமாக இதனைக் கொள்ளவும்.

### 3. மேகம், சிரங்கு, தினவுக்கு நிலாவாரை நெய்

நிலாவாரை வேரை ஒரு விளங்காயளவு எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து பசு வெண்ணெய் போட்டுக் காய்ச்சி முறுகின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்க. நாளுக்கு 16 மி.லி. நெய்யும் கற்கமும் சாப்பிட வேண்டும். இவ்வாறு ஆறு நாட்களுக்கு உட்கொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

### 4. மேகத்துக்கு நெய்

வல்லாரை, வில்வத்தழை, அகத்திப்பட்டை, பழம்பாசி, குமிழந்தழை இவற்றின் சாறு வகைக்கு 675 மி.லி., தகரை, ஆவாரையிலை இவற்றின் சாறு வகைக்கு 325 மி.லி., இளநீர் 2.6 லி., பசும்பால் 675 மி.லி., பசுநெய் 1.3 லி. எடுக்க. மிளகு, சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, ஏலம், கோட்டம், கிராம்பு, சந்தனம், அதிமதுரம் இவற்றை வகைக்கு 8 கி. எடுத்து இளநீர் விட்டரைத்து, திரவங்களை ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்க. அதனை அளவறிந்து காலையில் நெய்யையும், மாலையில் காய்ச்சிப் பின் எடுத்து வைத்த கற்கத்தையும் இருபது நாட்கள் சாப்பிட உள்ளுருக்கி, சூடு, பிரமேகம் இவை தீரும். புளி, புகையிலையை நீக்கவும்.

### 5. மேகத்துக்கு எண்ணெய்-1

மிளகரணை, வெள்ளைச்சாரணைவேர், முந்திரிவேர், முருங்கை, வேம்பு, குமரி, வன்னி, சீந்தில், சலந்திரட்டி, கரிசாலை, பொன்னாங்கண்ணி, அமுக்கரா, சங்கங்குப்பி, நீர்ப்பூலா, விழுதி, நிலப்பனை, சிறுவிளா, வெள்ளறுகு, வல்லாரை, ஆவாரை, முடக்கொத்தான், அகத்தி ஆகியவற்றின் வேர்களை வகைக்கு

140 கி., அழிஞ்சில்பட்டை 140 கி., ஆவாரைச் சமூலம் 350 கி., சீரகம், வெந்தயம் வகைக்கு 280 கி. எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து 14 லி. தண்ணீர் விட்டுக் குடிநீராக்கிக் கொள்க. அதனுடன் சிற்றேரண்ட எண்ணெய், ஈருள்ளிச்சாறு, காராம் பசுவின் பால் வகைக்கு 2 லி, சீலையில் வடிகட்டின கல்நார், இராயபுரிச்சர்க்கரை வகைக்கு 280 கி. முன் சொன்ன குடிநீரில் போட்டு, பால் வற்றும் வரை காய்ச்சி மெழுகு பதமாகும் வரை கிண்டி, அதன் மேல் சாடி மூடி தானியத்திற்குள் (தானியபுடம்) வைக்கவும். குறிப்பிட்ட காலமான பிறகு எடுத்து தினமும் 16 மி.லி. கொடுக்க மேகம் 21, அரையாப்பு, குட்டம், எலும்பு சுரம், எலும்புவெட்டை, சிரங்கு, பித்தவாய்வு, உட்டிணவாயு, உடல், கை, கால் எரிச்சல், வாய்வு, அண்டவாதம் ஆகிய நோய்கள் தீரும். குழந்தைப் பேறுண்டாகும். பத்தியமில்லை. பெரியோர்க்கும் சிறியோர்க்கும் அளவறிந்து கொடுக்கவும்.

### மேகத்திற்கு எண்ணெய்-2

பொன்னாங்காணி, கையாந்தகரை, சீதா செங்கழுநீர், தேற்றான் இலை, சிறுகீரை, சீந்தில் கொடி, எலுமிச்சம் பழம் இவற்றின் சாறுகள், பால், இளநீர் இவற்றை வகைக்கு 975 மி.லி, நல்லெண்ணெய் 1.3 லி. எடுத்துக் கொள்க. கோரைக்கிழங்கு, அதிமதுரம், சந்தனக்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், அருகன்வேர் இவற்றை வகைக்கு 9 கி., வில்வவேர் 35 கி. எடுத்து ஒன்றிரண்டாக இடித்து மேற்சொன்ன கலவையில் போட்டு 2.6 லி. தண்ணீர் விட்டு 675 மி.லியாகக் குறுக்கிக் காய்ச்சவும். கோட்டம், மிளகு, தேவதாரம், மரமஞ்சள், சாம்பிராணி, செஞ்சந்தனக்கட்டை, சடாமாஞ்சில் இவற்றை வகைக்கு 12 கி. எடுத்து மேற்கூறிய குடிநீரில் அரைத்து ஒன்றாகக் கலக்கி காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்க. மேகத்தில் வரும் காந்தல், கணச்சூடு, மேகநீர் இவை தீரும்.

### மேகத்துக்கு எண்ணெய்-3

கடுக்காய், இஞ்சி, சுக்கு, சீரகம், வேப்பம்பட்டை, பரங்கிச் சக்கை, மிளகு, வெந்தயம், நெல்லிமுள்ளி, கோட்டம், அதிமதுரம்

இவற்றை வகைக்கு 35 கி. எடுக்க. சிற்றாமணக்கெண்ணெய், காராம் பசுவின் பால், வாழைப்பழமது, கற்றாழைச் சாறு, செவ்வல்லிச்சாறு, செவ்விளநீர் ஆகியவற்றை வகைக்கு 2 லி. எடுத்துக் கொள்க. மேற்கூறப்பட்ட மருந்து சரக்குகளை அரைத்து கலவையில் கலந்து காய்ச்சி மெழுகு பதமான பின்பு இறுத்து 16 மி.லி. அளவு காலையில் மட்டும் 40 நாட்கள் கொள்ள மேகம் 21, பெரும்பாடு, சூலை, பட்சிவாதம் தீரும். புளி, புகை, கடுகு, நல்லெண்ணெய், பூசணிக்காய், அகத்திக்கீரை நீக்கி இச்சாபத்தியம் காக்க.

### 6. மேகம், கரப்பான், கண்நோய்களுக்கு எண்ணெய்

கற்றாழைச்சாறு, இளநீர், நல்லெண்ணெய், நெய்சிட்டிக் கீரைச்சாறு, ஆவாரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, பசும்பால் ஆகியவற்றை வகைக்கு 2 லி. எடுக்க. சாம்பிராணி 140 கி. பச்சைக் கிழங்கு, மிளகு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து மைபோலரைத்துக் கொண்டு மேற்குறிப்பிட்ட கலவையில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்து வேறு சட்டியில் இறுத்து பத்திரப்படுத்திக் கொள்க. எட்டு நாட்கள் இரண்டு முறை தைலம் தேய்த்து தலை முழுகவும். இவ்வாறு பன்னிரெண்டு முறை முழுகவும். இச்சா பத்தியமாக இருக்கவும். பித்தம், தலைக்குத்தல், கண் எரிச்சல், இரணம், சொறி, கரப்பான், கண்நோய்கள், செவிநோய்கள் தீரும். உடல் பொன்னிறமாகும். பலனுண்டாகும்.

### 7. மேகத்துக்குச் சுடர்த்தைலம்

கெந்தகம் 175 கி., நவச்சாரம், சவ்வீரம் வகைக்கு 4 கி., வெடியுப்பு 4 கி., அரிதாரம் 12 கி. எடுத்து பசுநெய்விட்டு 1 மணி நேரமரைத்து வெள்ளைச் சீலையில் நனைத்து வைக்க. குச்சியில் துணியைச் சுற்றி தீயில் வெதுப்ப தைலம் ஒரு பாத்திரத்தில் விழும். அதனுடன் கல்கண்டு அல்லது தேனைச் சேர்த்து 488 மி.கி. கொடுக்கவும். குட்டம், சோகை, பாண்டு, சூலை, கிரந்தி, மேகம் தீரும்.

**8. *மேகத்துக்குக் குழம்பு**

சங்கு, சங்கங்குப்பி, சித்திரமூலம், அசுவகெந்தி, நிலப்பனைவேர், செங்கத்தாரி, குமிழ், நெருஞ்சி, பூவரசுப்பட்டை வகைக்கு 35 கி. ஓமம், கோட்டம், நாகேசுரம், சுக்கு, மிளகு, திப்பிலிப்பொடி, வாய்விளங்கம், இலவங்கப்பத்திரி, அரத்தை, முருங்கையிலை, சடாமாஞ்சில், பரங்கிப்பட்டை இவற்றைச் சமனாய்ச் சேர்த்துக் கொள்க. அனைத்தையும் முறைப்படி சூரணம் செய்து கொள்க. சர்க்கரை, நெய், தேன் இவற்றைச் சமமாகச் சேர்த்து மேற்கூறிய சூரணத்தைப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சி எடுத்துக் கொள்க. அதனை அளவறிந்து நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ள அனைத்து வகை மேகம், குட்டம், சூலை, குன்மம், மலக்கட்டு, பித்தவாய்வு, சோம்பல், புண், இரணம் ஆகிய நோய்கள் தீரும்.

**9. மஞ்சள் வெள்ளைக்கு (மேகம்) மருந்து**

பூனைப்பிடுக்கன் மரத்தின் வேரைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி தண்ணீரில் ஊற வைத்துப் பிசைந்தெடுத்துக் கொள்க.

---

* *சங்கொடு சங்கங் குப்பி*
*தயவுடன் சித்திர மூலம்*
*பொங்குமா அசுவ கெந்தி*
*புகழ்நிலப் பனையின் வேரும்*
*யிங்கிவை செங்கத் தாரி*
*யிசைந்திரு குமிழ்நெ ருஞ்சி*
*மங்குபூ வரசின் பட்டை*
*வகைக்கொரு பழமு ரைத்தோம்!*

*உரைத்திடு ஓமங் கோஷ்டம்*
*ஊதுனாகே சுரமுங் கூட்டி*
*பருத்த சுக்குடன் மிளகு*
*பழகிய திப்பிலிப் பொடியும்*
*திருத்தமாம் வாய் விளங்கம்*
*சேரவே லவங்கப் பத்திரி*
*அரத்தையும் முருங்கைப் பத்திரி*
*அறிஞ்சடா மாஞ்சி கூட்டே!*

சக்கையை நீக்கிவிட்டு எஞ்சியதில் சீரகம், சர்க்கரை கலந்து வைக்க. ஒரு வருடமுள்ள வெள்ளைக்கு மூன்று நாட்களும், ஐந்து வருடமுள்ள வெள்ளைக்கு ஏழு நாட்களும், உட்கொள்ள வேண்டும். கடும் பத்தியம் காக்க வேண்டும். கிச்சடி அரிசி, பருப்பு, நெய், கறிமசாலை, வெங்காயம் முதலியவைச் சேர்த்துச் செய்யும் சோறு, அரிசிக் கஞ்சியுடன் நெய் சேர்த்துச் சாப்பிடவும்.

### 10. மேகத்துக்கு மருந்து (உரைமோர்)

பச்சை வெட்டுகுங்கிலியம் 175 கி., பசும்பால் 2.6 லி., பால் சாம்பிராணி 35கி, பசுநெய் 1.3 லி., கல்நார், கற்பூர சிலாசத்து வகைக்கு 26 கி., எலுமிச்சம்பழம் 32, எடுக்க. உபரசங்களை முறைப்படி சுத்தி செய்து பால், நெய், எலுமிச்சம் பழச்சாறு இவற்றைக் கலந்து வைக்க தயிராகும். அதனை அளவறிந்து கொடுக்க மேகம் குணமாகும்.

### 11. மேகவெட்டை - இருபத்தொன்றுக்கும் கைகால் ஊறலுக்கும் எண்ணெய்

பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, துரட்டித்தழை, சித்திரமூலவேர் இவை ஆறினையும் வகைக்கு 70 கி. எடுத்து ஒன்றிரண்டாய் இடித்து 10.7 லி. தண்ணீர் விட்டு முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். இதனுடன் சங்கங்குப்பிச்சாறு, தழுதாழைச்சாறு, கழுதையின் சிறுநீர், நல்லெண்ணெய் இவற்றையும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்க. எண்ணெயை இறுத்து மூன்று நாட்கள் காலை, மாலை கொடுக்க மேகவெட்டை தீரும். சாப்பிடும்போது கற்கத்தை கைகால்களில் தேய்க்கவும். கடும் பத்தியம் மூன்று நாட்களுக்கு இருக்கவும். பிறகு ஏழாம்நாள் தனக்குப் பொருந்திய எண்ணெய் தேய்த்து முழுகவும்.

### 12. மேகத்துக்குத் தாமிர பற்பம்

தாமிரத்தைச் சுத்தி செய்து அரத்தால் ராவின பொடியைப் புதியதும் சிறியதுமான வாணலியில் போட்டு ஒரு விறகினால் எரித்து 1.3 லி. புளியாரைச் சாற்றால் சுருக்குக் கொடுக்க, பற்பமாகும்.

அதனை 100 மி.கி. அளவெடுத்து பசுநெய்யில் கலந்து இரண்டு நாளைக்கொரு முறை கொடுக்க, இருபது வகை மேகம், ஒன்பது வகைக் கிரந்தி, பதினெட்டு வகைச் சூலை முதலிய நோய்கள் குணமாகும். வெள்ளை மேகத்துக்கு இம்மருந்தைப் பற்றிடத் தீரும். கருமேகத்துக்கு ஆட்டுப்பாலில் கலந்து வேறு இடத்தில் படாமல் தடவி வரத்தீரும். வெந்நீரில் குளிக்கவும். தயிர், மோர் தவிர்க்கவும்.

### 13. அனைத்து மேகத்துக்கும் கல்யாணபூசணி இளகம்

பசும்பால், இளநீர், மாதுளம் பழச்சாறு இவற்றை வகைக்கு 5 லி. எடுத்து சட்டியில் ஊற்றிக் கொள்க. தோல் சீவின சாம்பற் பூசணிக்காய் ஒன்றைத் திருகி மேற்கூறிய கலவையில் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி இறக்கிக் கொள்க. சந்தனம், கொத்துமல்லி, சீரகம் இவற்றை வகைக்கு 70 கி., அதிமதுரம், பூமி சர்க்கரைக் கிழங்கு இவற்றை வகைக்கு 105 கி. அளவெடுத்து பொடித்துக் கொள்க. 700 கி. சர்க்கரையைப் பாகு செய்து பசுநெய் 1 லி. அதனுடன் கலந்து கொள்க. மேற்கூறிய கலவை, சூரணங் களையும் பொடித்து வைத்த 16 கி. ஏலத்தையும் கலவையில் கலந்து லேகியமாகச் செய்து கொள்க. காலை, மாலை 2 கி. அளவு உட்கொள்ள அனைத்து மேகமும் குணமாகும்.

### 14. புண்ணுக்குக் கட்டு

பொடித்தழை எனும் விடத்தலையை இடித்துச் சாறு பிழிந்து போட்டு ஆண் குழந்தையாயின் பெண் குழந்தையின் சிறுநீர், பெண் குழந்தையாயின் ஆண் குழந்தையின் சிறுநீர் விட்டு வறுத்துக் கட்டவும். இவ்வாறு ஆறுமுறை கட்டவும். புண்ணாறும்.

### 15. சிரங்குக்குப் பூச்சு

கவுரி துருசு, கருஞ்சீரகம் இவற்றைச் சமனெடுத்து முறைப்படி சுத்தி செய்து பொடித்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி இறக்கி சிரங்கின் மேல் தேய்த்து மாலையில் எருமைச்சாணி தேய்த்துக் குளிக்கச் செய்யவும். இப்படி மூன்று நாட்கள் செய்யவும்.

### 16. புண்ணுக்கு நசியம்

உதியம்பட்டைச்சாறு, கருவேலம்பட்டைச்சாறு, நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் இவற்றைச் சம அளவெடுக்க. வசம்பு, மெழுகு எனும் அரக்கு, அபின், குங்கிலியம், கருஞ்சீரகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், காசுக்கட்டி, துத்தம், துருசு, கொத்து மல்லி, கார்கோலரிசி, வெட்பாலரிசி, ஏலம், வாய்விடங்கம், வாலுளுவையரிசி, அதிமதுரம், வேம்பாடம்பட்டை ஆகியவற்றை வகைக்கு *1* கி. எடுக்க. நஞ்சுண்டாம் பட்டைச்சாறு, பெருமரத்துப் பட்டைச்சாறு சமஅளவு சேர்த்துக் காய்ச்சி பத்திரப்படுத்திக் கொள்க. அதனை ஓரிரு துளிகள் மூக்கில் விட்டு புண்ணின் மேலும் பூசவும். அனைத்துப் புண்களும் குணமாகும்.

### 17. இரணத்திற்குக் களிம்பு

வெள்ளைக் குங்கிலியம், காசுக்கட்டி, இரசகற்பூரம், மாசிக்காய், மிருதாரசிங்கி இவற்றைச் சமஅளவு எடுத்துப் பசு வெண்ணெய் தேங்காயளவு சேர்த்து அரைத்து இரவும் பகலும் தண்ணீரில் போட்டு வைக்க. அதை எடுத்து இரணத்திற்குப் போடவும்.

### 18. கொறுக்குப் புண்ணுக்குச் சீலை

கெந்தகம், பூரம், மிருதாரசிங்கி, துத்தம், குங்கிலியம், மயில்துத்தம், பால்துத்தம் ஆகிய மருந்து சரக்குகளையும் தேங்காயெண்ணெய், தண்ணீர் ஆகிய திரவங்களையும் சேர்த்துக் காய்ச்சி பத்திரப்படுத்துக. துணித்துண்டை மேற்கூறிய குழம்பில் தோய்த்து கொறுக்குப் புண்களுக்கு மேல்போட புண் ஆறும்.

### 19. இரணத்திற்கு மருந்து சீலை-1

வெள்ளைமெழுகு, வெள்ளைக் குங்கிலியம் இவற்றை வகைக்கு *40* கி., இரசகற்பூரம் *4* கி. இவற்றைத் தேங்காயெண்ணெயில் விட்டு உருக்கிக் கொள்க. சட்டியில் தண்ணீர் ஊற்றி உருக்கின மருந்தைச் சீலையில் ஊற்றிப் பிழிந்து போட்டு நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. தேவைப்படும் நேரத்தில் இரணத்திற்குச் சிறிது கிழித்துப் போட குணமாகும்.

**இரணத்திற்கு மருந்து சீலை-2**

மெழுகு, வெள்ளைக் குங்கிலியம் இவற்றைச் சமமாக எடுத்து உருக்கிக் கொள்க. தேங்காயை அதனுடன் சேர்த்து உருக்கி அதன்மேல் தண்ணீர் வார்த்து வைத்துக் கொள்க. பின் அதனைத் துணியில் தடவி புண்மேல் போட ஆறும்.

**20. நரம்புச்சிலந்திக்குச் சாறு**

பாடித்தழை எனும் விடத்தழையையும் ஈர வெங்காயத்தையும் கம்மஞ் சோற்றின் நீராகாரத் தண்ணீர்விட்டு இடித்துச் சாறு பிழிந்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கவும். அடுத்த மூன்று நாட்களுக்கும் மறுபத்தியம், கைப்பு, புளிப்புப் பண்டங் களைத் தவிர்க்க.

**21. தோல் நோய்களுக்கு வல்லாதி இளகம்**

திப்பிலி மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கொத்துமல்லி, வாய்விளங்கம், ஓமம், செவ்வியம், கருஞ்சீரகம் இவற்றை வகைக்கு 18 கி. எடுக்க. பரங்கிப்பட்டை 175 கி., சேங்கொட்டை 20 சேர்த்து கற்றாழை மடலுக்குள் வைத்து வேக வைத்துப் பின் புளியிலைச் சாற்றில் பிழிந்தெடுத்துக் கொள்க. பிழிந்தெடுத்த சரக்குகளைக் காய வைத்திடித்துக் கொள்க. அதனுடன் எள் 675 மி.லி., பனைவெல்லம் 420 கி., 325 மி.லி. நல்லெண்ணெய் சேர்த்திடித்து கழற்சிக்காயளவு உருண்டை செய்து கொள்க. அதனை நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ள அந்திரவாய்வு, கிரந்தி, கையில், காலில் கறுப்பு, மெய்யில் தடிப்பு, புரைப் புண்கள் ஆகிய நோய்கள் தீரும்.

**22. தோல் நோய்களுக்குக் கால பயிரவ எண்ணெய்**

சுத்தி செய்த சேங்கொட்டை 30 கி. சுத்தி செய்த கெந்தகம் 40 கி., இவற்றைச் சேர்த்து 400 மி.லி. சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு எரிக்க வேண்டும். சேங்கொட்டை வெடிக்கும் சமயத்தில் தைலத்தை வடித்து இரசம், பசுநெய் வகைக்கு 8 கி. சேர்த்தரைத்து மைபோலாகும் போது வழித்து வைத்துக்கொள்க. அதனை ஆறு

பங்குகளாக்கிக் கொள்க. ஒரு பங்கினைக் கருப்பட்டிக்குள் பொதிந்து நாவில் படாமல் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று நாட்கள் இருவேளையும் கொள்ளவும். நோயின் தீவிரத்திற்குத் தக்கவாறு நாட்களைக் கூட்டிக் கொள்ளவும். இதனை உட்கொள்ள கண்டமாலை 18, மேகஇரணம், மேகவூறல், கைகால் முடக்கு, சூலை 18, தடிப்பு, சொறி, வெள்ளை விழுதல், பதினெட்டு வகை குட்டம், பெருவியாதி, கிரந்தி 5, அரையாப்பு, படர்தாமரை, துடைவாழை, இலிங்கப்புற்று, யோனிப்புற்று ஆகிய நோய்கள் தீரும். உப்பு, புளி, வாய்வு பொருட்கள் தவிர்க்கவும், பசும்பால் சேர்க்க. சிற்றாமணக்கெண்ணெய் தேய்த்து குளிக்கவும்.

## 17. பிறநோய்கள்

### 1. வாதங்களுக்கு நவச்சாரபற்பம்

சோற்றுப்பு, படிகாரம், சுண்ணாம்பு இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துக் கலந்தரைத்துக் குகை செய்து கொள்க. அதனுள் 35 கி. நவச்சாரக் கட்டியை வைத்து குகையினை மூடி சீலை செய்து உலர்ந்த பின்பு பத்து எருவில்புடம் போட பற்பமாகும். 325 மி.கி. காலை, மாலை நன்னாரி வேர்க் குடிநீரில் கொடுக்க முடக்குவாதம், கீழ்வாதம், முகச்சன்னி, சந்துவாதம், இடுப்பு வாதம், பெண்களுக்குக் காணும் பெரும்பாடு தீரும்.

### 2. செய்யான்கடி, எலிக்கடி, காட்டுப்பூனைக் கடிக்கு மருந்து

எருமை மோரை இரும்புப் படியில் ஊற்றி மருக்காரை எனும் மருக்களங்கு காயைத் துவைத்து கிழி கட்டி மோரில் பிசைந்து கொள்க. அதை விடங்களுக்குக் கொடுக்க தீரும். கம்பஞ் சோறு கொடுக்கவும். மாலையில் தலை முழுகச் செய்து கருங்கோழிக்கறிச் சோறு கொடுக்கவும்.

### 3. விசக்கடிக்கு அரிதார பற்பம்

முறைப்படி சுத்தி செய்த அரிதாரத்தைக் கோவை இலைச் சாற்றால் இருபத்து நான்கு மணி நேரமரைத்து, மாத்திரை செய்து

காய வைத்துக் கொள்க. அதற்குச் சீலை வலுவாய்ச் செய்து ஆறு எருவில் புடம் போடவேண்டும். பிறகு மறுபடியும் கோவை யிலைச் சாற்றில் அரைத்து நான்கு எருவில் புடம் போட பற்பமாகும். 488 மி.லி. எடுத்துத் தக்க அனுபானத்திலிட ஈளை, காசம், சயம், இளைப்பு ஆகிய நோய்கள் தீரும். பதினெட்டு வகை எலிக்கடிகளும் நீங்கும்.

**4. விஷத்துக்கு நசியம்**

துத்தத்தைப் பொடித்து சிறுநீரில் போட்டு, கலந்து அச்சாற்றை மூக்கில் நசியமிட விஷம் நீங்கும்.

**5. பூப்படையாதவர்களுக்குச் சாறு**

அம்மான்பச்சரிசி வேரை 35 கி. எடுத்து இடித்து வெந்நீர் ஊற்றிப் பிசைந்து வடிகட்டிக்கொள்க. அதனை மூன்று நாட்களுக்குக் கொடுக்க பூப்படைவாள்.

**6. பித்தத்திற்கு இஞ்சி சர்பத்**

இஞ்சி சாற்றினையெடுத்து, இரண்டு மணி நேரம் வைத்து, தெளிவான இரசத்தை இறுத்து அதற்கு இரண்டு மடங்கு சர்க்கரை சேர்த்துக் கலந்து காய்ச்சி தேன் போன்ற பக்குவத்தில் வடித்து பத்திரப்படுத்திக் கொள்க. 10 கி. அல்லது 20 கி. அளவு கொடுக்க பித்தம் குறையும். இரத்தம் சுத்தியடையும்; பசியெடுக்கும். சமஅளவு தண்ணீர் சேர்த்து சாப்பிடவும்.

**7. பித்தத்திற்கு நாரத்தம் பழ சர்பத்**

நாரத்தம் பழம் தேவையான அளவெடுத்துச் சாறு பிழிந்து அதற்கு இரண்டு மடங்கு சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். 8-16 கி. அளவு எடுத்து சிறிதளவு தண்ணீர் கலந்து கொடுக்க பித்தம், தாகம், சுரம், வாந்தி, அரோசகம் எனும் உணவில் வெறுப்பு இவை நீங்கும்.

**8. பித்தத்திற்குக் கீழாநெல்லி எண்ணெய்**

கீழாநெல்லிச் சமூலம் 875 கி., எடுத்து நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதனுடன் $3\frac{1}{2}$ கி. எள்

எண்ணெய், சர்க்கரை 175 கி. சேர்த்துக் காய்ச்சி வடித்து தலை முழுகவும். பித்தம், தலைச்சுற்று, வாய்நீரூறல், கைகால் எரிவு தீரும்.

### 9. பித்த சூட்டுக்கு எண்ணெய்

ஆனை நெருஞ்சில், கீழாநெல்லி, ஓரிலைத்தாமரை, கொத்துமல்லி, சீரகம், சிறுமுள்ளி இவற்றைச் சமமாய் எடுத்து முறைப்படி குடிநீராகச் செய்து கொள்க. இக்குடிநீருக்குச் சமமாக நல்லெண்ணெயைச் சேர்த்து, மெழுகு பதமாகக் காய்ச்சி தேவையான அளவெடுத்து தலையில் தேய்த்து முழுக வெப்பம் தீரும்; பித்த சூடு குணமாகும். நோயின் தன்மை, அறிந்து முழுகவும். மேற்கூறப்பட்ட குடிநீரை மட்டும் அளவறிந்து மூன்று வேளை உட்கொள்ள நலம்.

### 10. சூட்டுக்கு எண்ணெய்

ஈரவெங்காயம், வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தியிலை, சிறுகீரை, முசுமுசுக்கை, தகரை இவற்றின் சாறுகள், இளநீர், பசும்பால், நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு 5.2. லி., எடுக்க. சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சோம்பு, ஏலம், அதிமதுரம், வால்மிளகு இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து மேற்சொன்ன சாற்றிலரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவும். அளவறிந்து கொடுக்க உடல் சூடு, பிரமேகம், நீர்க்கடுப்பு, உந்திப்புண் தீரும்.

### 11. வயிற்றில் இறந்த பிள்ளை வெளிவர கற்கம்.

#### கற்கம் 1

அரசம்பட்டை, ஏலம் வகைக்கு 4 கி. எடுத்து காடியிலரைத்துக் கொடுக்க வெளிவரும்.

#### கற்கம் 2

இலவங்கம் ஒரு கிராம் எடுத்து செவ்விளநீரில் அரைத்துக் கொடுக்க வெளிவரும்.

**கற்கம் 3**

பன்றிப்பல்லை அரைத்து வெண்ணெயில் கொடுக்க வெளிவரும்.

**கற்கம் 4**

சங்கங்குப்பிச்சாறு சமூலத்தைக் காடியிலரைத்துக் கொடுக்க வெளிவரும்.

**பூச்சு**

திப்பிலியைக் காடியில் அரைத்து மேல் வயிற்றிலும் கீழ்வயிற்றிலும் தடவ வயிற்றில் இறந்த குழந்தை வெளி விழும்.

### 12. வயிற்றில் இறந்த குழந்தை வெளி வர எண்ணெய்

குதிரை குட்டி போட்டு அந்தக் குட்டியுடைய லத்தியை குதிரை முகர்ந்து பார்க்கு முன்னரேயே அந்த லத்தியை எடுத்து விளக்கெண்ணெயில் பிழிந்து கொள்க. அந்த எண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து உடம்புக்கும் துவாலையிட வயிற்றில் இறந்த பிள்ளை வெளிவரும்.

### 13. குளிக்கும் நீர்

ஓமம், மஞ்சள், மிளகு, வேப்பிலை இவற்றைச் சமஅளவு எடுத்துப் பசும்பாலில் அரைத்து, தலையில் தேய்த்து குளிக்கவும். பிறகு சாம்பிராணி தூபம் போடவும். நல்ல ஆரோக்கியமாய் இருக்கும்.

### 14. குளிர்ச்சிக்கான எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், பழச்சாறு, இளநீர், பசும்பால் இவற்றை வகைக்கு 2 லி. எடுத்து ஒன்றாய்க் கலந்து மெழுகாய் காய்ச்சிக் கொள்க. பரங்கிச்சக்கை, கொத்துமல்லி, சீரகம், வால்மிளகு, இலவங்கப்பட்டை, சாதிபத்திரி வகைக்கு 105 கி. எடுத்து இளவறுப்பாக வறுத்துப் பொடித்து எண்ணெய் இறக்கும் சமயத்தில் கலந்து கொள்க. இறக்கிய பின், கோரோசனை,

குங்குமம், வகைக்கு 10 கி., கற்கண்டு 350 கி. எடுத்துப் பொடித்து, செவ்வாழைப் பழம் 8-ஐப் பிசைந்து எண்ணெயில் போடவும். 15 கி. அளவு 5 அல்லது 7 நாட்களுக்குச் சாப்பிட வெப்பம் தணிந்து உடல் குளிர்ச்சியாகும்.

### 15. குளிர்ச்சி எண்ணெய்

சிற்றேரண்ட எண்ணெய், வெள்ளறுகுச்சாறு, குமரிச்சாறு, பசும்பால், வல்லாரைச்சாறு, தாளிச்சாறு, அத்திப்பால், பூவரசம் பட்டைச்சாறு, முள்ளங்கிச்சாறு இவற்றை வகைக்கு 2 லி. எடுக்க. கோட்டம், அதிமதுரம், திரிகடுகு, சடாமாஞ்சில், சீரகம், வெந்தயம், திப்பிலி, பரங்கிச்சக்கை, கடுகுரோகணி, வால்மிளகு, கடுக்காய்ப் பிஞ்சு, சிறுதேக்கு, வாளம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளநீர் வார்த்து மைபோலரைத்துக் கொள்க. மேற்குறிப்பிட்ட அனைத்துச் சாறுகளையும் எண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மெழுகு பதமான பிறகு வடித்து வேறு சட்டியில் பத்திரப் படுத்திக் கொள்க. காலையில் மட்டும் 4 மி.லி. வீதம் உள்ளுக்குக் கொடுக்க உடல் குளர்ச்சியாகும். கடும் பத்தியம் காக்க. உப்பு, புளி, கார்ப்பு பதார்த்தங்கள், வெப்பத்தை அதிகமாக்கும். கடுகு, பச்சைமிளகாய், கத்தரிக்காய் போன்றவற்றை நீக்கி வறுத்த துவரம் பருப்பைச் சேர்க்கலாம்.

### 16. *கணைக்கு எண்ணெய்

நெருஞ்சி, சின்னி, சிறுகீரை, பொன்னாங்காணி, கோவை, தகரை, மணத்தக்காளி, நரிப்பயறு, சிறுபுள்ளடி, ஈருள்ளி இவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி. எடுக்க. சுக்கு, வசம்பு,

---

* *ஆமென்றேன் கணைதானும் ஆருண் டாகும்*
*அப்பனே தீர்ப்பதற்கு வகையைக் கேளு*
*தாமென்றேன் நெருஞ்சி சின்னி..................*
*தப்பாதே சிறுகீரை பொன்னாங் காணி*
*கோமென்றேன் கோவையிற் கொடிய தாகும்*
*குறையிலா தகரையிலை மணத்தக் காளி*
*நாமென்றேன் நரிப்பயற்றின் கொடிய தாகும்*
*நலமான சிறுபுள்ளடி யிலையைத் தாமே!*

உள்ளி, சாதிக்காய் இவற்றை வகைக்கு 5 கி., கடுக்காய் 15 கி., பத்திரி 35 கி. எடுத்துப் பொடித்துச் சாற்றில் கலந்து கொள்க. ஆமணக்கெண்ணெய் தேவையான அளவு சேர்த்து காய்ச்சி மெழுகு பதமானவுடன் இறக்கி பாத்திரத்தில் வடித்துக் கொள்க. அதனை 16 மி.லி. கொடுக்க கணை, மாந்தம், உஷ்ணம், மேகம், கிருமி தீரும்.

---

(தொடர்ச்சி)

*இலையின் சாறுவகை நாழி யாகும்*
*ஈருள்ளிச் சாறதுவும் சமனாய்ச் சேர்த்து*
*விலைகொள்ளும் கடைச்சரக்கு விபரங் கேளு*
*வேர்க்கொம்பு வசம்புள்ளி சாதிக் காயும்*
*நிலைதவறாகக் கழஞ்சிவகை மூன்றதாக*
*நெற்கடுக்காய் அயங்கழஞ்சு பத்திரியும்*
*பலம் கலய தூக்கியிடு தூள தாக்கி*
*பாகமாய்ச் சாற்றிலே சேரு சேரே*

*சேர்த்ததிலே ஆமணக்கின் எண்ணெய் சேர்த்து*
*திறமான அடுப்பதிலே தானும் வைத்து*
*வார்த்ததிலே மெழுகுபத மாகும் போது*
*மைந்தனே கணபதிக்குப் பூசை பண்ணு*
*கோர்த்ததிலே குருவினுட பதத்தைப் போற்றி*
*குணமான எண்ணெயைத்தா னிறுத்துக் கொள்ளு*
*பார்த்ததிலே நித்த நித்தம் காசிடைதா னுண்ண*
*பறக்குமடா கணைதானுங் கண்டு கொள்ளே!*

*கொள்ளவே கணையாறு மெங்கே போச்சு*
*கூடுகின்ற மாந்தமெங்கே வலிப்பு மெங்கே*
*மெள்ளவாய் னாத்தம் உஷ்ண மெங்கே*
*உள்ளிலே உணர்த்துகின்ற கிருமி யெங்கே*
*உபாயம்போல் வந்ததொரு பிணிதா னெங்கே*
.......................................................
*களங்கமெல்லாந் தீர்ந்துவிடும் கணையு மற்றும்*
*கனமான எண்ணெயத்தான் கண்ட வாறு!*

## 17. குழந்தைகளுக்குக் கழிச்சல் ஆவதற்கு அரைப்பு மெழுகு

திராட்சைப்பழம், கற்கண்டு, கடுகுரோகணி, சுத்தி செய்த வாளம் இவற்றை வகைக்கு 175 கி. சுக்கு, ஓமம், மிளகு இவற்றை வகைக்கு 4 கி., எடுத்து சுத்தி செய்து 70 கி. பசுநெய், 175 கி. புதுத்தேன். இவற்றைச் சிறிது சிறிதாக விட்டு சரக்குகளை 12 மணி நேரமரைத்து கல்சாடியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். குழந்தைகளுக்கு 2 கி., பெரியவர்களுக்கு 5 கி., அளவும் அரிசி அடையில் தடவிக்கொடுக்க கழிச்சலாகும். அதிகமானால் மோர் சாதம் சாப்பிடவும். மாலையில் வசம்புக் குடிநீர் கொடுக்கவும். இச்சாபத்தியம் காக்கவும்.

## 18. சுகபேதி மாத்திரை

தண்ணீரில் ஊறின கோதுமை, ரவை 45 கி., சுத்தி செய்த வாளம், பூரம், சுக்குத்தூள் வகைக்கு 9 கி. எடுத்து கல்வத்திட்டு 70 கி. பன்னீர் விட்டு அரைத்து 32 மி.கி. மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. குழந்தைகளுக்குத் தாய்ப்பாலிலும் பெரியவர்களுக்குச் சோம்பு, திராட்சை, சுக்கு, சேர்ந்த குடிநீரில் நோயாளியின் தன்மை அறிந்து இரண்டு அல்லது மூன்று மாத்திரை இழைத்துக் கொடுக்கவும். சுக பேதியாகும்.

## 19. இரவு கழிச்சல் ஆவதற்கு மாத்திரை

வாளம், பூரம், இரசபற்பம் இவற்றை வகைக்கு 9 கி. எடுக்க. இரச பற்பம் கிடைக்காவிட்டால் மருந்துக்கடையில் 'கால்மல்' கேட்டுப் பெறவும். இச்சரக்குகளைக் கல்வத்திட்டு ஒரு பிடி சாதம் போட்டரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. இரவு சாப்பிட்டு படுக்கும் முன் சிறிது சாதத்தில் மாத்திரையை உடலின் வன்மைக் கேற்ப 1 அல்லது 2 வைத்து விழுங்கி விடவும். மூன்றாவது சாமம் முதல் கழிச்சலாகும். உடலுக்கு அலுப்பு இருக்காது. காலையில் சூப்பு சாதம் சாப்பிடவும்.

## 20. நரித்தலை வாதத்துக்குப் பொட்டணம்

வீழித்தழை, ஆவாரந்தழை, பிண்ணாக்குத்தழை, வெள்ளை வெங்காயம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து துவைத்து

மூன்று பிடியாகப் பிடித்து வைக்க. தரையில் நாற்சதுரமாக மெழுகி அதில் பாக்கு, வெற்றிலை வகைக்கு மூன்று பணதெட்சணை வைத்து நடுவே மூன்று மண்ணுங் கூட்டி வைக்க. நடுவில் ஓடு வைத்து சிற்றாமணக்கெண்ணெய் ஊற்றி தூபத்துடன் தீயெரிக்க. மேற்சொன்ன மருந்தை இவ்வெண்ணெயில் நனைத்து வலியுள்ள இடத்தில் கட்டவும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்ய நரித்தலை வாதம் நீங்கும்.

## 21. வெப்ப நோய்களுக்கு ஏலாதிச் சூரணம்

ஏலம், சீரகம், சன்னலவங்கப்பட்டை, இலவங்கப்பட்டை, அதிமதுரம், நெல்லிவற்றல், இலவங்கம், சிறுநாகப்பூ, கறிவேப்பிலை ஈர்க்கு, சந்தனத்தூள், சடாமாஞ்சில், சோம்பு இவற்றை வகைக்கு 35 கி., கொத்துமல்லி 420 கி., கற்கண்டு 840 கி. எடுக்க. அனைத்துச் சரக்குகளையும் இடித்து முறைப்படி சூரணம் செய்து கற்கண்டுத் தூளையும் கலந்து புதிய கலசத்தில் வைத்துக் கொள்க. வேளைக்கு 8 கி. வீதம் இரண்டு வேளையும் உட்கொண்டால் அனைத்து வெப்ப நோய்கள், பித்தம், மூத்திரயெரிவு, கைகால் எரிவு ஆகியவை குணமாகும்.

## 22. வெப்ப நோய்களுக்குப் புளியாரையெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், கையாந்தகரைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, புளியாரை, வல்லாரை இவற்றின் சாறுகள் வகைக்கு 500 மி.லி. எடுத்து அனைத்தையும் சேர்த்துக்காய்ச்சி பக்குவத்துடன் வடித்துக்கொள்க. அதில் 2 கி. கோரோசினையைச் சூரணித்துப் போட்டு கலந்து தினமும் காலை, மாலை 12 கி. கொடுக்க மூலசூடு, உடலெரிவு, கண்சூடு, உடல்வெப்பம் ஆகிய வெப்பநோய்கள் குணமாகும்.

## 23. இரத்த பிரமியத்துக்கு மருந்து

வெள்ளைப் பூலாங்கொழுந்தை ஒரு பிடி எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்து வெல்லம் வேண்டிய அளவு போட்டுக் குடிக்கவும். உப்பு, புளிப்பைத் தவிர்க்கவும்.

### 24. பிரமேகம், சீழ்இரத்தம் விழ சாறு

விஷ்ணுமூலியின் சாற்றைப் பிழிந்து அதே அளவு எருமைத் தயிரினை வடிகட்டி கலந்து சாப்பிடவும். பிரமேகம், சீழ் இரத்தம் வடிதல் தீரும்.

### 25. பிடிப்புக்குக் கற்பூராதி எண்ணெய்

சங்கிலை, நுணாப்பட்டை, வெள்ளறுகு, சின்னியிலை வகைக்கு *200* மி.லி. விளக்கெண்ணெய் *800* மி.லி. எடுத்து கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சிக் கொள்க. வாளம், கற்பூரம் இவற்றை வகைக்கு *8* கி. எடுத்துச் சுத்தி செய்து பொடித்துப் போடுக. நோய், வயது இவற்றிற்கேற்ப அளவறிந்து கொடுக்க பிடிப்பு நீங்கும்.

### 26. கை, கால் பிடிப்புக்கு இலிங்க பற்பம்

பூரம் *4* கி., இலிங்கம் *8* கி. எடுத்துப் பொடி செய்து உப்பையும் பொடி செய்து உடன் போட்டுக் கொள்க. செங்கல் பொடி போட்டு நடுவில் பள்ளம் செய்து சரக்கினை வைத்து மேல் மூடி ஏழுமண் சீலை செய்து ஆறு மணி நேரம் எரிக்க மேல் சட்டியில் பதங்கமாகும். அதனை எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்க. *130* மி.கி. அளவு எடுத்து பனைவெல்லத்தில் பொதிந்து நாக்கு, பல்லில் படாமல் விழுங்க கை, கால் பிடிப்பு தீரும். இவ்வாறே மூன்று நாள் செய்யவும்.

### 27. அனைத்துத் தோசங்களுக்கும் நசியம்

சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, அதிமதுரம், நல்ல வெல்லம் இவற்றை அகத்தியிலை, எருக்கம் பழுப்பு இவற்றை வாட்டிப் பிழிந்த சாறு விட்டரைத்து மூக்கில் நசியமிட அனைத்துத் தோசங்களும் குணமாகும்.

### 28. அனைத்து நோய்களுக்கு நிலவாகைக் கற்பம்

நிலவாகை வேரை நிழலிலுலர்த்தி முறைப்படி சூரணம் செய்து கொள்க. அதனை மூவிரலளவு எடுத்துப் பசும்பாலில் கொள்ள வீரியமுண்டாம். தண்ணீரில் கலந்து கொடுக்க

வயிற்றிலுள்ள நஞ்சு நீங்கும். கண்நோய் தீரும். துளிசிச் சாற்றில் கொள்ள குளிர் வெதுப்பும் சூலையுந் தீரும். கொன்றைப் பட்டையில் கொடுக்க குட்டமும் வெந்நீரில் கொடுக்க இருமலும் போகும். 40 நாட்கள் பசுநெய்யில் கொள்ள நரை, திரை மாறும். தேனில் கொள்ள சிலேற்றுமம் போகும்.

## 29. பலபிணிகளுக்குக் கற்பூராதிச் சூரணம்

அரத்தை, கடுக்காய், கருங்குங்கிலியம், அத்தி திப்பிலி, வெண்காரம், கிராம்பு, குரோசாணி ஓமம், சிவதை, கற்பூரம், பச்சிலை, சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கம், செண்பகம், சாதிக்காய், அகில், சந்தனம், சாதிபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, வேம்பாடம் பட்டை, தேற்றான்விதை இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து முறைப்படி சூரணம் செய்து கொள்க.

அதனை அளவறிந்து தேனில் கொடுக்க சயநோய், உள்ளுருக்கி, பித்தம், பிரமேகம், பாண்டுநோய், இளைப்பு, வறட்சி, பலவகை வாந்தி, காமாலை, வாதசுரம், சுவாசம் குணமாகும்.

## 30. நோய்கள் பலவற்றிற்கு அக்கினி குமார செந்தூரம்

நாவி ஒரு பங்கு, மனோசிலை இரு பங்கு, இரதம் நாலு பங்கு, கெந்தகம் எட்டு பங்கு, அரப்பொடி 32 பங்கு எடுத்து இஞ்சிச் சாற்றிலரைத்து வழித்து வைத்துக் கொள்க. ஏரண்ட இலை மூன்றை வைத்து மடித்து அதனுள் இம் மருந்தை வைத்து எரிக்க செந்தூர மாகும். அதனை அளவறிந்து உட்கொள்ள சூலை, குன்மம், பித்தம், காமாலை, கிரந்தி, உந்திப்புண், கெர்ப்பவாய்வு, வயிற்றுவலி இவை தீரும்.

## 31. அனைத்து நோய்களுக்கும் இரச பற்பம்-1

ஒரு மண் அகலில் 35 கி. கெந்தகத்தைப் போட்டு மூன்று விறகு கொண்டு எரித்து கந்தகம் உருகி வரும் நேரத்தில் 35 கி. இரசத்தை விட்டு துளாவ இரசம் கந்தகத்துடன் கலந்து கருத்த தூளாயிருக்கும். பிறகு வேறொரு பாத்திரத்தில் பாதியளவு

செங்கல் பொடியைப் போட்டு அதன்மேல் கறியுப்பைக் கொட்டுக. அதன்மேல் இரச கெந்தியை வைத்து வேறொரு பாத்திரத்தால் மூடி பொருந்தும் வாயில் களிமண்ணைத் தடவி ஏழு சீலையை வலுவாய்ச் செய்து மூன்று விறகு கொண்டு 12 மணி நேரமெரிக்கவும். குளிர வைத்து மேற்சட்டியைப் பார்க்க இரச பற்பம் சேர்ந்திருக்கும். அதில் 260 மி.கி. எடுத்து தக்க அனுபானத்திலிட்டு கொடுக்க சுரம் 64, மாந்தம் 8, காசம் 8, சன்னி 13, கண்நோய்கள் 96, அதிசாரம் 6, மேகம் 20 ஆகிய நோய்கள் தீரும்.

### அனைத்து நோய்களுக்கும் இரச பற்பம்-2

அகலில் 35 கி. கெந்தகத்தைப் போட்டு மூன்று விறகால் எரித்து கெந்தகம் உருகும் நேரத்தில் 245 கி இரசம் விட்டு துளாவிக் கொண்டிருக்க இரசம் கந்தகத்துடன் கலந்து கருத்துத் தூளாகிவிடும். அதனை வேறொரு கலசத்தில் கொட்டி சிறு செருப்படையின் சாற்றினை 500 மி.லி. மேலூற்றி மேலே அகல் மூடி சீலை மண் செய்து உலர்த்திக் கொள்க. பெரிய மண் பாத்திரத்தில் பாதியளவுக்கு மணல் கொட்டி அதன் மேல் உப்பைத் தூள் செய்து 4 லி. அளவு கொட்டி சீலை செய்து குடுவையை வைத்து மறுபடி உப்பைக் கொட்டி இரண்டு விறகு கொண்டு எரிக்கவும். இரசம் பற்பமாகும். அதனை 62 மி.கி. அளவெடுத்து தேனில் அல்லது பனை வெல்லத்தில் கொடுக்கவும்.

## 32. அனைத்து நோய்களுக்கும் தங்க பற்பம்-1

தங்கத் தகடு 2 கி. எடுத்து வடிகட்டின உப்பிலாங் கொடிச் சாற்றினால் ஆறு மணி நேரமரைத்து வில்லை தட்டி காய வைத்துக்கொள்க. அதை ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து 30 வறட்டியில் புடம் போடவும். ஒரு முறையில் பற்பம் செம்மையாக ஆகவில்லையெனில் மறுமுறையும் மேற்சொன்னவாரே புடமிடவும். 16 மி.லி. - 32 மி.லி. அளவு உட்கொள்ள அண்டவாய்வு, மேகவாய்வு, பித்த வாய்வு, அனைத்து சன்னிகள், அனைத்துத் தோடங்கள், வலிப்பு, இசிவு, கிராணி, பெரும்பாடு, பிரமியம், பித்தவெட்டை ஆகிய நோய்கள் தீரும். பால், தயிர், நெய் அதிகமாகச் சேர்க்கவும்.

### அனைத்து நோய்களுக்கும் தங்க பற்பம்-2

தங்கத் தகட்டுக்குச் செம்மண்ணினால் லேபம் கொடுத்து கரி நெருப்பில் வைத்து சிவக்கக் காய்ச்சி பக்குவத்துடன் எடுத்துக் கொள்வது சுத்தி. இவ்வாறு சுத்தி செய்த தங்கத்தை மெல்லி யதாகத் தகடு தட்டி கத்தரித்துப் பொடியாக்கியது 35 கி. எடுக்க. 9 கி. பொன் நிமிளையை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து லேபம் கொடுத்து காய்ந்தபின் ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 1000 வறட்டியில் புடம் போட பற்பமாகும். அனைத்து நோய்களுக்கும் அளவறிந்து கொடுக்க குணமாகும்.

### 33. உடல் பலத்திற்குப் பார்லிக்கஞ்சி

உடலுக்கு அதிக பலம் வேண்டியிருந்தால் பார்லி அரிசியை முன்படியே மூன்று முறை காய்ச்சி கடைசியில் தண்ணீருக்குப் பதில் இறைச்சிச் சத்து அல்லது மாமிசத்துநீர் சேர்த்துக் காய்ச்சி அளவறிந்து உட்கொள்ளவும்.

மலத்தைக் கட்ட வேண்டியிருப்பின் பார்லியை வறுத்து வேகவைக்கும் தண்ணீரில் 9 கி. கசகசாவைப் பொட்டணமாய்க் கட்டிப் போட்டு வேக வைத்து அளவறிந்து கொடுக்கவும்.

மேற்குறிப்பிட்ட கஞ்சியைக் கொள்ள உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும். நரம்புகளிலுள்ள மாசுகள், மலச்சிக்கல், மலவறட்சி முதலியன நீங்கும். இரைப்பையிலுள்ள மாசினை நீக்கி சுத்தம் செய்யும். எவ்வகைப்பட்ட உடலினருக்கும் இக்கஞ்சி பொருந்தும். சுவையுள்ள இக்கஞ்சியைச் சீதள உடலினர் குல்கந்து சேர்த்து சாப்பிட வேண்டும்.

### 34. உடல் பலத்திற்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி

ஆட்டிறைச்சி 20 கி. எடுத்து மெலிதாகக் கொதிக்க வைத்துக் கொள்க. 1 லி. தண்ணீர் அதில் விட்டு 3, 4 வெண்டைக் காய்களைச் சிறு துண்டுகளாக அரிந்து போட்டு ஒரு மணி நேரம் அசையாது வைக்க. பின் சட்டியை மூடி சிறு தீயால் எரிக்க சுத்தமேற்படும். அதன் பிறகு மீண்டும் 2 மணி நேரம் சமமாக தீயிட்டெரித்து வடித்து உப்பிட்டுச் சாப்பிடவும். துர்பலம்

நீக்கி தேகத்திற்கு வன்மையையும் அழகையும், சூட்டையும் உண்டாக்கும்.

### 35. இரத்த விருத்திக்கு மாதுளம்பழச் சர்பத்

மாதுளம் பழச்சாற்றைத் தேவையான அளவு எடுத்து அவ்வெடைக்கு இரண்டு பங்கு சர்க்கரை கலந்து காய்ச்சி பாகு பதத்தில் இறக்கி வடித்து சிறிது பன்னீர் கூட்டி வைத்துக் கொள்ளவும். 10 - 20 கி. அளவுடன் தண்ணீர் கலந்து சாப்பிட சுரம், தாகம், உள்ளனல், மேகச்சூடு, நீங்கி இரத்தம் சுத்தியாகும்.

### 36. இரத்த விருத்திக்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி

கொழுப்பை நீக்கி சுத்தம் செய்த ஆட்டிறைச்சி 210 கி. எடுத்து கொத்திக்க வைத்து கொள்க. மெல்லிய சீலைத்துண்டின் மத்தியில், தோல் நீக்கி நறுக்கின இஞ்சி 50 கி. பச்சைக் கடலைப் பருப்பு 100 கி., பச்சை கொத்துமல்லித் தழை 12 கி. வைத்து பொட்டணமாகக் கட்டி வைத்துக் கொள்க. சட்டியில் 650 மி.லி. தண்ணீர் விட்டு இப்பொட்டணத்தைப் போட்டு அரை பங்காகக் காய்ச்சி பிறகு அதனை எடுத்து விடவேண்டும். கோதுமை நொய் 35 கி. குடிநீரில் போட்டு வேகவைத்துக் கொள்க. மற்றொரு பாத்திரத்தில் 50 கி. நெய் விட்டு 5 இலவங்கம், 1 கி. இலவங்கப்பட்டை இவற்றை வறுத்து ஏலக்காயை நறுக்கிப் போட்டு முன்கூறிய கஞ்சியை அதில் ஊற்றுக. ஆறியபின் அளவறிந்து கொடுக்க இரைப்பைக்குப் பலமும் அதிகமான செரிப்புத்தன்மையையும் இரத்த விருத்தியையும் உடற்குப் பலத்தையும் கொடுக்கும்.

### 37. உடல் பலத்துக்கு மாமிசத்தீநீர்

கொழுப்பு நீக்கிய இறைச்சி 700 கி. எடுத்து நல்ல தண்ணீர் 2.6 லி. விட்டு வாலையிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்க. அதனை நோயாளியின் தன்மை, நோயின் வன்மை, மென்மை அறிந்து கொடுக்க உடல்பலம், செரிப்புத் தன்மை, இரத்த சுத்தி இவற்றை உண்டாக்கும்.

### 38. உடல் பலத்திற்குப் பாதாம் பருப்புப் பாயாசம்

தோல், கசப்புள்ளவற்றை நீக்கிய வாதுமைப் பருப்பு 210 கி., வாசனையுள்ள பச்சரிசி 70 கி., கற்கண்டு 26 கி., எடுத்துக் கொள்க. அரிசியையும் வாதுமைப் பருப்பையும் தேவையான அளவு நீர்விட்டு அரைத்து மெல்லிய சீலையில் முடிந்து கொள்க. 700 மி.லி. தண்ணீர் விட்டு நன்றாகப் பிசைந்து காய்ச்சிக் கொள்க. அகப்பையில் துளாவிக் கொண்டேயிருந்து மூன்று கொதி வந்த பிறகு பாகாகச் செய்த கற்கண்டை அதில் சேர்த்து காய்ச்சவும். பாகுபதத்தில் இறக்கித் தேவையான அளவு கஸ்தூரி, பன்னீர் முதலியன சேர்த்து சிறு சூடாக, இருக்கும்போது சாப்பிட வேண்டும். தாது விருத்தியுண்டாகும். இருமல் தீரும்; உடல் சூடு தணிந்து இரத்த விருத்தியுண்டாகி வெளுப்பு மாறும்.

### 39. இரத்த விருத்திக்குக் கோதுமைப் பாயாசம்

தோல், உமி நீக்கிய 12 கி. கோதுமையை மூன்றுநாள் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து வடிகட்டிய பால் 400 மி.லி. பசுவின் பால் 105 கி., 12 கி. பாதாம் பருப்பை அரைத்துத் துணியில் முடிந்து வடிகட்டிய பால் 400 மி.லி. ஆகியவற்றை ஒன்று சேர்த்து காய்ச்சுக. . 700 கி. கற்கண்டை வேறாகப் பாகு காய்ச்சிக் கொள்க. பால் மூன்று கொதி வந்தவுடன் கற்கண்டைச் சேர்த்து பாகுபதத்தில் இறக்கி கஸ்தூரி, பன்னீர் முதலியவற்றைச் சேர்த்து பதத்துடன் உபயோகிக்க வேண்டும். இதனை அளவறிந்து கொள்ள மார்புக்கு பலமும் இரத்த விருத்தியும் விந்து பெருக்கமும் உண்டாகி உடல் தழைக்கும்.

### 40. பால் பாயாசம்

4 லி. பசும் பாலில் இரத்த விருத்திக்கு கோதுமையை மூன்று நாள் ஊற வைத்துப் பிழிந்து பால் எடுக்க உலர்த்திய நிஷாஸ்தா 24 கி., கற்கண்டு 700 கி. பாதாம் பருப்பைப் பிழிந்து வடிகட்டிய பால் 400 மி.லி. எடுத்துக்கொள்க. பாதாம் பால், பசும்பாலைச் சேர்த்துக் காய்ச்சுக. நிஷாஸ்தாவைப் பொடி செய்து நெய்யில் வறுத்து மேற்படி பாலிலிட்டு அகப்பையினால் துளாவிக் கொண்டே காய்ச்சுக. மூன்று கொதி வந்தவுடன் வேறாகக்

காய்ச்சிய கற்கண்டுப் பாகைக் கலந்து பாகு பதத்தில் இறக்கி சிறிது கஸ்தூரியைச் சேர்த்துச் சாப்பிடவும். இதனால் உடல் வன்மை பெறும். இரத்த விருத்தியும் தாது விருத்தியுமுண்டாகும்.

### 41. முலைக்குத்துக்கு எண்ணெய்

குடசப்பாலை, நாயுருவி இவற்றின் இலைகளை நல்லெண்ணெயில் போட்டு கொதிக்க வைத்துக் கொள்க. அதனைப் பக்குவத்துடன் முலையில் பூச முலைக்குத்து நீங்கும்.

### 42. பால் சுரக்க மருந்துகள்

1. குட்டித்தக்காளி வேர், கீழாநெல்லி வேர் இவற்றைச் சம அளவெடுத்து எருமைப்பாலில் அரைத்துக் குடிக்க பால் சுரக்கும்.

2. பாதிரி வேரைப் பசும்பாலில் அரைத்துக் கொடுக்க பால் சுரக்கும்.

3. திப்பிலியை முறைப்படி சூரணம் செய்து தேவையான அளவு பசும்பாலில் கலந்து கொடுக்க பால் சுரக்கும்.

4. அம்மான் பச்சரிசியை முறைப்படி சூரணம் செய்து தேவையான அளவு பசும்பாலில் கொடுக்க பால் சுரக்கும்.

5. கச்ச கருவாட்டுத் தண்ணீர் அளவறிந்து குடிக்க பால் சுரக்கும்.

பொழுது விடிவதற்கு முன் வாய் பேசாது மாங்கொழுந்தை இரண்டு கையிலும் பிரித்துக் கொள்க. திரும்பிப் பார்க்காது இடது கை இலையை எரிந்து விட்டு வாய் பேசாது வலதுகை இலையை அம்மியில் வைத்து அரைத்து முலையில் பூச பால் சுரக்கும். மருந்து காய்ந்தவுடன் மறுபடி பூசவும். மூன்று நாட்கள் ஆறு பொழுது பூசவும். தினமும் பூச வேண்டும்.

### 43. சூதகவலிகளுக்கு விழுதியெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், பசுநெய், விழுதிச்சாறு இவற்றை வகைக்கு 2 லி. சேர்த்து கலந்து கொள்க. சுக்கு, மிளகு, திப்பிலி,

வசம்பு, வெங்காயம், கோட்டம், இலவங்கம், ஏலம் இவற்றை வகைக்கு 9 கி. எடுத்துப் பசும்பாலில் அரைத்து மேற்சொன்ன திரவத்தில் கலந்து காய்ச்சி எண்ணெய் பதத்தில் வடித்துக் கொள்க. காலையில் 50 மி.லி.யாக மூன்று நாட்களுக்கு உட்கொள்ள கர்ப்பவாய்வு, சூதகவலி, கர்ப்பத்திலுண்டாகும் புழுக்கள், கர்ப்பசூலை முதலிய அனைத்து கர்ப்பநோய்களும் இசிவும் குணமாகும். கர்ப்பமுமுண்டாகும்.

### 44. புழுவெட்டுக்குக் கலிக்கம்

சீனக்காரம், மயில்துத்தம், கடல்நுரை இவற்றைச் சமமாய் எடுத்து முறைப்படி சுத்தி செய்து பசு வெண்ணெயில் போட்டெடுத்துக் கொள்க. பால் சங்கை அதிலிழைத்து ஓரிருதுளிகள் கண்ணிலிட புழுவெட்டு தீரும்.

### 45. *விரைவாதத்துக்கு அரைப்பு மெழுகு

மிளகு, பூரம், வகைக்கு 5 கி., இலிங்கம் $1\frac{1}{4}$ கி. எடுத்து தேன் விட்டரைத்து மெழுகு பதமாகச் செய்து கொள்க. அதனைத் தூதளங்காய் போலுருட்டி வைத்துக் கொண்டு ஐந்து நாட்கள் இரு நேரமும் கொடுக்க விரைவாதம், குடைச்சல் தீரும். உப்பு, புளி, புகை தவிர்க்கவும்.

---

* *நீங்குநன் மிளகு வகையோ*
*ஓங்கு பூரமுமொன்று கழஞ்சிடை*
*வாங்கு லிங்கம் வகையது கூலதாய்*
*ஆங்குதேன் விட்டரை மெழுகாமே!*

*ஆடுந் தூதளங்காய் போலுருட்டிடு*
*தேடு மைந்து தினமிரு நேரமும்*
*வாடு முன் விரைவாதக் குடைச்சலும்*
*ஓடும் உப்பு புளி புகை தள்ளிடே!*

# பின்னிணைப்பு

## பொருளடக்கம் - அகர முதலி


| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | அட்டகுன்மத்திற்கு எண்ணெய் | 23 |
| 2. | அண்டவாதத்திற்கு எண்ணெய் | 22 |
| 3. | அத்தி சுரத்திற்கு மருந்து | 49 |
| 4. | அதிசாரக் கிராணிக்கு மாத்திரை | 44 |
| 5. | அரிதார பற்பம் | 1 |
| 6. | அரையாப்புக் கட்டிக்குக் கட்டு | 31 |
| 7. | அரையாப்புக் கட்டிக்குச் சீலை | 33 |
| 8. | அரையாப்புக் கட்டிக்குப் பற்று | 32 |
| 9. | அரையாப்புக்குப் பற்று | 32 |
| 10. | அரையாப்புக்கு மாத்திரை | 31 |
| 11. | அனைத்துச் சுரத்திற்குக் கத்தூரி மாத்திரை | 47 |
| 12. | அனைத்துச் சுரத்திற்கும் இராமபாணம் | 47 |
| 13. | அனைத்துச் சுரத்திற்கும் மாத்திரை | 46 |
| 14. | அனைத்துத் தோசங்களுக்கும் நசியம் | 70 |
| 15. | அனைத்து நோய்களுக்கும் இரச பற்பம் | 71 |
| 16. | அனைத்து நோய்களுக்கு தங்க பற்பம் | 72 |
| 17. | அனைத்து நோய்களுக்கு நிலவாகைக் கற்பம் | 70 |
| 18. | அனைத்து மேகத்துக்கு கல்யாண பூசணி இளகம் | 59 |
| 19. | ஆசனப் பவுத்திரத்துக்கு உட்களி | 45 |
| 20. | இந்திரியம் கட்ட மருந்து | 33 |
| 21. | இரணத்திற்குக் களிம்பு | 60 |

| | | |
|---|---|---|
| 22. | இரணத்திற்கு மருந்துச் சீலை | 60 |
| 23. | இரத்தக் கடுப்புக்குச் சூரணம் | 27 |
| 24. | இரத்தக் கழிச்சலுக்கு அன்னப் பொடி | 26 |
| 25. | இரத்த பிரமியத்துக்கு மருந்து | 69 |
| 26. | இரத்த விருத்திக்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி | 74 |
| 27. | இரத்த விருத்திக்குக் கோதுமைப் பாயாசம் | 75 |
| 28. | இரத்த விருத்திக்கு மாதுளம்பழ சர்பத் | 74 |
| 29. | இரத்த வெள்ளைக்கு எண்ணெய் | 41 |
| 30. | இரவு கழிச்சல் ஆவதற்கு மாத்திரை | 68 |
| 31. | இருமலுக்குக் குடிநீர் | 15 |
| 32. | இளைப்பு இருமலுக்குச் சாறு | 15 |
| 33. | உடல் பலத்திற்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி | 73 |
| 34. | உடல் பலத்திற்குப் பார்லிக் கஞ்சி | 73 |
| 35. | உடல் பலத்திற்குப் பாதாம் பருப்புப் பாயாசம் | 75 |
| 36. | உடல் பலத்திற்கு மாமிசத்தீநீர் | 74 |
| 37. | உள் காய்ச்சலுக்கு மருந்து | 50 |
| 38. | உள் சுரத்திற்கு எண்ணெய் | 50 |
| 39. | உள் மூலத்திற்குப் புகை | 45 |
| 40. | உள் மூலத்திற்கு மாத்திரை | 44 |
| 41. | உள் மூலத்திற்கு மருந்து | 45 |
| 42. | உறுப்புத் தள்ளினதுக்குக் கற்கம் | 45 |
| 43. | ஊறல் குடிநீர் | 28 |
| 44. | ஒற்றைத் தலைவலிக்கு எண்ணெய் | 4 |
| 45. | ஒற்றைத் தலைவலிக்கு நசியம் | 4 |
| 46. | ஒற்றைத் தலைவலிக்குப் புகை | 4 |

| | | |
|---|---|---|
| 47. | எண்ணெய் | 8 |
| 48. | எலிக்கடிக்கு மருந்து | 62 |
| 49. | எலும்புருக்கிக்கு இளகம் | 16 |
| 50. | கண்டமாலைக்கு நெய் | 13 |
| 51. | கண்ணில் நீர் வடிதலுக்குப் பூச்சு | 6 |
| 52. | கண்வலிக்குக் கலிக்கம் | 7 |
| 53. | கண் வலிக்குப் பூச்சு | 6 |
| 54. | கணைக்கு எண்ணெய் | 66 |
| 55. | கபத்துக்குத் துருசு பற்பம் | 19 |
| 56. | கபநோய்களுக்குச் சிருங்கி பற்பம் | 15 |
| 57. | கபாலக் கரப்பானுக்கு எண்ணெய் | 1 |
| 58. | கபாலக்குத்துக்கு தலை முழுக்கெண்ணெய் | 1 |
| 59. | கபால சன்னிக்குத் திரி (புகை) | 2 |
| 60. | கபால சூலைக்கு எண்ணெய் | 3 |
| 61. | கபால வலிக்கு எண்ணெய் | 2 |
| 62. | கல்விழ மருந்து | 39 |
| 63. | கழிச்சல்களுக்குக் கருவேப்பிலை இளகம் | 24 |
| 64. | கழிச்சலுக்குக் களி | 26 |
| 65. | கழிச்சலுக்குக் கற்கம் | 25 |
| 66. | கழிச்சலுக்குச் சாறு | 28 |
| 67. | கழிச்சலுக்குச் சூரணம் | 26 |
| 68. | காசத்திற்கு அரிதார பற்பம் | 18 |
| 69. | காசத்திற்குச் சங்கு பற்பம் | 18 |
| 70. | காசத்திற்குத் தாளக பற்பம் | 17, 19 |
| 71. | காசத்திற்கு மருந்து | 18 |

| | | |
|---|---|---|
| 72. | காசமிருமலுக்கு அடை | 16 |
| 73. | காட்டுப் பூனைக் கடிக்கு மருந்து | 62 |
| 74. | காது நோய்களுக்கு எண்ணெய் | 7 |
| 75. | காது மந்தத்திற்குச் சொட்டு மருந்து | 7 |
| 76. | காமாலைக்குக் கற்கம் | 29 |
| 77. | காமாலைக்குக் குடிநீர் | 29 |
| 78. | காமாலைக்குச் சூரணம் | 30 |
| 79. | கிரந்திக்கு எண்ணெய் | 30 |
| 80. | கிரந்திக்குப் புகை | 31 |
| 81. | கிரந்திக்கு மாத்திரை | 31 |
| 82. | கிரந்தி சூலைக்குக் காந்த பற்பம் | 30 |
| 83. | கிரந்தி புண்ணுக்கு மாத்திரை | 31 |
| 84. | குட்ட த்திற்கு (திரி) புகை | 31 |
| 85. | குழந்தைகள் கழிச்சலுக்குக் குடிநீர் | 25 |
| 86. | குழந்தைகளுக்குக் கழிச்சல் ஆவதற்கு அரைப்பு மெழுகு | 68 |
| 87. | குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை | 24 |
| 88. | குளிர்ச்சிக்கான எண்ணெய் | 65 |
| 89. | குளிர்ச்சி எண்ணெய் | 66 |
| 90. | குளிக்கும் நீர் | 65 |
| 91. | குளிர் இல்லாத வறட்டுக் காய்ச்சலுக்குக் குடிநீர் | 49 |
| 92. | குன்மத்திற்குக் குடிநீர் | 23 |
| 93. | குன்மத்துக்கு அரைப்பு மெழுகு | 23 |
| 94. | கை கால் ஊறலுக்கும் எண்ணெய் | 58 |
| 95. | கை, கால் பிடிப்புக்கு இலிங்க பற்பம் | 70 |
| 96. | கொறுக்குப் புண்ணுக்குச் சீலை | 60 |

97. கோழை இருமலுக்கு மருந்து 15
98. சகல வாயுவிற்கு அட்ட இளகம் 21
99. சயத்திற்குத் தாளக பற்பம் 18
100. சய நோய்களுக்குத் தங்க பற்பம் 19
101. சர்வாங்க மேக சூலை உட்களி 53
102. சலக்கழிச்சலுக்கு மருந்து 28
103. சன்னிக்கு ஆனந்த பயிரவ மாத்திரை 51
104. சன்னிக்கு கரு வங்க பற்பம் 52
105. சன்னிக்குச் சுரசம் 51
106. சன்னிக்குத் தங்க ரேக்கு மாத்திரை 52
107. சன்னிக்குப் புகை 53
108. சன்னிக்குப் பூபதிக் குளிகை 51
109. சன்னிக்கு வயிரவ மாத்திரை 52
110. சன்னி வாதத்துக்கு ஒற்றடம் 52
111. சன்னி வாதத்துக்குப் பொட்டணம் 53
112. சிங்க நோய்க்கு எண்ணெய் 10
113. சிரங்குக்கு நிலாவாரை நெய் 54
114. சிரங்குக்குப் பூச்சு 59
115. சிலேத்தும வெள்ளைக்குப் பற்பம் 42
116. சிறுநீர் அடிக்கடி கழிவது நிற்க சூரணம் 38
117. சீத சுரத்திற்குக் கற்கம் 49
118. சீழ் இரத்தம் விழ சாறு 70
119. சுகபேதி மாத்திரை 68
120. சுரங்களுக்கு அர்த்தநாரீசுரன் மாத்திரை 47
121. சுரங்களுக்கு இலிங்க செந்தூரம் 48

122. சுரத்திற்கு கருவங்க பற்பம் 52

123. சுரத்திற்குக் குடிநீர் 46

124. சுரத்திற்குத் தங்கரேக்கு மாத்திரை 52

125. சுரத்திற்கு வயிரவ மாத்திரை 52

126. சூட்டுக்கு எண்ணெய் 64

127. சூதக வலிகளுக்கு விழுதி எண்ணெய் 76

128. சூலைக்குப் புகை 31

129. செய்யான் கடிக்கு மருந்து 62

130. சோகைக்குக் குடிநீர் 29

131. சோகைக்குச் சூரணம் 30

132. தந்த வாய்விற்கு வேது (பல்வலி) 12

133. தலை நோய்களுக்கு அரிதார பற்பம் - 1 1

134. தலைவலிக்கு எண்ணெய் 4

135. தலைவலிக்கு நாசிகாபரணம் 4

136. தாக வாந்திக்குக் குடிநீர் 14

137. தாது விருத்திக்கு அரைப்பு மெழுகு 35

138. தாது விருத்திக்கு இலேபன தம்பன இளகம் 35

139. தாது விருத்திக்குக் கற்கம் 33

140. தாது விருத்திக்குச் சிட்டுக் குருவி இளகம் 34

141. தாது விருத்திக்குச் சூரணம் 34

142. தாது விருத்திக்கு மதன குடோரி இளகம் 34

143. தாது விருத்திக்கு முத்து பற்பம் 35

144. தாது விருத்திக்குப் பிட்டு 34

145. திசை (தச) வாய்வுக்கு எண்ணெய் 23

146. தினவுக்கு நிலாவாரை நெய் 54

| | | |
|---|---|---|
| 147. | தோல் நோய்களுக்குக் கால பயிரவ எண்ணெய் | 61 |
| 148. | தோல் நோய்களுக்கு வல்லாதி இளகம் | 61 |
| 149. | நசியம் | 9 |
| 150. | நரம்புச் சிலந்திக்குச் சாறு | 61 |
| 151. | நரித்தலை வாதத்துக்குப் பொட்டணம் | 68 |
| 152. | நாசிகாபரணம் | 9 |
| 153. | நாட்பட்ட வெள்ளைக்குக் கற்கம் | 39 |
| 154. | நாக்குப்புற்றுக்கு எண்ணெய் | 10 |
| 155. | நான்காம் முறைக் காய்ச்சலுக்குக் கற்கம் | 49 |
| 156. | நான்காம் முறைக் காய்ச்சலுக்குச் சாறு | 49 |
| 157. | நான்காம் முறைக் காய்ச்சலுக்கு மருந்து | 50 |
| 158. | நீர்க்கட்டுக்குக் கற்கம் | 36 |
| 159. | நீர்க்கட்டுக்குச் சூரணம் | 36 |
| 160. | நீர்க்கட்டுக்குப் பற்பம் | 37 |
| 161. | நீர்ச்சுருக்கிற்கு லேகியம் | 37 |
| 162. | நீரடைப்புக்குச்சாறு | 36 |
| 163. | நீரிழிவிற்கு கற்கம் | 37 |
| 164. | நீரிழிவுக்கு வங்க செந்தூரம் | 38 |
| 165. | நெஞ்சு வலிக்குக் குடிநீர் | 14 |
| 166. | நேத்திர வாய்வுக்குக் களிம்பு | 6 |
| 167. | நேத்திர வாய்வுக்கு எண்ணெய் | 6 |
| 168. | நோய்கள் பலவற்றிற்கு அக்கினி குமாரன் செந்தூரம் | 71 |
| 169. | பசியெடுக்க சூரணம் | 21 |
| 170. | பயித்திய (பித்த) சுரத்திற்குக் குடிநீர் | 50 |
| 171. | பல்கடுப்புக்குச் சூரணம் | 10 |

| | | |
|---|---|---|
| 172. | பல்கடுப்புக்குப் பொடி | 10 |
| 173. | பல்கடுப்புக்கு மருந்து | 10 |
| 174. | பல்சூலைக்கு எண்ணெய் | 10 |
| 175. | பல்லரணைக்கு எண்ணெய் | 10 |
| 176. | பல்வலிக்குக் கொப்பளிக்கும் நீர் | 11 |
| 177. | பல்வாதத்திற்குக் கொப்பளிக்கும் நீர் | 11 |
| 178. | பல் வாய்விற்கு மருந்து | 11 |
| 179. | பல்வலி வாய்விற்கு வேது | 12 |
| 180. | பல பிணிகளுக்குக் கற்பூராதிச் சூரணம் | 71 |
| 181. | பவுத்திரத்துக்கு எண்ணெய் | 46 |
| 182. | பால் சுரக்க மருந்துகள் | 76 |
| 183. | பால் பாயாசம் | 75 |
| 184. | பிடிப்புக்குக் கற்பூராதி எண்ணெய் | 70 |
| 185. | பித்தத்திற்கு இஞ்சி சர்பத் | 63 |
| 186. | பித்தத்திற்குக் கீழாநெல்லி எண்ணெய் | 63 |
| 187. | பித்தத்திற்கு நாரத்தம்பழ சர்பத் | 63 |
| 188. | பித்தத்திற்கு மருந்து | 49 |
| 189. | பித்த சூட்டுக்கு எண்ணெய் | 64 |
| 190. | பிரமேகத்திற்கு இளகம் | 16 |
| 191. | பிரமேகத்திற்கு சாறு | 70 |
| 192. | பீனசத்தின் குறிகுணம் | 8 |
| 193. | புகை | 8 |
| 194. | புண்ணுக்குக் கட்டு | 59 |
| 195. | புண்ணுக்கு நசியம் | 60 |
| 196. | புழு வெட்டுக்குக் கலிக்கம் | 77 |

| | | |
|---|---|---|
| 197. | புற மூலத்துக்கு மருந்து | 45 |
| 198. | பூப்படையாதவர்களுக்குச் சாறு | 63 |
| 199. | பொன்னாங்காணித் தைலம் | 5 |
| 200. | மகோதரத்திற்குச் சாரக்கட்டு | 23 |
| 201. | மகோதரத்துக்குச் செந்தூரம் | 22 |
| 202. | மஞ்சள் காமாலைக்கு எண்ணெய் | 30 |
| 203. | மஞ்சள் வெள்ளை (மேகம்)-க்கு மருந்து | 57 |
| 204. | மண்டை சூலைக்கு எண்ணெய் | 3 |
| 205. | மந்தார காசத்திற்கு இளகம் | 17 |
| 206. | மலசலக்கட்டுக்குப் பற்பம் | 36 |
| 207. | மலட்டுப்புழு விழுவதற்குக் கற்கம் | 28 |
| 208. | மலட்டுப்புழு விழுவதற்குச் சாறு | 28 |
| 209. | மலட்டுப்புழு விழுவதற்குச் சூரணம் | 29 |
| 210. | முகத்தில் வரும் வங்குக்குப் பூச்சு | 5 |
| 211. | முலைக்குத்துக்கு எண்ணெய் | 76 |
| 212. | மூலத்திற்குக் கருணைக் கிழங்கு மாத்திரை | 44 |
| 213. | மூலத்திற்குப் பொன்னாங்காணி நெய் | 43 |
| 214. | மூலத்துக்குக் கற்கம் | 42 |
| 215. | மூலத்துக்குச் சூரணம் | 43 |
| 216. | மூலத்துக்குப் பிட்டு | 43 |
| 217. | மூல வாய்வுக்கு வெண்ணெய் | 43 |
| 218. | மேகத்திற்கு எண்ணெய் | 54 |
| 219. | மேகத்துக்குக் கற்கம் | 53 |
| 220. | மேகத்துக்குக் குழம்பு | 57 |
| 221. | மேகத்துக்குச் சுடர்த் தைலம் | 56 |

222. மேகத்துக்குத் தாமிர பற்பம் 58

223. மேகத்திற்கு நிலாவாரை நெய் 54

224. மேகத்திற்கு நெய் 54

225. மேகத்துக்கு மருந்து (உரை மோர்) 58

226. மேகம், கரப்பான் கண்ணோய்களுக்கு மருந்து 56

227. மேகவெட்டை -21-க்கு எண்ணெய் 58

228. மேல் சுவாசத்துக்குக் கற்கம் 14

229. மேல் சுவாசத்துக்குச் சூரணம் 14

230. வயிற்றில் இறந்த குழந்தை வெளிவர எண்ணெய் 65

231. வயிற்றில் இறந்த பிள்ளை வெளிவர கற்கம் 64

232. வயிற்றுக் கடுப்புக்குக் கருவேப்பிலை இளகம் 22

233. வயிற்றுப் பொருமலுக்கு ஏலாதிச் சூரணம் 21

234. வயிற்று வலிக்குக் கற்கம் 20

235. வயிற்று வலிக்கு எண்ணெய் 22

236. வயிற்று வலிக்குச் சங்கு சுண்ணம் 20

237. வயிற்று வலிக்குச் சூரணம் 20

238. வயிற்றெரிவுக்குச் சூரணம் 20

239. வாதகுடைச்சலுக்கு உட்களி 53

240. வாதங்களுக்கு நவச்சார பற்பம் 62

241. வாத பித்த சுரத்திற்குக் குடிநீர் 50

242. வாந்திக்குக் குடிநீர் 13

243. வாந்திக்குச் சூரணம் 12

244. வாந்திக்கு நாரத்தங்காய் சர்பத் 13

245. வாய்வலிக்குக் கொப்பளிக்கும் நீர் 9

246. வாய்வுகளுக்கு அட்ட இளகம் 21

| | | |
|---|---|---|
| *247.* | வாய்வு பிடிப்புக்கு மாத்திரை | *22* |
| *248.* | வாய் நீரூறலுக்குக் குடிநீர் | *9* |
| *249.* | விக்கலுக்குச் சூரணம் | *12* |
| *250.* | விஷத்துக்கு நசியம் | *63* |
| *251.* | விஷக்கடிக்கு அரிதார பற்பம் | *62* |
| *252.* | விந்து கட்டுக்குச் சூரணம் | *33* |
| *253.* | விரை வாதத்துக்கு அரைப்பு மெழுகு | *77* |
| *254.* | வெகு மூத்திரத்திற்கு மாத்திரை | *38* |
| *255.* | வெட்டிவேர் எண்ணெய் | *8* |
| *256.* | வெட்டைக்கு தைலம் | *41* |
| *257.* | வெடி சூலைக்கு (திரி) புகை | *31* |
| *258.* | வெப்ப நோய்களுக்கு ஏலாதி சூரணம் | *69* |
| *259.* | வெப்ப நோய்களுக்குப் புளியாரையெண்ணெய் | *69* |
| *260.* | வெள்ளைக்கு உருண்டை | *39* |
| *261.* | வெள்ளைக்குக் கற்கம் | *39* |
| *262.* | வெள்ளைக்குக் குடிநீர் | *39* |
| *263.* | வெள்ளைக்குச் சூரணம் | *40* |
| *264.* | வெள்ளைக்கு மருந்து | *42* |
| *265.* | வெள்ளைக்கு வெண்ணெய் | *40* |

## இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | குணபாடம் - மூலிகை | 800 | 300.00 |
| 2. | குணபாடம் - தாது சீவ வகுப்பு | 800 | 250.00 |
| 3. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 1 | 700 | 200.00 |
| 4. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 2 | 200 | 25.00 |
| 5. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 1 | 500 | 200.00 |
| 6. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 2 | 800 | 250.00 |
| 7. | சிறப்பு மருத்துவம் | 500 | 220.00 |
| 8. | மகளிர் மருத்துவம் | 450 | 160.00 |
| 9. | நோயில்லா நெறி | 500 | 67.20 |
| 10. | சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும் | 800 | 250.00 |
| 11. | சித்த வைத்திய திரட்டு | 500 | 150.00 |
| 12. | சூல் மருத்துவம் | 450 | 150.00 |
| 13. | அறுவை மருத்துவம் | 500 | 150.00 |
| 14. | குழந்தை மருத்துவம் | 800 | 210.00 |
| 15. | உடற்கூறு | 1000 | 400.00 |
| 16. | நஞ்சு முறிவு நூல் | 300 | 100.00 |
| 17. | உடல் தத்துவம் | 450 | 75.15 |
| 18. | சித்த மருத்துவம் - பொது | 800 | 250.00 |
| 19. | யூகி வைத்திய சிந்தாமணி | 500 | 150.00 |
| 20. | தேரையர் யமக வெண்பா - பாகம் 1 | 300 | 80.00 |
| 21. | கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு | 500 | 29.00 |
| 22. | நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம் | 50 | 3.00 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 23. | பிணி உடல் தேர்வக ஆய்வு முறைகள் | 50 | 30.30 |
| 24. | தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் | 500 | அச்சில் |
| 25. | சித்த மருத்துவாங்கச் சுருக்கம் | 800 | 300.00 |
| | **Siddha Medical Books in English** | | |
| 1. | A Compendium of Siddha Doctrine | 500 | 200.00 |
| 2. | Introduction to Siddha Medicine | 50 | 11.35 |
| 3. | Simple Home Remedies | 50 | 2.70 |
| 4. | Hospital Siddha Pharmacopoeia in Indian Medicine | 250 | 39.00 |
| 5. | History of Siddha Medicine | 800 | 159.00 |
| 6. | Siddha Science of Longevity and Kalpa Medicine | 250 | 25.00 |
| 7. | Siddha Toxicology | 500 | 44.00 |
| 8. | Siddha Principles of Social & Preventive Medicine | 500 | 66.00 |
| 9. | Speciality Medicines and Treatment in Siddha | ... | அச்சில் |
| 10. | Therayar Maha Karisal | ... | அச்சில் |
| 11. | Treatment of Diseases in Siddha Part - I | ... | அச்சில் |
| 12. | Anuboga Vaidya Navaneetham | ... | அச்சில் |
| | **Siddha Medical Dictionary** | | |
| 1. | T.V. Sambasivam Pillai - Vol. I | 2500 | 623.00 |
| 2. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part I | 500 | 300.00 |
| 3. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part II | 450 | 200.00 |
| 4. | T.V. Sambasivam Pillai - Vol. III | 650 | 81.00 |
| 5. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part I | 800 | 156.00 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 6. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part II | 800 | 151.50 |
| 7. | T.V. Sambasivam Pillai - Vol. V | 1200 | 480.00 |
| | **ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)** | | |
| 1. | சரக சம்ஹிதை பாகம் - 1 | ... | அச்சில் |
| 2. | சரக சம்ஹிதை பாகம் - 2 | 1400 | 253.65 |
| 3. | சரக சம்ஹிதை பாகம் - 3 | 1700 | 380.00 |
| 4. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 1 | 1500 | 390.00 |
| 5. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 2 | 1400 | 272.00 |
| | **தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை** | | |
| 1. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1 | 500 | 78.25 |
| 2. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2 | 800 | 250.00 |
| 3. | பதார்த்த குண சிந்தாமணி | 700 | 150.00 |
| 4. | வர்மத் தொகுப்பு | 700 | 150.00 |
| 5. | அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி | 400 | 80.00 |
| 6. | அரிய சித்த மருத்துவ முறைகள் | ... | 60.00 |
| 7. | புலிப்பாணி வைத்தியம் | ... | 30.00 |
| 8. | குணபாடம் - ஜீவ வகுப்பு | ... | அச்சில் |
| 9. | சித்த மருந்தாக்கியல் விதிகளும் செயல்முறைகளும் | ... | அச்சில் |
| 10. | மருந்து செய்முறைகள் | ... | அச்சில் |
| 11. | அகத்தீசர் வைத்திய சிந்தாமணி | ... | அச்சில் |
| 12. | சரக்கு - சுத்தி செய்முறைகள் | ... | அச்சில் |
| 13. | நோயும் மருந்தும் | ... | 35.00 |
| 14. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 2 | ... | |
| 15. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 3 | ... | |

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ.) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது.

**தபால் கட்டணம்**

| | |
|---|---|
| முதல் 500 கிராமுக்குள் | - ரூ. 36.00 |
| 500 கிராமுக்கு மேல் ஒவ்வொரு 50 கிராமுக்கும் | - ரூ. 16.00 |

**பணம் அனுப்ப வேண்டிய முகவரி**

1. இயக்குநர்
   இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
   அரும்பாக்கம், சென்னை - 600 106.
   தொலைபேசி : 044 - 2621 4844 / 26216244 / 26281563

2. முதல்வர்
   அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி - 627 002.
   தொலைபேசி : 0462 - 2572736 / 2572737 / 2572738

